www.tamilarangam.net


சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


**இன்னுமுண்டு எங்கள் உயிர்!**

நாடிழந்தோம் அன்று; நமக்கென்று மீந்திருந்த
வீடிழந்தோம்; செய்யும் வினையிழந்தோம் - சோடிழந்தோம்
சொந்தமெலாம் இழந்தோம்; சோரவில்லை இழப்பதற்கு
இந்தவுயிர் உண்டு இனும்!

-ஈழமோகம்

இதழ் — 88 ஜன.11 ~ ஜன.24, 1996 விலை 7/-

"................................
...........................
எழுந்து தடி எடுத்தார்
கத்தி எடுத்தார்
யுத்தம் எனச் சென்றார்
யுகம் மாறும் என்றுரைத்தார்
எங்கும் புயலும்
எரிமலையும் பொங்கிவரச்
சென்றவரைக் காணேன்
செத்து மடிந்தாரோ?


வைத்ததுவோ ஐஞ்சு முட்டை
பொரித்ததுவோ நாலு குஞ்சு
நாலு குஞ்சும் போர் புரிய
நடந்து விட்டால் என்ன செய்வேன்
ஆனவரைக்கும்
அந்த மலைக் கப்பாலே
போனவரைக் காணேன்
போனவரைக் காண்கிலேன்
........................................""

-சண்முகம் சிவலிங்கம்
('நீர் வளையங்கள்' தொகுதியிலிருந்து)

# ரிவிரசவின் பின்...

# மாகாண சபைகள் கலைப்பு!

# திரிசங்கு சொர்க்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒட்டமாவடியில்
# கிராமசேவையாளர்களுக்கு கொண்டாட்டம்!

சூறாவளி, வெள்ளம், யுத்த அனர்த்தம் போன்றவற்றினால் பொதுமக்கள் பாதிப்படைந்தாலும் கிராம சேவையாளர்கள் இவை மூன்றினாலும் பூரிப்படைகின்றனர். ''இவை மூன்றில் ஒன்று இல்லாமல் நாங்கள் இல்லை'' என்ற தத்துவத்தையும் சில கிராம சேவையாளர்கள் இயற்றியுள்ளனர். அண்மையில் கோறளை மேற்கு ஒட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் வழங்கப்பட்ட 4000/= பணத்தில் 500/= வை சில கிராம சேவையாளர்கள் பொதுமக்களிடம் இருந்து பறித்துக் கொண்டனர். இவை முடிய இன்னுமொரு அதிர்ஸ்டம் இவர்களைக் காத்திருந்தது.

விசேட அடையாள அட்டை வழங்குவதற்காக பொது மக்கள் எல்லோரையும் புகைப்படம் எடுக்குமாறு இராணுவத்தினர் வேண்டிக் கொண்டனர். சில கிராமசேவையாளர்கள் உடனடியாக ஸ்ருடியோவுக்கு சென்று தங்கள் பகுதியில் இருந்து படம் எடுக்க வருகின்ற ஒவ்வொருவரிடமும் அறவிடப்படும் தொகையில் இருந்து 5/=வை தங்களுக்கு வழங்குமாறு வேண்டிக் கொண்டனர். இதற்கு வசதியாக சில கிராம சேவையாளர்களின் வீடுகளில் புகைப்படம் எடுப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் ஒட்டமாவடியில் உள்ள ''றீகல்'' ஸ்டுடியோவுக்கு வந்த கிராமசேவையாளர்கள் 10/= கேட்டு வாதாடியதாக சிலர் தெரிவிக்கின்றனர்.

மிகவும் ஒரு கஸ்டமான ஒரு பொருளாதார நிலையில் புகைப்படம் எடுக்கும் செலவான 30/= வில் 5/= வை சில கிராமசேவையாளருக்கு வரியாகவும் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் 3 கிராம சேவையாளர்கள் இதில் இருந்து விடுபட்டிருந்தனர். முஸ்லிம் அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய அவசர வேலை என்னவெனில் புலிகளிடமிருந்து எங்களைப் பாதுகாப்பதை விட கிராம சேவையாளர்களிடம் இருந்து எங்களைப் பாதுகாருங்கள்.

**ஒட்டமாவடி நெளபல்**

# நட்ட ஈடும் மீளப்பறிப்பு!

1987 - 1989 காலப்பகுதியில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு தனது விசாரணைகளை மந்த நிலையிலேயே மேற்கொள்வதாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. நாட்டில் பாதுகாப்புப் படையினரை உற்சாகப்படுத்தவும் அவர்கள் மீதான தண்டனைகளை தவிர்க்கவும் இவ்விசாரணைகளை அரசாங்கம் முடக்கி வைத்துள்ளதாக குற்றம் சாட்டுவோர் கூறுகின்றனர். இவ்விசாரணைகளின் முடிவு வெளி வந்தால் பல படை அதிகாரிகளையும், படையினரையும் தண்டனைக்குள்ளாக்க நேரிடும்.

எனவே விசாரணைகளைச் செய்வதில் பின்வாங்கிக் கொண்டே பதிலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கும் வேலைகளை துரிதப்படுத்தி இருந்தது. இப்போது அதற்கும் வேட்டு விழுந்தாகி விட்டது.

நட்ட ஈடு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தில் இருந்து சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 54 கோடி ரூபாவை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியிருந்தது. மிகுதி 76 கோடி ரூபா பணத்தை எஞ்சியவர்களுக்குக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இப்போது திடீரென பிரதேச செயலாளர்கள் கவனம் செலுத்துகிறார்கள் இல்லை போலி சாட்டுகள் கூறி அப்பணத்தை மீண்டும் திறைசேரியின் ஊடாக அரசாங்கம் மீளப்பெற்று விட்டதென தெரியவருகிறது.

## வெண்தாமரை இயக்கம்:
# அப்பம் தின்ற கதை!

குருநாகல் கொழும்பு வீதியில் ''நாங்கல்ல'' என்ற முஸ்லிம் கிராமம். அம் முஸ்லிம் கிராமத்திலுள்ள ஹோட்டலில் வெண் தாமரை இயக்க வான் ஒன்று வந்து நின்றது. அனைவரும் மதுபோதையில் இருந்தனர். சட்டத்தரணிகள் தொடக்கம் சாதாரணமானவர்கள் வரை அக்குழுவில் அடக்கம்.

வந்தவர்கள் அப்பம் உட்பட இன்னோரன்ன பல பொருட்களும் சாப்பிட்டனர். ஹோட்டலில் கும்மாளம். கும்மாளத்தின் ஊடாக தெரியவந்ததாவது, பொலநறுவை மாவட்டத்திலுள்ள எல்லைக்கிராமங்களில் பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு தெற்கில் இருந்து சேகரிக்கப்பட்ட நிவாரண, உதவிப்பொருட்களை கொடுத்து விட்டு வருவதாக; சர்வர் ''பில்லைக்'' கொண்டு வந்து வைத்தான்! கணக்கு அதிகமாக போடப்பட்டிருப்பதாகவும் தாங்கள் சாப்பிட்ட ஒவ்வொரு பொருட்களுக்கான விலைகளையும் கேட்டனர். சர்வர் சொல்லிக் கொண்டிருந்தான்!

80 அப்பங்களுக்கு கணக்கு போடப்பட்டிருப்பதாகவும் தாங்கள் 30 அப்பம் மட்டுமே திண்டதாகவும் வெண்தாமரை இயக்கத்தினர் வாதாடினர். சர்வர் தொடக்கம் அப்பம் போட்டவன் வரை ''ஐயா! நீங்கள் 80 அப்பம் திண்டீர்கள் நானே போட்டவன்; நானே கொண்டு வந்து வைத்தேன் என்றார்கள். வந்தவர்கள் கேட்டாதடில்லை. தூஷன வார்த்தைகளும் மதங்களைக் குறிக்கும் வார்த்தைகளும் பேசப்பட்டன.

முதலாளி பயந்து போய்விட்டார்! அப்பம் திண்ட விஷயத்தில் கூட; இவர்கள் சமாதானம் செய்யத் தயாரில்லை என்பதை உணர்ந்து கொண்ட முதலாளி பயந்து போய் 'இல்லை இல்லை! நீங்கள் 30 அப்பம் தான் திண்டீர்கள் அதற்குப் பணத்தைத் தாருங்கள்' என்றார்! சர்வரும் அப்பம் போட்டவரும் வாயடைத்து நின்றனர்.

பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தனர் ''தம்பிலா, மரக்கல மினியா'' வசைகள் தொடர்ந்தன. வெண்தாமரை இயக்கத்தின் உரிய கோட்பாடுகளுக்கு களங்கம் ஏற்படுத்தும் வசைகளும் கோஷங்களும் எழுப்பப்பட்டன. கடையின் முன்பிருந்த முஸ்லிம் இளைஞர்களுடன் கைகலப்பு தொடங்கியது. இருதரப்பாரும் கைகலப்பில் இறங்கினர். கடையில் சோடாப் போத்தல்கள் உடைந்தன; கண்ணாடிகள் தகர்ந்தன, போர்க்குணம் மேலோங்கி சமரசத்திற்கு இடமில்லாது போய்விட்டது!

''வரக்காப்பொல'' பொலிஸ் நிலையத்திற்குப் போய் வெண்தாமரை இயக்கம் முறையிட்டது! தங்களை அடித்து விட்டதாகவும் பையில் இருந்த பணம் உட்பட கைக்கடிகாரமும் கழுத்து தங்க மாலை போன்ற பொருட்களும் முஸ்லிம்களால் அபகரிக்கப்பட்டு விட்டதாக முறையிட்டனர். செல்வாக்குமிக்க ''வெண்தாமரை இயக்கம்'' என்ற நிலை காரணமாக பொலிஸ் உடனடி நடவடிக்கையில் இறங்கியது. 3 முஸ்லிம் இளைஞர்களை கைது செய்து விசாரணை நடாத்தி இப்போது அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆச்சரியப்படக்கூடிய விஷயம் என்னவெனில் 'அவர்கள் 30 அப்பம் திண்டதை ஏற்றுக் கொண்டார்கள் என்பதாகும்.

**அம்ரிதா**

# குரல் கொடுக்க யாருளர்?

அண்மைக்காலமாக மலையகத்தைச் சேர்ந்த பெண்கள் கொல்லப்பட்டும் வீண் சாவுக்குட்பட்டும் வருகிறார்கள். அப்புத்தளை கஹாகல்ல தோட்டத்தைச் சேர்ந்த லட்சுமி சுப்பிரமணியம் என்ற கர்ப்பிணிப்பெண் போதிய வைத்திய வசதியின்மையாலும், தோட்ட நிர்வாகத்தால் வாகன வசதி வழங்க மறுக்கப்பட்டமையாலும், அண்மையில் வீண் பலிக்குள்ளாகியுள்ளார்.

இதேபோன்று கலஹா தோட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணும் வீண்சாவுக்குள்ளாகியுள்ளார். இவரும் கர்ப்பிணிப்பெண் என்பதும் இவருக்கும் வாகன வசதிகிட்டாமையும் குறிப்பிடத்தக்கது. புசல்லாவ டன்கினன் தோட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண் தீப்பற்றிய நிலையில் உரிய மருத்துவ, வாகன வசதி இன்மையால் இறந்து போயுள்ளமையும் வெளிச்சத்துக்கு வராத செய்திகள்.

செல்வி என்ற பெண் வத்தளை கடற்கரையில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டமையும், இலட்சுமி என்ற வீட்டுப்பணிப்பெண் எஜமானியால் கொல்லப்பட்டமையும் என ''மலையகப் பெண்கள் சாவு'' தொடர்ச்சியாக இடம் பெற்று வருவது அதிர்ச்சி தருகின்ற செய்திகளாகும். அப்பாவிகளான தோட்டத் தொழிலாளர்கள் குறிப்பாக பெண்கள் இவ்வாறு வீண்பலியாவது மலையக மக்களிடையே ஓர் பீதியை ஏற்படுத்தி, அவர்களது இருப்பு பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் இனியும் தொடராதிருக்க யாராவது குரல் கொடுப்பார்களா?

# கட்டைபறிச்சானில் கொடும்பாவி!

இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றதை அடுத்து திருகோணமலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மீண்டும் பலப்படுத்தப்பட்டுள்ளது. டிசெ. 26ம் திகதி பகல் லிங்கநகர் எனும் இடத்தில் வைத்து குமார் ராஜ் என்ற இளைஞர் சுடப்பட்டார். எனினும் இவர் தப்பிவிட்டார். சூட்டுக்காயத்துடன் அல்லல்பட்டுக் கொண்டிருந்த இவரை ஊர்காவற் படையினர் மிருகத்தனமாகத் தாக்கியுள்ளமை கவலைக்குரிய சம்பவம். அதே நள்ளிரவு பிரதான வீதியில் வைத்து சிவசோதி ராஜேஸ் சுட்டுக் கொல்லப்பட்டார். துப்பாக்கி நபர்கள் கைது செய்யப்படவில்லை.

இதனையடுத்து தளர்வு நிலையிலிருந்து கண்காணித்தவர்கள் மீண்டும் உஷார் படுத்தப்பட்டுள்ளனர். திடீர் வீதிச் சோதனைகள் வீடு வீடாகத் தேடுதல், சுற்றி வளைப்புகள் எனக் கடுமைப்படுத்தப்பட்டுள்ளது. புத்தாண்டு தினத்தில் கூட நிலைமை இதுவாகவே இருந்தது.

கட்டைபறிச்சான் பகுதியில் இருவாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பிரதமர் நரசிம்மராவிவ் ஆகியோரின் கொடும்பாவிகள் தெருத் தெருவாக இழுக்கப்பட்டன என்று அங்கிருந்து வந்தோர் தெரிவிக்கினனறனர். ரிவிரச நடவடிக்கையின் எதிரொலியாக இது நடந்ததாக அவர்கள் தெரிவித்தனர்

**விவேகி**



யாழ்ப்பாண நகரி,
கழுகள் மொய்த்த பிணமாய்ச் சிதைந்த
என்னரும் தாயே,
ஆயிரம் ஆயிரம் வருடம் படர்ந்து
என்னையும் பூத்து
உலகெலாம் தொட்ட உன்
தொப்பூழ் கொடியிலும் வலியதோ
உன் மீது அன்னியர் ஊன்றிய கொடிகள்.

செண்பகப் பெருமாள், பறங்கித் தலைவன்
ஒல்லாந்தர், வெள்ளையர் என அணிவகுத்து
வந்தவர் சுவடுகள் எல்லாம் அழிய
வளர்ந்ததெம் சுவடுகள் வரலாறாக.

இன்று
குலைக்கப்பட்ட கூடாய் நீ சிதைய
லட்சம் லட்சமாய் தெருவில் இறங்கி
பாலுக்கழுத பிள்ளையின் வாயில்
குடையால் வழிந்த மழை நீரூட்டிய
வீரத்தாய்களின் நெஞ்சில் எழுந்த
நெருப்பின் முன்னே
நிலைக்குமோ உன்னைப்
பிணித்த சங்கிலிகள்

இக்கொடுமைகள் கண்டு தமிழ் நாடழுதது
இக் கொடுமைகள் கண்டு உலகமே அதிர்ந்தது.....
இக் கொடுமைகள் கண்டு
கொழும்பேன் மகிழ்ந்தது.......?
சொல்க கொழும்பே சொல்க கொழும்பே
நாம் யாருனக்கு
எமது துயரில் நீ ஏன் மகிழ்ந்தாய்?
சென்னையை விடவும் நீ ஏன் எமக்கு
தொலைத்துப் போனாய்
நியூயோர்க்கை விடவும் நீ ஏன் எமக்கு
எட்டியிருந்தாய்.

எதிரிகளல்ல
எமது ஊர்மண் மசூதிகள் முன்றலில்,
எல்லைப் புறத்து விகாரைகள் மருங்கில்,
இந்தியாவின் சிற்றூரொன்றில்
நாமே உன்னை வீழ்த்தினோ மம்மா
இது எப்பவோ முடிந்த காரிய மம்மா.

யாழ்ப்பாண நகரி
சாம்பரில் துடிக்கும் 'பீனிக்ஸ்' பறவையே
நமது கோணல்கள் யாவும் திருத்தி
தீயிலிருந்துன் சிறகுகள் விரிய
மனிதராய் மீண்டும் நிமிர்வோ மம்மா.

வ.ஐ.ச. ஜெயபாலன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் மீட்டெடுக்கவென சூளுரைத்து ஆட்சிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இவற்றின் மீதான அக்கறை வடமத்திய, சப்ரகமுவ மாகாணசபைகளை கலைத்ததுடன் மீண்டுமொரு முறை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. ஊழல், நிதிமோசடி, அதிகார துஷ்பிரயோகம் போன்ற காரணங்களைக் காட்டி ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் மேற்படி மாகாணசபையின் ஆளுநர்கள் 13வது திருத்தச் சட்டத்திற்கு பின்னர் பிரேமதாச அரசகாலத்தில் சேர்க்கப்பட்ட விசேட சரத்து ஒன்றின் அடிப்படையில் ஆளுநருக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி இம் மாகாண சபைகளைக் கலைத்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள ஐந்து மாகாண சபைகளில் இரண்டே இவையாகும். இவைதவிர, வடமேல் மாகாண சபையும் இதே குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி இருப்பதால் அதுவும் விரைவில் கலைக்கப்படலாம் என்று நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன.

மாகாணசபைகளை கலைக்கும் அதிகாரத்தின் காரணமாக இன்றைய ஜனாதிபதி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் மேல் மாகாண சபையை அன்று அதிகாரத்திலிருந்த ஜனாதிபதி கலைத்து விடுவாரோ என்ற அச்சம் பரவலாக இருந்தது. அன்றைய முதலமைச்சரான சந்திரிகாவின் வேண்டுகோளின் பேரில், அப்போது அவரது அமைச்சரவையில் இருந்த ஒரு அமைச்சரை பதவி நீக்கம் செய்தமை தொடர்பாக; அன்றைய மேல்மாகாண சபை ஆளுநர் சர்வானந்தா ஐ.தே.கவின் கடும் சீற்றத்துக்குள்ளானதுடன் அவர் மேல்மாகாண சபை ஆளுநர் பதவியிலிருந்தும் அகற்றப்பட்டார். பொதுஜன முன்னணியின் அதிகாரத்திலிருந்த மாகாணசபையான இந்த மேல் மாகாண சபையை கலைப்பதில் அன்றைய ஐ.தே.கவினர் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். ஆயினும் அன்றைய ஜனாதிபதி விஜேதுங்க அதை செய்யவில்லை. இது அவர்மீது ஐ.தே.க.கட்சியினர்க்கு பெரும் அதிருப்தியையும் தோற்றுவித்திருந்தது.

இன்று, எந்த மாகாண சபைகள் கலைக்கப்படுவது ஜனநாயக விரோதமான ஒரு செயல் என்று இன்றைய ஜனாதிபதி அன்று முழங்கி வந்தாரோ அதே ஜனாதிபதி இன்று மாகாண சபைகள் கலைக்கப்படுவதற்கு உத்தரவு வழங்கத் தொடங்கியுள்ளார். சந்திரிகா பண்டாரநாயக்கா மேல்மாகாண சபையில் முதலமைச்சராகிய முதலாவது கூட்டத் தொடரின் போது உரையாற்றுகையில் தெரிவித்த கருத்து ஒன்றை இங்கு நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

'கடந்த ஐந்தாண்டு காலமாக 13ம் திருத்தச் சட்டப் பிரகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் குறிப்பிட்டபடி வளர்த்தெடுக்கப்படாமலே போயிற்று. உண்மையில் நடந்தது என்னவென்றால், அதிகாரங்கள் பரவலாக்கப்படும் நடைமுறைக்கு நேரெதிராக அவை மேலும் மேலும் மத்திய அரசாங்கத்திடமே குவிக்கப்பட்டு வந்துள்ளன.'

இந்த அடிப்படையில் மந்திரி சபையை கட்டுப்படுத்தும் அதிகாரமும் மாகாணசபைகளை. கலைக்கும் அதிகாரமும், ஜனாதிபதியிடம் இருப்பதை விமர்சித்து வந்த சந்திரிகா அவர்கள் தாமே ஜனாதிபதி ஆகியவுடன் தான் முன்வைத்த கோரிக்கைகட்கு எதிராகத் தானே செயற்படும் ஒருவராக மாறிவிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணசபைகள் நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக முன்வைக்கப்பட்ட அதேவேளை, மாகாண சபைகள் முறைமையை நாடு முழுவதுக்குமான ஒரு முறையாக மாற்றியது 13வது திருத்தச்சட்டம். இந்திய -இலங்கை ஒப்பந்த அடிப்படையில் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தின் படி அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதாகவும் மாகாணங்களிடையே மாகாண ஆட்சி நடைபெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மாகாண அரசின் ஆயுளைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை மத்திய அரசு தனது கைகளில் வைத்துக் கொண்டதன் மூலம், இந்த ஆட்சிக்கு சுயாதீனமற்ற ஒரு நிலைமையே நிலவுகிறது.

ஊழல், நிதிமோசடி, அதிகார துஷ்பிரயோகம் போன்ற காரணங்களுக்காக மட்டுமல்ல, காரணம் சொல்லாமலே கூட ஆளுநர் ஒரு மாகாணசபையைக் கலைத்துவிடலாம். இயற்கை நீதியின் அடிப்படையில் (Natural Justice) தான் அவை கேள்விக் குள்ளாக்கப்படலாமே ஒழிய சட்டரீதியாக அல்ல. சட்டரீதியில் ஆளுநருக்கு அவர் தான் சரியெனக் கருதும்பட்சத்தில் இத்தகைய முடிவு ஒன்றை எடுக்கும் அதிகாரம் (Descretion) உண்டு. நடை முறையில் இவ்வாறான குற்றச் சாட்டுகட்காக ஒரு மாகாணசபையையே கலைப்பது என்பது உண்மையில், மாகாணசபையைக் கலைப்பதற்காக குற்றச்சாட்டுக்களை அடுக்குவது என்பதாகவே உள்ளது. உண்மையில் கலைக்கப்பட்ட வட மத்திய, சப்ரகமுவ மாகாணங்களின் முதலமைச்சர்களது ஊழல்களுக்காக மாகாண சபையையே கலைப்பதா அல்லது முதலமைச்சரை பதவி நீக்குவதா என்று முடிவு செய்யும் அதிகாரம் ஆளுநருக்கு இருந்த போதும் அவர் மாகாண சபையையே கலைத்து விட்டிருக்கிறார். தவிரவும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் வெறுமனே ஐ.தே.க. மாகாண சபைகள் மீது மட்டும்தான் சுமத்தப்பட்டுள்ளனவா? மற்றைய மாகாணசபைகளுக்கு இல்லையா? ஏன் மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க சகாக்களது ஊழல், நிதிமோசடி அதிகார துஷ்பிரயோகங்கள் பற்றி அரசுக்கு ஒன்றுமே தெரியாதா? அவற்றின் மீது மட்டும் நடவடிக்கை எடுப்பது அவசியம் என்று ஜனாதிபதிக்குப் 'படவில்லையா?



ஆக, இந்த கலைப்பு விகாரத்தின் பின்னணியில் இருப்பதெல்லாம் திட்டவட்டமான அரசியல் காரணங்கள் என்பது வெளிப்படை. ரிவிரச இராணுவ நடவடிக்கைகளின் பின், அதுவும் யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியை நாட்டியபின் அரசாங்கம் தனது செல்வாக்கு அதிகரித்துள்ளதா என்று பரீட்சித்துப் பார்க்கவே இந்த மாகாண சபைகளை கலைத்துள்ளது என்பது வெளிப்படை. ஐ.தே.க.ஆட்சியிலுள்ள மாகாணசபைகளைக் கலைத்துவிட்டால் அங்கே தேர்தல் ஒன்றை நடாத்தி வெற்றி பெறுகிறோமா என்று பார்க்கும் வாய்ப்பை, இருக்கும்நிலைமைகளில் எந்த இழப்பும் இல்லாமலேயே பெற்றுக் கொள்ளலாம் என்பதே இந்த நடவடிக்கைகளின் பின்னணி. இதற்கு வெறுமனே ஊழல் மோசடி பற்றிய காரணங்களை கூறுவதெல்லாம் வெறும் மோசடிகளே அன்றிவேறல்ல.

# நாய், வேஷம் போட்டாலும் குரைக்கத்தான் செய்யும்!

எவ்வாறாயினும், இந்த நிலைமைகள், இந்த அரசமைப்புக்குள் தவிர்க்கப்பட முடியாதவைதான். எப்போதெல்லாம் மத்திய அரசாங்கத்துக்கு மாற்றான கட்சியொன்று மாகாணசபைகளை கைப்பற்றுகிறதோ அப்போதெல்லாம் இத்தகைய பிரச்சினைகள் இடம் பெறவே செய்யும்! அது, மத்திய அரசாங்கத்தின் தலைமை ஐ.தே.கவிடம் இருந்தால் என்ன? பொ.ஐ.முயிடம் இருந்தால் என்ன? யாரிடம் இருந்தால் என்ன இதுதான் நிலைமை. இந்த இடத்தில் தான் மாகாண சபைகளது அதிகாரம் தொடர்பான அடிப்படையான பிரச்சினை எழுகிறது. நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கப்பட்ட இந்த மாகாண சபை நடைமுறையில் வெற்றியளிக்காமல் போனதற்கு பிரதான காரணமே தமிழ் மக்கள் மத்தியில் இந்தச் சந்தேகங்கள் இருந்ததுதான். மத்திய அரசாங்கம் நாட்டின் சிங்கள பெளத்த பேரினவாத அரசைப் பிரதிபலிக்கும் ஒரு அங்கமாக இருக்கும் போது, வடக்கு கிழக்கில் இதற்கு நேரெதிரான ஒரு உணர்வலையைப் பிரதிபலிக்கும் மாகாணசபை ஆட்சி நிலவுவது நடைமுறையில் ஒருபோதுமே சாத்தியமில்லை என்பதால் தான் இந்த மாகாணசபை தமிழ் மக்கள் மத்தியில் வெற்றி பெறவில்லை.

இந்த மாகாண சபையினால் உண்மையில் பயன்பெற்றவர்கள், ஆங்கிலப் பத்திரிகை ஒன்று சுட்டிக்காட்டியது போல பிராந்திய அரசியல்வாதிகளும் அதிகாரிகளுமே.



அவர்களது ஊழலுக்கும், அதிகாரத்துக்கும், நிதி மோசடிக்கும் இது வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதாவது உண்மையில் பரவலாக்கப்பட்டது மக்களது அதிகாரங்கள் அல்ல, அரசியல்வாதிகளதும் அதிகாரிகளதும் ஊழல்கள் தான்!.

மாகாண சபைகள் முறைமையின் கீழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளது அதிகாரத்தைத் தமது மக்களிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொண்ட ஆணைக்கமைய நடைமுறைப்படுத்தும் ஜனநாயக உரிமையை, இவ்வாறான போலியான காரணங்களுக்காக பறித்துவிடக்கூடிய இந்த அரசாங்கம் எப்படி இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் நடந்து கொள்ளும் என்று யாரும் சந்தேகப்படாமல் இருந்துவிட முடியாது.

ஏனென்றால், வடக்கு கிழக்குக்கு வெளியே உள்ள மாகாணசபைகள் அனைத்தும் சிங்கள மக்களை பெரும்பான்மையாக கொண்ட மாகாணசபைகளாக அமைவதால், அம்மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் இடையிலான முரண்பாடுகள் இனத்துவரீதியிலானவையாக எழுவதில்லை. மாறாக கட்சி நலன்களின் அடிப்படையிலேயே எழுகின்றன. ஆனால் வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்தின்படி அங்கு உருவாகும் அரசாங்கத்துக்கும் மத்திய அரசுக்குமிடையில் வெறும் கட்சி சார்ந்த முரண்பாடு மட்டுமல்ல, இனத்துவ ரீதியிலான முரண்பாடுகளும் இருக்கிறது. எனவே இத்தகைய சந்தேகங்கள் நியாயமானவையே.

அதிகாரப் பரவலாக்கம், இனப்பிரச்சினைக்கான சமஷ்டி முறையிலான தீர்வு என்பன பற்றிய இந்த அரசாங்கத்தின் முழக்கங்கள், பெறும் வாய்ச்சவால்களாகவே போகும் என்ற சந்தேகத்தை இந்தச் சம்பவங்கள் மேலும் வலுப்படுத்தியுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வெளியேறக் காரணமாக இருந்த ரிவிரச நடவடிக்கையின் பின்னான அரசின் போக்கும் இந்த மாகாணசபைக் கலைப்பு விவகாரமும் 1996 இல் தமிழ் மக்களது தலைவிதி எவ்வாறு அமையப்போகிறது என்பதற்கான ஒரு எச்சரிக்கை என்றே கொள்ள வேண்டும்.

அம்மையார் ஜனநாயகத்தை எப்போதோ மறந்துவிட்டார். சமாதானத்தையும் ரிவிரசவுக்கு பலியாக்கிவிட்டார்.

இனி அவரிடம் எஞ்சி இருப்பது அவரது அதிகாரம் மட்டுமே.

ஆறு ஆண்டுகட்கு கோலோச்சும் ஆணையை மக்களிடம் பெற்றுக் கொண்டுள்ளதாக மார்தட்டும் அவர் (Sunday times) அதைப் பெற்றுக் கொள்ள தான் கூறிய அனைத்து வாக்குறுதிகளையும் வசதியாக மறந்துவிட்டார்.

இனி, அதிகாரத்தை எப்படியெல்லாம் துஷ்பிரயோகம் செய்வது என்று பார்க்க வேண்டியதுதான் தேவை. அதை அவர் செய்யத் தொடங்கிவிட்டார் போலும்!

இலங்கை ஜனாதிபதிக்குரிய உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இருக்கமாட்டேன் என்றும் அது ஒரு அதிகார வெறியின் பீடம் என்றும் கூறி அதைவிட்டு விட்டு, கொள்ளுப்பிட்டி அலரிமாளிகைக்கு குடிவந்தவர் சந்திரிகா. (இவர் இங்கு வந்ததால் காலி வீதிப் பயணிகள் படும் அவலம் சொல்லி மாளாது! என்பது வேறு விடயம்)

இப்போது போகிற போக்கில் அலரிமாளிகைக் கூட ஜனாதிபதி மாளிகை போல் - ஒரு அதிகாரச் சின்னம் போல் - ஆகிவிடும் போலத் தான் தோன்றுகிறது. நாய் வேஷம் போட்டால் குரைக்கத்தானே வேண்டும் என்கிறார்கள் சில அனுதாபிகள். நாய், வேஷம் போட்டாலும் குரைக்கத்தான் செய்கிறது எமது அனுபவம்!

> "கடந்த ஐந்தாண்டு காலமாக, 13ம் திருத்தச் சட்டப் பிரகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் குறிப்பிட்டபடி வளர்த்தெடுக்கப்படாமலே போயிற்று. உண்மையில் நடந்தது என்னவென்றால், அதிகாரங்கள் பரவலாக்கப்படும் நடைமுறைக்கு நேரெதிராக அவை மேலும் மேலும் மத்திய அரசாங்கத்திடமே குவிக்கப்பட்டு வந்துள்ளன.
>
> -மேல்மாகாண முதலமைச்சராக இருந்த போது சந்திரிகா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போரும் சமாதானமும் பற்றிய போராட்டங்கள்

வ.ஐ.ச.ஜெயபாலன்

சரிநிகர் இதழில் ஏ.ரி. தமிழ்வாணன் அவர்கள் எழுதிய மனிதாபிமானத்திலும் பாரபட்சமா? என்கிற கடிதம் இக்கட்டுரையை எழுதத் தூண்டியது. மேற்படி கடிதத்தில் என்னையும் பஞ்சமனையும் முஸ்லிம் மக்களின் அனுதாபவாதிகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது ஒன்றும் புதிய குற்றச்சாட்டல்ல. 1983ல் எனது 'தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்' என்ற புத்தகம் வெளிவந்த காலத்திலிருந்தே இத்தகைய குற்றச்சாட்டுகளை நான் சந்தித்திருக்கிறேன். முஸ்லிம் மக்கள் மீது அனுதாபம் கொள்வது ஒரு குற்றச்செயலல்ல. எனினும் முஸ்லிம் மக்கள் விரும்புவது அதையல்ல.. சமத்துவமும் நீதியும் நன்நம்பிக்கையுமுள்ள நல்லுறவையே அவர்கள் விரும்புகிறார்கள். இதையே நான் எப்பொழுதும் தமிழர்களுக்கு உரத்துச் சொல்லியிருக்கிறேன். பஞ்சமன் போன்றவர்களது நிலைப்பாடும் (எனக்கு அவர் யார் எனத் தெரியாது) அதுவாகத்தான் இருக்கும் என்றும் நம்புகிறேன். அதே சமயம் அனுதாபத்தையல்ல சமத்துவமும் நீதியும் நன்னம்பிக்கையுமுள்ள நல்லுறவையே அம்பாறை மாவட்டத்து தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களிடம் எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் நான் குறிப்பிடத் தவறியதில்லை.

வடகிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்கு எதிராக பல்வேறு தமிழ் ஆயுதக்குழுக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொடுமை இழைத்துள்ளன. இக்கொடுமைகள் இன்றும் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து வருகின்றன என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

முஸ்லிம் சிறு ஆயுதக்குழுக்கள் தரப்பில் தவறுகள் ஏதும் இல்லை என்பதோ அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக முஸ்லிம் மக்கள் மத்தியில் விமர்சனங்கள் இல்லை என்பதோ அபத்தமான கருத்தாகும்.

வடகிழக்கு மாகாணத்தின் தமிழ் பேசும் மக்களுள் பெரும்பான்மையினர் தமிழர்கள் என்பதாலும் தமிழர்கள் பலர் விடுதலைப் புலிகள் அமைப்பினரின் கட்டுப்பாட்டின் வெளியே மேற்கு நாடுகளிலும் கொழும்பிலும் அகதிகளாக வாழ்வதால் அதிகம் விமர்சன சுதந்திரத்தையும் சாதனங்களையும் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தரப்பில் இத்தகைய வாய்ப்புக்கள் எதுவும் இல்லை. தமிழ் ஆயுதபாணிகளால் அச்சுறுத்தப்பட்ட நிலையில் தங்களது ஆயுதபாணிகளதும் அரசப்படைகளதும் பாதுகாப்பின் கீழ், கட்டுப்பாட்டின் கீழ் வாழ்கிற நிலையில் அவர்கள் மத்தியில் இருந்து வருகிற விமர்சனங்கள் வடகிழக்கு பகுதியில் புலிப்படையின் கட்டுப்பாட்டில் வாழ்கிற தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வருகிற விமர்சனங்களை விட குறைந்ததல்ல என நான் கருதுகிறேன். இப்பகுதிகளுக்கு வெளியில் துரத்தப்பட்டுள்ள கொடுமைக்கு ஆளாகியுள்ள வடபகுதி முஸ்லிம் மக்கள் தமிழர்களுக்கு எதிராக எவ்வித வன்முறைகளிலும் ஒரு போதும் ஈடுபட்டவர்கள் இல்லை. விடுதலைப்புலிகள் அமைப்பினரால் இத்தனை கொடுமை இழைக்கப்பட்ட பின்னரும் கூட அவர்கள் தமது தாயகத்தில் தமிழர்களுடன் நல்லுறவுடன் வாழ்வதற்காகவே போராடி வருகிறார்கள். இனம்சார் மக்கள் தொகுதி என்ற வகையில் வடபகுதி முஸ்லிம் மக்களுக்கு இணையாக வைத்துப்பேசக்கூடிய வகையில் இனக்கொடுமைகளின் மத்தியிலும் நல்லியல்புகளை மட்டுமே கொண்டிருந்த ஒரு சமூகத் தொகுதியை இலங்கையில் எந்த இனத்தின் மத்தியிலும் அடையாளம் காணமுடியாது.

எப்படிப் பார்த்தாலும் வடகிழக்கு மாகாண தமிழ் - முஸ்லிம் மக்களது சீர் கெட்ட உறவுகளை செம்மைப்படுத்துகிற தமிழ் எழுத்தாளர்களினதும் கலைஞர்களினதும் அரசியல்வாதிகளதும் பங்களிப்பு அடிப்படையில் தமிழரது அரசியல் தலைமைத்துவமும் விடுதலைப்புலிகள் உட்பட ஆயுதபாணிகளான பல்வேறு தமிழ் அமைப்புகளும் தொடர்ச்சியாக முஸ்லிம் மக்களுக்கு இழைத்து வந்த, வருகிற அநீதிகள் பற்றிய விமர்சனத்தில் இருந்தும் முஸ்லிம் மக்களது சமத்துவத்தையும் உரிமைகளையும் நிபந்தனையின்றி அங்கீகரிப்பதில் இருந்தும் மட்டுமே ஆரம்பிக்கப்பட வேண்டும். இத்தகைய ஒரு நடைமுறையின் தவிர்க்க முடியாத அங்கமாக முஸ்லிம் சிற்றாயுதக் குழுக்கள் சில இடங்களில் சில சமயங்களில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களுக்கு இழைத்துள்ள அநீதிகள் பற்றிய விமர்சனம் இணைக்கப்பட வேண்டும்.

இது போலவே 1990ன் நடுப்பகுதியில் ஈழப்போர் 2 ஆரம்பித்த வேளையில் கவிஞர் பாண்டியூரான் அவரது மகன் உட்பட தமிழர்கள் பலரது இருப்பை அழித்த முஸ்லிம் சிற்றாயுதக் குழுக்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் பற்றிய விமர்சனங்களில் இருந்தே அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் தமிழ் நல்லுறவை நாடுகிற முஸ்லிம் கலைஞர்களதும் எழுத்தாளர்களதும், அரசியல்வாதிகளதும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். எனினும் இத்தகைய விமர்சனங்களை சுதந்திரமாக ஆரம்பிக்கிற வாய்ப்பும் சாதனங்களும் முஸ்லிம்களை விட தமிழர்களுக்கே அதிகம் வாய்த்துள்ளது என்பதையும் தமிழர்களது தரப்பில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகள் பாரியது, பரவலானது, தொடர்ச்சியானது என்பதையும் இது தொடர்பாக தமிழர்கள் ஆற்றியுள்ள பங்கு போதாது என்பதையும் நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

இன்று சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள தமிழ் மக்களது சமாதான சக வாழ்வுக்கான ஒரு இயக்கம் நடந்து கொண்டிருக்கிறது. இத்தகைய இயக்கத்தின் முன்னணியில் நிற்கிற சிங்கள முற்போக்காளர்கள், பத்திரிகையாளர்கள் அவர்களது தமிழ் தோழர்களது உழைப்பை தமிழ் எழுத்தாளர்கள் கலைஞர்களாகிய நாம் முழுமையாக மதிப்பீடு செய்யத் தவறியுள்ளோம். இதற்கு ஒரு புறம் எமது அணுகுமுறையில் அவசியப்படுகிற கோட்பாட்டு ரீதியான வளர்ச்சி நிலை நெகிழ்ச்சி என்பன போதிய அளவு ஏற்படவில்லை என்பதும் ஒரு காரணமாகும்.

முன்னைய காலங்களில் குறிப்பாக பண்டார நாயக்கா குடும்பங்கள் பதவிக்கு வந்த காலங்களில் இடது சாரி சந்தர்ப்பவாதிகள் சுயநல நோக்கங்களுக்காக சிங்கள பௌத்த பேரினவாதத்தை, தமிழர் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்தியதை மட்டுமே புதிய நிலைமைகளை ஆராயும் அளவுகோலாக நாம் கொள்ள முடியாது. இன்று சிங்கள மக்கள் மத்தியில் சமாதானத்துக்காக குரல் கொடுக்கிற சிலர் உண்மையில் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு போராட்டம [illegible]வே இதை எடுத்துச் சென்றுள்ளனர். இ[illegible] டன் தமிழர்கள் சிலரும் பணிபுரிகிறார்கள். இவர்களை நான் ஒரு போதும் எழுந்தமானமாக இடது சாரி சந்தர்ப்பவாதிகள் என்றோ பயனற்ற ஒரு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் என்றோ சொல்ல மாட்டேன். எனினும் கோட்பாட்டு ரீதியான தவறுகள் இவர்களிடம் உண்டு. இத்தகைய தவறுகள் நம்மிடத்தும் உண்டு. சிங்களவர் தமிழர்கள் மத்தியில் உளப்பூர்வமாக சமாதான சகவாழ்வுக்காக பணியாற்றுகிற சிங்கள முற்போக்காளர் அணிகள் விடுகிற தவறுகளையே தமிழர் - முஸ்லிம் மக்களது நல்லுறவுக்கு மனப்பூர்வமாகக் குரல் கொடுக்கிற தமிழர்கள் பலரும் விடுகிறார்கள். இவை தொடர்பான நேர்மையானதும், ஆரோக்கியமானதுமான ஒரு விவாதம் ஆரம்பிக்கப்பட வேண்டிய காலகட்டம் இது. இத்தகைய ஒரு விவாதம் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் தமிழ் மக்களது நல்லுறவுக்காக உழைக்க விரும்புகிற முஸ்லிம் ஆர்வலர்களுக்கும் பயன் தரத் தக்கதாகும். ●

---

சொல்வதற்கு வேறு வழியில்லை.

# தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்காவிடில் முஸ்லிம்களுக்கு எதுவுமே இல்லை!

இன்றைய நிலையில் இலங்கையின் தேசிய அரசியலில் நடக்கும் நிகழ்வுகள் சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நம்பிக்கை தருவனவாய் இல்லை. கடந்த காலங்களில் ஏற்பட்ட அவமானங்களும் அச்சங்களும் களையப்படும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்து; ''மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும்'' எதிர்காலம் - தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரே காத்துக்கிடக்கிறது.

நீண்டகாலமாய் சிங்கள இனவாத அரசியல் தலைமைகளால் மிகக் கொடூரமான இம்சைக்குள்ளான தமிழ் மக்களைப் போல்; முஸ்லிம்களும் இந்த நாட்டில் இம்சைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இன அடக்குமுறையின் தீ நாக்குகள் தமிழர்களை முற்று முழுதாகக் கருக்கிப்போட்டதைப் போல் - முஸ்லிம்களும் இன அடக்குமுறையின் தீ நாக்குகளுக்கு இந்த நாட்டில் இரையாகி இருக்கிறார்கள். நில அபகரிப்பு, மொழிரீதியான புறக்கணிப்பு, சிங்கள மேலாதிக்கத்தின் பாதிப்பு, இராணுவ அழுத்தம் போன்ற பல்வேறு அம்சங்கள் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களையும் பாதித்திருக்கின்றன.

தமிழர் சமுதாயம் வடக்கு - கிழக்கில் எதிர்கொண்ட அனைத்து ஒத்த இயல்புடைய பாதிப்புக்கள் முஸ்லிம் சமுதாயத்தையும் நேரடியாகவே பாதித்து வந்திருக்கின்றன. தென்னிலங்கையில் வாழும் முஸ்லிம்களுடைய பிரச்சினைகளை விட, வடக்கு- கிழக்கில் வாழும் முஸ்லிம்களுடைய பிரச்சினை தமிழர் சமுதாயத்துடன் ஒப்பிடும் போது ஒத்த இயல்புடையதாகவே இருந்து வந்துள்ளன. இந்த பிரிக்கவொண்ணா அம்சங்களின் தோற்றுவாய்தான் ''தமிழ் பேசும் மக்கள்'' என்ற மொழிரீதியான தொனியும் வடக்கு - கிழக்கு தமிழர் அரசியலுடன் சேர்ந்த 1977க்கு முந்திய முஸ்லிம்களின் அரசியல் பாதையுமாகும்.


வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தமிழர்களுடன் சேர்ந்த அரசியல் பாதையில் தங்களுக்கென்று எதையும் பெற்றுக்கொள்ளாததையும், தமிழ் அரசியல், ஆயுத தலைமைகளால் புறக்கணிக்கப்பட்டதையும், வஞ்சிக்கப்பட்டதையும் ஒரு அதிர்ச்சிதரும் மேலாதிக்க தன்மையாக வரலாற்றின் ஊடே கண்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால் சிங்கள இன மேலாதிக்கவாதிகளின் பார்வையில் சிறுபான்மையினரைப் பொறுத்தவிடயங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றே.

பேராசிரியர் சிவத்தம்பி கூறுவதைப்போல **''துரதிர்ஷ்டவசமாக சிங்களவர்கள் இலங்கை எங்களுடைய நாடு என்று கூறுகிற இனவாதக்குரல் இந்த நாட்டுடன் நாங்கள் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களைத் தடுத்து விடுகிறது. இது எங்கள் நாடு என்ற நினைப்பை சிங்கள தேசியம் எங்களுக்கு கொடுக்கவில்லை. எங்களுக்கு தேசியம் என்பதில் உள்ள பிரச்சினையும் அதுதான்''** என்கிறார். அவரின் இந்த யதார்த்தமான கருத்து வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கும் பொருந்தும். அதுதான் எங்களுடைய பிரச்சினையும் என்பது எனது கருத்தாகும்.

தமிழர்களுடைய போராட்டத்தின் ஊடே இன்றுள்ள அரசியல் நிலையில் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்ற குரல்கள் சிங்கள அரசியல்வாதிகளை தவிர்க்கஇயலாத நிர்ப்பந்தத்திற்குள் தள்ளி இருக்கிறது. தமிழர்களின் போராட்டம்தான்; அல்லது அப்போராட்டத்தின் வெற்றிதான் வடக்கு-கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட மூல ஏதுவாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது!

தமிழர்களுடைய அரசியல் விழிப்புணர்ச்சிதான் அந்த விடுதலை வேட்கைதான்; அச்சமுதாயத்துடன் பின்னிப்பிணைந்து வாழும் முஸ்லிம்களையும் விழிப்புணர்வு உள்ளவர்களாக மாற்றியது. அந்தக் விழிப்புணர்வின் விளைச்சலே இன்றைய முஸ்லிம் காங்கிரசாகும். தமிழர்களுடைய அரசியல் விழிப்புணர்ச்சியின் விளைவே முஸ்லிம்களுக்கான தனி அதிகார அலகு பற்றிய சிந்தனையுமாகும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்கள் தமிழர் அரசியல் தலைமைகளின் பாசறையில் தான் உருவாக்கப்பட்டார் என்பதை அவர் கூட மறுக்கமாட்டார். இதுதான் உண்மை.

இவ்வுண்மைகளை முஸ்லிம் சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்குமேயானால் இன்றைய அரசியல் போக்கை மிக அவதானமாக எதிர் கொள்ள வேண்டியவர்களாக முஸ்லிம்கள் இருக்கிறார்கள். முஸ்லிம்களுக்கு தனித்துவமான அரசியல் தலைமை வேண்டுமென்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அந்தத் தெளிவுடன் அத் தனி அரசியல் தலைமை எப்படி முஸ்லிம்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக



செயற்பட வேண்டுமென்ற தெளிவு கொண்டவர்களாகவும் நாம் இருத்தல் அவசியம். இதுதான் எமது பிரச்சினைகளின் பிரதான எதிர்பார்ப்புமாகும்.

தமிழர்களின் தனி அரசியல் கட்சிகளின் தோற்றம்தான் முஸ்லிம்களுக்கான தனி அரசியல் கட்சிகளின் தேவைக்கான மூலவாய். தமிழர்களின் தனிநாடு அல்லது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை வெளிப்பாட்டின் விளைவே முஸ்லிம் மாகாணக்கோரிக்கை அல்லது தென்கிழக்கு மாகாண சபை. இந்த நிலையான்து ஒரு விசயத்தை அழுத்தி உரைக்கிறது. அரசியல் ரீதியாக தமிழர்களின் விடுதலையும், அவர்களின் சுபிட்சமும் தான் முஸ்லிம்களின் அரசியல் விடுதலைக்கும் எதிர்கால சுபிட்சத்திற்கும் உறுதுணையானது என்பதாகும்.

தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டுமென்ற தேவைப்பாடு அல்லது நிர்ப்பந்தம் சிங்கள அரசியல் தலைமைகளுக்கு இல்லாது போகுமானால், முஸ்லிம்களையும் போய்வாருங்கள் என்பார்கள். தமிழர்களுக்குத் தீர்வு இல்லையெனில்; முஸ்லிம்களுக்கேன் தென்கிழக்கு மாகாணசபை என்பார்கள். தமிழர்கள் இந்த நாட்டில் அரசியல் ரீதியாக தோற்கடிக்கப்பட்டால் முஸ்லிம்களின் ஆட்டமும் தோல்வியிலேயே முடிந்து போகும். இதை முஸ்லிம் அரசியல் தலைமைகளும் முஸ்லிம் தலைமைகளும் உணர்ந்து கொள்ளவேண்டும்!

இன்றைய தேசிய அரசியலில் சகல இன மக்களும் இந்த நாட்டில் அனைத்து உரிமைகளும் வாய்க்கப் பெற்றவர்களாக, சுதந்திரமாக வாழும் நிலையை ஏற்படுத்த எந்த சிங்கள அரசியல் தலைமைகளும் தயாரில்லை என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டன. சிங்கள இனவாதிகளின் நிர்ப்பந்தம் காரணமாக, ஓரளவேனும் ஏற்கனவே நம்பிக்கை தருவனவாய் இருந்த சந்திரிகாவின் வருகையும் இன்று இனவாத சாக்கடைக்குள் புகுந்து விட்டது. தமிழர்களும் முஸ்லிம்களும் அச்சத்துடன் எதிர்கொள்ள வேண்டிய காலம்தான் இது! அமைச்சர் பதவிகள் இருக்கிறது என்பதற்காக நாங்கள் தொடர்ந்தும் சந்தோசப்பட்டுக்கொண்டிருக்க முடியாது! முஸ்லிம் சமூகம் இறுமாப்புக்கொள்ளும் விடயமும் இல்லை இது!

சர்வதேச சமூகத்தை திருப்திப் படுத்துவதற்காகவும் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவும் சந்திரிகா அரசினால் முன்வைக்கப்பட்ட ஒகஸ்ட் 95 தீர்வு யோசனைகள் இப்போது பின்தள்ளப்பட்டு விட்டது. தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் என்ற நம்பிக்கை தேய்ந்து விட்டது. இப்படியான இன்றைய நிலையில் அரசியல் தீர்வு யோசனைகளை அமுல்படுத்த உழைப்பதும், நிர்ப்பந்திப்பதும், போராடுவதும் தமிழ் முஸ்லிம் அரசியல் தலைமைகளின் முக்கிய பணியாகிறது. முஸ்லிம்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதும்; முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதும் முஸ்லிம் காங்கிரசுக்கு தேவையாகவிருப்பின் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் தீர்வை அமுலாக்குவதற்கு அர

> தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டுமென்ற தேவைப்பாடு அல்லது நிர்ப்பந்தம் சிங்கள அரசியல் தலைமைகளுக்கு இல்லாது போகுமானால், முஸ்லிம்களையும் போய்வாருங்கள் என்பார்கள். தமிழர்களுக்குத் தீர்வு இல்லையெனில்; முஸ்லிம்களுக்கேன் தென்கிழக்கு மாகாணசபை என்பார்கள். தமிழர்கள் இந்த நாட்டில் அரசியல் ரீதியாக தோற்கடிக்கப்பட்டால் முஸ்லிம்களின் ஆட்டமும் தோல்வியிலேயே முடிந்து போகும். இதை முஸ்லிம் அரசியல் தலைமைகளும் முஸ்லிம் தலைமைகளும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

15 →

அபுநிஹால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ரிவிரசம்

ரிவிரச இராணுவ நடவடிக்கை தொடங்கியதும் புலிகள் வலிகாமத்திலிருந்து மக்கள் வெளியேறுவது அவசியம் என்று அறிவித்திருந்தார்கள். உடனடியாக வெளியேறாவிட்டால் உங்கள் பாதுகாப்புக்கு நாம் உத்தரவாதம் தரப்போவதில்லை என்பதே இதன் சாரம். (வெளியேற மறுத்த சிலரை மிரட்டி வெளியேற்றினார்கள் என்றும் சொல்லப்படுகிறது) எப்படியோ புலிக்குப் பயந்தோ, ஆமிக்குப் பயந்தோ மக்கள் சாரி சாரியாக தென்மராட்சியை நோக்கிப் புறப்பட்டனர்.

இந்தப் புறப்பாட்டில் தப்பிப்போன குழந்தைகள், தவறிப்போன வயோதிபர்கள் அடங்கும். எங்கே போகிறோம் என்ற குறிக்கோளே அற்றுப் புறப்பட்ட பலர் தம்மவர்களை நான்கு ஐந்து நாட்களுக்குப் பிறகும் கூட காண முடியாத நிலை. புன்னாலைக் கட்டுவனிலிருந்து வடமராட்சியிலுள்ள துன்னாலைக்குப் போக ரூபா 25,000 /= செலவழிக்க வேண்டியும் இருந்திருக்கிறது சில குடும்பங்களுக்கு.

கர்ப்பிணித் தாய்மார், ஒருவாரம் கூட ஆகாத குழந்தைகளைப் பெற்ற தாய்மார்கள் கூட இந்த அவதிகளில் இருந்து தப்பவில்லை.

அங்கிருந்து வந்து சேர்ந்த நண்பர் ஒருவர் கூறிய நெஞ்சை உருக்கும் இரு சம்பவங்களை கீழே தருகிறேன்.

16 வயதாகியும் மனோ வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் அடையாத கால்கள் சப்பாணியாகி விட்ட ஒரு வாலிபக் குழந்தையின் கதை ஒன்று. இந்தக் குழந்தைக்கு கதைக்கவும் வராது!

காலையிலேயே எழுந்து பல் துலக்குவது, கழிவறைக்குத் தூக்கிச் செல்வது, குளிக்க வைத்து உடை மாற்றுவது, உணவூட்டுவது, போன்ற அனைத்து வேலைகளையும் அந்தக் குழந்தைக்கு ஆற்றி வந்தது அதன் தாயார் தான்.

அன்று புலிகள் வந்து புறப்படுமாறு கூறிவிட்டுச் சென்ற பிறகு பாரிய சத்தத்துடன் ஷெல் ஒன்று அவர்களது வீட்டிற்கு அருகாமையில் விழுந்து வெடித்தது. புலிகளின் அறிவிப்பால் பயத்தினால் உறைந்து போய் இருந்த குடும்பத்தினர் எதை எடுப்பது, எதை விடுவது என்று தீர்மானிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கையில் தான் இந்த ஷெல் வெடித்தது. அகப்பட்டதைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள் குடும்பத்தினர். ஓடி, ஓடி நெடுந்தூரம் வந்த பின்புதான் அவர்கள் பயணம் முன்பு பல தடவை ஏற்பட்ட பயணங்கள் போல் அல்ல தற்காலிக பயணம் அல்ல, முடிவேயில்லாத பயணம் என்று புரிந்தது. கைதடி வரும் வரைக்கும் அவர்களுக்கு தாம் என்ன செய்கிறோம் எங்கே போகிறோம் என்ற நினைவேயில்லை. சாரி சாரியாக கூட்டம் கூட்டமாக வீதிகள் நிரம்பி வழிய போய்க் கொண்டிருந்த சனக்கூட்டத்தில் அவர்களும் இணைந்துவிட்டிருந்தார்கள். அக்கூட்டம் அவர்களை இழுத்து வந்து விட்டது.

நான்காவது நாள்தான் அவர்களது பயணம் தரித்தது. அதுவரை தவித்து தவித்து தான் அநாதரவாக விட்டு விட்டு வந்த மகனை நினைத்து ஏங்கிய போதும் உயிரச்சம் விரட்ட ஓடி வந்த தாய் தனது பயம் அகன்றதும் ஓலமிடத் தொடங்கினாள். பசிக்குது என்று கேட்கக் கூட முடியாத தனது மகனை நினைக்க அவளால் ஒரு கணமும் அங்கே இருக்க முடியவில்லை. துடியாய் துடித்தாள். விரைவில் அவளுக்கும் மனநோய் முற்றிவிடுமோ என்று அஞ்சிய கணவன் வருவது வரட்டும் என்று அவளையும் அழைத்துக் கொண்டு திரும்பிப் போனான். இராணுவம் நல்ல வேளையாக அவ்விடத்திற்கு இன்னமும் வரவில்லை. ஆனால் அவர்களின் துப்பாக்கி வேட்டுக்களும், வாகன இரைச்சல்களும் மிக அண்மையிலேயே அவர்கள் இருப்பதை உணர்த்தின. வீடு நோக்கி ஓடிப் போன தாய் மலசலம் எல்லாம் கழித்து அவற்றின் மத்தியில் அசையக்கூட முடியாத, உதடுகள் தாகத்தால் பாளம் பாளமாக வெடித்திருந்த சாவுக்காக துடித்துக் கொண்டிருக்கும் மகனைக் கண்டாள்.

அவர்கள் அம்மகனை கைதடிக்கு சுமந்து வந்த கதை இன்னொரு உருக்கமான கதை.

மற்றைய கதை இதுதான்;

புலிகளின் எச்சரிக்கையை அலட்சியம் செய்து விட்டிருந்த ஒரு குடும்பத்தின் கதை இது. தனது 6மாதக் குழந்தையை ஏணையில் போட்டு ஆட்டியபடியே என்ன வந்தாலும் சரி போவதில்லை என்று கூறிக்கொண்டிருந்தாள் அந்த இளம் தாய். அதை ஆமோதித்துக் கொண்டிருந்தாள் அவளது அன்னை. திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் சடசடத்தன. குண்டுகள் விழுந்து தீப்பிழப்பாக வெடித்து கட்டிடங்களை தகர்த்தன. என்ன நடக்கிறது என்று யோசிக்க முன்பாகவே வீட்டிலிருந்த எல்லோரும் சிதறி ஓடத் தொடங்கினார்கள். சரியாக 6 மணி நேரத்தின் பின் கோவில் ஒன்றில் தாயாரை சந்தித்த அந்த இளம் தாய் கேட்டாள் '' பிள்ளை எங்கே'' கையிலேயே சூப்பி சுடுதண்ணீர் போத்தல் பால்மாவுடன் நின்ற தாய் கேட்டாள் ''பிள்ளையை நீ கொண்டு வரவில்லையா?''

''ஐயோ'' என்ற அலறல் அந்த அகதிகள் கூடியிருந்த கோவிற் சுவர்களில் பட்டு தேய்ந்துப் பரிதாபகரமாக ஒலித்தது.

இலங்கை வானொலி இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாக அவளது பகுதியையும் அறிவித்தது.

இந்தக் கதையை நண்பர் சொன்னபோது எனது 3வயது மகள் தனது பொம்மைக் குழந்தையைத் தொட்டிலிட்டு பாடும் பாடல் ஞாபகத்துக்கு வந்தது.

எங்கள் வீட்டு சின்னப் பாப்பா
ஏணையில் கிடந்து தூங்குகிறாள்
காற்றே காற்றே வீசாதே
கண்மணி கனவை கலையாதே
குயிலே குயிலே கூவாதே
குழந்தையை எழுப்பிப் போடாதே
.....................
.....................

சாவகச்சேரியில் இருந்து ஒரு கடிதம். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக வந்து சேர்ந்தது இந்தக் கடிதம்.

'மிகவும் கஷ்டம். உங்கள் உதவியை எதிர்பார்க்கிறோம். முன்பக்கத்தில் உள்ள விலாசத்திற்கு அனுப்பி விடவும்.'

'ரிவிரச' நடவடிக்கை காரணமாக, புலிகளின் 25 மணி நேர அவகாசத்தில் சுன்னாகத்திலிருந்து ஓடிவந்து தங்கியிருக்கும் தன் குடும்பத்தினரின் கஷ்டநிலை காரணமாக, கொழும்பிலிருக்கும் தனது தமையனாருக்கு அச் சகோதரி உதவிகோரி எழுதிய கடிதம் தான் இது.

கடிதத்தைப் படித்த சகோதரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

சகோதரியின் மெலிந்த உருவமும், அவளது குழந்தைகளின் கோலமும் ஒரு கம்போடிய குடும்பத்தின் படமாக மனக் கண்ணில் வந்து போனது.

ஏற்கெனவே, சாப்பிட வழியற்று தேங்காய், முருக்கமிலை, முசுட்டை இலை என்பவற்றுக்கு கூட சண்டை பிடிக்கும் நிலைக்கு அங்குள்ளவர்கள் வந்து விட்டார்கள் என்று கேள்விப் பட்டிருந்தார் இந்தத் தமையனார்.

காசு அனுப்பி வந்த வழிகள் இலங்கை அரசாங்கத்தின் பரோபகாரம் காரணமாக அடைபட்டுப்போய் விட்டன. கடிதம் கூட அனுப்ப முடியாத நிலை. கொண்டு செல்லும் கடிதங்களை வவுனியாவில் வைத்து மறித்து சோதனையிடும் இராணுவத்தினர், ''அங்கு சிவில் நிர்வாகம் நடக்கிறது. கடிதத்தை பெட்டியில் போட்டுவிட்டுப் போங்கள்'' என்று சொல்கிறார்கள். சாப்பாட்டுக்கே தட்டுப்பாடு நிலவுகிறது. அங்குள்ளவர்களுக்கு தன்னால் முடிந்த சொற்பளவு பணத்தையாவது அனுப்புவதற்கு என்ன செய்யலாம் என்று தவித்துக் கொண்டிருந்த இந்த தமையனாருக்கு ஒரு சந்தோசம்.

கடிதம் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக வந்திருப்பதால் ஏன் அவர்களுக்கூடாக ஏதாவது செய்ய முடியாதா என்று கேட்டுப் பார்க்கக் கூடாது என்று தோன்றியது.

கடிதம் எழுதப்பட்ட திகதியைப் பார்த்தார்.

டிசம்பர் 10ம் திகதி, கடிதம் இவரது கைக்குக் கிடைத்திருப்பது ஜனவரி 8ம் திகதி.

கடவுளே, இந்த ஒரு மாதத்துக்குள் அவளும் அந்தப் பிள்ளைகளும் என்ன பாடுபட்டிருக்குமோ?

நினைக்கும் போதே கண்கள் பனித்தன. கடிதத்தை திரும்பத் திரும்ப பார்த்தவர், மனைவியிடம் சொன்னார் ''பாப்பம் செஞ்சிலுவைச் சங்க ஆக்களை கேட்டுப் பாப்பம்''

அவரது அந்த அற்ப ஆசைக்கும், மனைவி பதிலாக கடிதத்தை சுட்டிக் காட்டியது ஆப்பு வைத்தது. ஆம், அவரது மனைவி சுட்டிக் காட்டியது போல செஞ்சிலுவை சங்கத்தின் குறிப்பு ஒன்றும் அங்கு குறிக்கப்பட்டிருந்தது.

''இக் கடிதத்துக்குரிய பதிலை செ.சி.ச. மூலம் அனுப்ப முடியாது என்பதை அறியத் தருகிறோம்''

இடிந்து போய் உட்கார்ந்து விட்டார் அவர்.

யாழ்ப்பாணத்துக் கலாசாரத்தை கிடுகு வேலிக் கலாசாரம் என்று கிண்டலாகக் குறிப்பிடுவார்கள். தாங்கள், தங்களது வீடு, வீட்டைச் சுற்றி வளர்த்த பயன்தரு மரங்களான மா, பலா, வாழை, முந்திரிகை பெரும்பாலும் ஒரு ரலி சைக்கிள் (பின்னைய காலங்களில் இது ஏசியாவாக மாறி இருந்தது) இவையெல்லாவற்றிற்கும் பாதுகாப்பாக கிழுவங்கதிகாலில் ஒரு கிடுகு வேலி போட்டிருப்பார்கள். இந்த கிடுகு வேலியில் ஒரு ''பொட்டு'' வைத்திருப்பார்கள். இது அயல் வீட்டுக்குச் சென்று வருவதற்கான பாதையாக இருக்கும். அயல் வீட்டாருடன் ஏதாவது ''கொழுவல்'' என்றால் பொட்டு அடைபட்டு விடும்; படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் நிலை வரும்போது அடிக்கடி தாண்டிக்குளம் பாதை மூடப்பட்டு விடுவதைப் போல.

இதெல்லாவற்றுடனும் சேர்ந்தது அவர்களுடைய சேமிப்புப் பழக்கம் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டியாவது சேமிப்பதில் அவர்களுக்கு நிகர் அவர்கள் தான். அவர்களுடைய சேமிப்பு பெரும்பாலும் ஒரு கல் வீடாகவும் (ஒரு சாதாரண எழுதுவினைஞர் கூட அலுவலகத்தில் கடன் பெற்று சம்பளத்தில் மிச்சம் பிடித்து ஒரு கல்வீடு கட்டி விடுவார்) பவுணாகவுமே இருக்கும். இதைப் புரிந்து கொண்டதாக கொண்டு தான் புலிகள் பவுண் சேகரிப்பை ஆரம்பித்தார்கள் போலும். பின்னர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுபவர்கள் வீட்டை புலிகளுக்கு எழுதிக் கொடுத்து விட்டு வரவேண்டும் என்ற நிபந்தனையும் இருந்ததல்லவா?

இவ்வாறு கட்டிக் காத்து நட்டுவளர்த்த, சிறுகச் சேமித்த எல்லாவற்றையும் விட்டு விட்டு உடுத்த உடையுடன் ஓடி வரவேண்டியதாகி விட்டது அவர்களுக்கு.

எல்லாவற்றையும் போட்டது போட்டபடி விட்டு விட்டு ஓடிவர நேர்ந்த போதும் அவர்கள் எடுத்து வர மறக்காதவை இரண்டு. நகை நட்டோ, காசு பணமோ அல்ல. உடுபிடவையோ உணவு வகையோ அதுவுமல்ல. கல்விச் சான்றிதழும் அல்ல.

ஒன்று பவுண் கட்டிய ரசீது.

இரண்டாவது; புலிகளால் வழங்கப்பட்ட குடும்ப அட்டை. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

''புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து மக்களை வெளியேறுமாறு கோரியது ஏன்?''

''ஏன்''

''அரசாங்கப் படைகள் இந்தத்தடவை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விடும் என்று அவர்களுக்கு நிச்சயமாக தெரியும்''

''அதற்கும் வெளியேறச் சொன்னதற்கும் என்ன சம்பந்தம்' ஐ.பி.கே.எப்.காலத்தில் அப்படிக் கேட்கவில்லை தானே?''

''ஐ.பி.கே.எப்.காலத்துப் படிப்பினையால் தான் புலிகள் அப்படிச் செய்தார்கள் அப்படிச் செய்தால் தான் அரசாங்கம் தான் முழுக்க முழுக்க வெற்றி பெற்றதாக கூறிக் கொள்ள முடியாது. மக்கள் புலிகளை நம்பி வெளியேறி உள்ளதாக கூற முடியும். உண்மையில் பிரபாகரன் தனது அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளார் தானே?''

''சரி''

''என்ன சரி.... விஷயம் இந்தளவுடன் முடியவில்லை. புலிகளுக்கு வேறும் ஒரு திட்டம் இருக்கிறது''

''என்ன?''

''குடா நாட்டை முற்று முழுதாக தமிழீழத்தின் ஒரு அடையாள பிரதேசமாக வைத்துக் கொண்டு, தமிழீழத்தை நீண்ட காலத்தில் வன்னிப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஒரு பிரதேசமாகக் கட்டி எழுப்புவது தான் அவர்களது திட்டம்''

''அப்ப அவர்கள் இராணுவம் வெளியேறினாலும் சனத்தைத் திருப்பிப் போக விடமாட்டார்கள்''

''இராணுவம் போகாது. புலிகள் அவர்களை போகாட்டுவதில் உடனடியாக அவ்வளவு அக்கறை காட்டப் போவதுமில்லை. போன பிறகு சிலரை மட்டும் அனுமதிப்பார்கள்''

'யார் அந்தச் சிலர்'

''அனேகமாக மீன்பிடியோடு சம்பந்தப்பட்ட கரையோர மக்கள் மற்றும் தமிழீழ அலுவலகங்களில் வேலை செய்வோர்....''

''அது சரி இதெல்லாம் எப்பிடி உனக்குத் தெரியும்''

''......................''

இந்த உரையாடலை கேட்டுக் கொண்டிருக்கையில் மனதில் பட்ட விடயம் இதுதான்.

மனிதர்கள் எப்போதும் எதையாவது நியாயப்படுத்த நினைக்கிறார்கள். நம்பிக்கைகள் இல்லாவிட்டால் மனிதனால் வாழ முடியாது என்பதற்காக எப்படியாவது நியாயப்படுத்தித்தான் ஆக வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இப்படித்தான் முஸ்லிம் மக்களை வெளியேற்றிய போதும், முதலில் அவர்களிடையே உளவாளிகள் இருப்பதாக சொன்னார்கள். பிறகு அவர்களது சொந்தப் பாதுகாப்புக்காகவே அனுப்பினோம் என்றார்கள். (மூக்கு மின்னியையும் காதுத் தோட்டையும் கழற்றி விட்டு அனுப்பியதெல்லாம் சும்மா கதைகளாகிப் போயிருந்தன) எப்படியோ பிறகு அந்த முஸ்லிம் மக்களது உடமைகள் யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளால் நிர்வகிக்கப்படும் 'அங்காடி' ஒன்றில் விற்பனை செய்யப்பட்டன.

இப்போதும் தென்மராட்சியில் கூரையிலிருந்து கழற்றப்பட்ட சீற்றுக்கள் விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் வருகின்றன. யார் வீட்டுக் கூரையோ?

நியாயப்படுத்தி நியாயப்படுத்தி வாழப் பழகி விட்ட தோஷம். எதையும் நியாயப்படுத்தும் பண்பைக் கூட நியாயப்படுத்தி விடுகிறது!

இப்படி நான் யோசித்துக் கொண்டிருந்த நிலையில்தான் இந்தச் சம்பவம் நடந்தது.

விரசவுடன் கலைபட்டோ, கலைக்கப்பட்டோ தென்மராட்சி, கிளிநொச்சி, வன்னி எனப் புலம் பெயர்ந்து தாண்டிக்குளமும் தாண்டி கொழும்பு வந்திருந்த நண்பர் ஒருவரை சந்திக்க வாய்த்த சந்தர்ப்பம் தான் அது. அவர் தானும் குடும்பத்தவரும் பட்ட அவஸ்தைகளை விபரித்துக் கொண்டிருந்தார்.

'மக்களே எதிரி நாலாபக்கமுமு சூழ்ந்து விட்டான். உடனே வெளியேறுங்கள். நாங்கள் நாவற்குழி பாலத்தைத் தாக்கப் போகிறோம் என்று புலிகள் ஒலிபெருக்கி அறிவித்த பிறகு யார்தான் நிற்பார்கள்

போட்டது போபட்டி கிடக்கக் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு தென்மராட்சிக்கு குடும்பத்தினரைக் கொண்டு வந்து விட்டு விட்டு நானும் இன்னுமிருவராக வீட்டைப் பார்க்கப் போனோம்.

எமது வீட்டு வாசலில் ஒரு ட்ரக்ரர் நின்றது. அதில் வீட்டுக்குப் போடுகிற சீட் அடுக்கப்பட்டிருந்தது. வீட்டுக்குள் போன பிறகுதான் தெரிந்தது, கோழிக்கூட்டிற்குப் போட்டிருந்த சீற் அவ்வளவையும் கழற்றி ஏற்றியிருந்தார்கள்.

நான் வீட்டைத் திறந்து உள்ளே போனவரைப் பார்த்த இளைஞர் சொன்னான் ''அகதிகளுக்குக் கொடுக்கிறத்துக்காக உங்கடை கோழிக்கூட்டு சீற் எல்லாத்தையும் கழட்டியிட்டம் அண்ணை'' என்று.

தென்மராட்சி நிலைமைகள் தெரிந்தால் நான் எதுவும் பேசவில்லை. இப்ப நாங்களும் அகதிகள் தானே.

வீட்டிலிருந்து அவசியமாக எடுக்கக் கூடிய சாமான்களையும் எடுத்துக்கொண்டு குடும்பத் தலைவர் கூட்டிக் கொள்டு கிளிநொச்சிக்கு வந்தேன்.

நான் தங்கலாம் என எண்ணிப் போன எனது உறவினர் வீட்டில் ஏற்கனவே இடம் பெயர்ந்து வந்த நான்கு குடும்பத்தினர் இருந்தனர். நிலைமையை உணர்ந்த அவர் தனது வளவுக்குள்ளேயே ஒரு கொட்டில் போட்டுக்கொண்டு இருக்கலாம் என்று கூறினார். மறுநாள் கொட்டில் போடுவதற்காக கிடுகு விசாரித்துக்கொண்டு போனேன்.

வழியில் சீற் விற்பனைக்குண்டு என்று விலையும் குறிப்பிட்டு போர்ட் டோப்பட்டிருந்தது. விற்பனையாளர்கள் மேசையில் இருந்தது என்னுடைய வீட்டில் சீற் கழட்டிய அதே இளைஞன் தான்.

அண்ணைக்கு சீற் வேணுமோ?
எத்தினை சீற் வேணும்?
குறைச்சுத் தரலாம்
எனக்குத் தலை சுற்றியது?
சிறிது நேரத்திற்பக பிறகு அவர் சொன்னார்.
அவர்கள் அப்போதும் வி.பு தான். இப்போதும் வி.பு தான். நான் மூளையைப் போட்டுக் குழப்பியும் புரியாமல் கேட்டேன்.
ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் என்று
அப்போது விடுதலைப் புலிகள்
இப்போது வியாபாரப் புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பறிபோகிறது மலையகம்! விலை போகிறார்கள் தலைவர்கள்!

சுதந்திர இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் குவிமையமாக வட-கிழக்கு மாகாணங்களும் மலையகமும் அமைந்துள்ளன. வடகிழக்கு மாகாணங்களில், கல்லோயா, சேருவில, மணலாறு, புளியங்குளம் குடியேற்றங்கள் அங்கே ஒரு பெரும் போராட்டத்தையே உருவாக்கியுள்ளது.

ஆனால் மலையக தமிழ் மக்களது வாழ்வாதாரப் பிரதேசங்களில், தோட்டங்களில் கடந்த 50 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுவரும் குடியேற்றங்கள், மலையக தமிழ் மக்களை நிர்மூலமாக்கி, அவர்களது வாழ்வாதாரப் பிரதேசங்களை ஆக்கிரமித்து, வீதியில் விரட்டுவதாக அமைந்திருக்கின்றது. இவற்றுக்கெதிராக அவ்வப்போது எழுந்த தொழிலாளர்களின் எதிர்ப்பைத் தவிர வேறு நிரந்தரமான போராட்டம் எதுவும் இன்று வரை எழவில்லை.

வெற்றிலையூரில் ஆரம்பிக்கப்பட்ட மலையகம் நோக்கிய சிங்களக் குடியேற்றங்கள் (இன்றைய புலத்கொல பிட்டிய) டெவன், டெல்ட்டா, சங்குவாரி, மடகும்புர என தொடர்ந்து நூற்றுக்கணக்கான தோட்டங்களின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் குடியேற்றங்களுக்கெனவும், அபிவிருத்திக்கெனவும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இக்குடியேற்றங்கள் மலையக தமிழ் மக்கள் பரந்து வாழும், பதுளை, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை கண்டி மாவட்டங்களில் மட்டுமன்றி மலையக மக்களின் சமூக மையமாக திகழும் நுவரெலியா மாவட்டத்திலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

காணி சீர்திருத்த ஆணைக்குழு, சட்டத்தின் கீழ் 1972ம் ஆண்டுக்கும் 1977ம் ஆண்டுக்குமிடையில் பத்தாயிரக்கணக்கான ஏக்கர் தோட்டக்காணிகள் சுவீகரிக்கப்பட்டு குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, பத்தாயிரத்திற்கும் அதிகமான தமிழ் தொழிலாளர்கள் குடும்பங்கள் வீதிகளில் விரட்டப்பட்டன என்ற தகவலை "நட்சா" திட்டம் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குடியேற்றங்கள், அபிவிருத்தித்திட்டங்கள், நீர்ப்பாசனத்திட்டங்கள், கைத்தொழில் பேட்டைகள் எல்லாவற்றுக்கும் மலையகத் தமிழ் மக்களின் வாழ்வாதார மண்மீது வரைமுறையற்ற ஆக்கிரமிப்பை மேற்கொண்டுவரும் சிங்கள -பௌத்த பேரினவாத கருத்தியலின் பாதுகாவலர்களான அரசாங்கங்கள் ஒரு இனத்தின் உயிர்வாழ்வுக்காக இன்னொரு தேசிய இனத்தின் உணர்வுகளை மோதிமிதிப்பதையிட்டு கவலைப்படுபவையாகக் காணப்படவில்லை.

மலையக தமிழினத்தின் முன்னணி சக்தியான தோட்டத் தொழிலாளர்கள் தங்களது பிரதேசங்கள் மீதான ஆக்கிரமிப்புக்களை எதிர்கொண்டு போராடிய போதெல்லாம், பிற்போக்குவாத, தொழிற்சங்க பாராளுமன்ற தலைமைகள் தொழிலாளர்களை காட்டிக் கொடுத்தன. இவ் வரலாற்று துரோகங்களின் விளைவு இன அழிவின் முடிவாக இருக்கப் போகின்றது.

அதிமேதகு சனாதிபதியவர்களும், அதிகௌரவ நிதிபிரதியமைச்சரும் திறை சேரியின் செயலாளரும், தோட்டக் காணிகள் கிராமிய சிங்களவரின் விவசாய நிலங்கள், அவற்றை அவர்களுக்கு மீள கையளிப்பதில் தவறில்லை என பேசிய போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், தொழிற்சங்கவாதிகளும் மௌனமாய் இருந்ததன் நோக்கமென்ன என்பது புதிராகவுள்ளது.

மலையகத்தில் 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தபோது தான் வாழ்வுரிமை மறுக்கப்பட்டு அரசியல் குடியியல் அனாதையாக்கும் அவமானகரமான சட்டங்கள், இலங்கை சிங்கள -பௌத்த பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதென்பதையும் இழந்த உரிமைகளை, மீளப்பெறும் முயற்சி இன்று வரை முற்றுப்பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாடு எமக்கிருக்கிறது.

இன்று பாராளுமன்றத்தில் மலையகத்தின் பத்து தமிழ்ப்பிரதிநிதிகள் இருக்கின்ற போது தான் தோட்டத் தொழிற்துறையை தனியார் மயப்படுத்தும் அதிபாதாள திட்டத்தை பொதுசன முன்னணி அரசு முன்னெடுக்கின்றது. இன்றைய சனாதிபதியவர்கள் தான் 1972- 77இல் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராய் இருந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

பத்தாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படும் போதும், மலையக தமிழ் மக்களின் மீதான, திட்டமிடப்பட்ட அரசாங்க மற்றும், நிறுவன மயப்படுத்தப்பட்ட தாக்குதலின்போதும் இவர்களால் அதனைத் தடுக்க முடியவில்லை.

தமிழ்த் தோட்டப் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப் படுவதையும் தமிழ்த் தோட்டங்கள் மீது பலாத்கார குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதையும் தடுக்க முடியவில்லை.

தென் மாகாண தோட்டத் தொழிலாளர்கள் மீதான குண்டர் தாக்குதலையும், காடைத்தனங்களையும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இவற்றை நோக்கும் போது மலையக சமூக பேரழிவினை கைகட்டி பார்த்திருந்த பத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் இன்னொரு தடவை வரலாற்றில் இடம்பெறும் என்பதைத் தவிர என்னதான் மிஞ்சப் போகிறது?

பொதுசன முன்னணி அரசின் கைத்தொழில் குடியேற்ற திட்டத்தின் கீழ் 10 லட்சம் பேர் 1996 இல் வேலைவாய்ப்பு பெறுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக பறிபோகவுள்ள மலையக காணிகள் எத்தனை ஏக்கர், எத்தனை மக்கள் வீதியில் விரட்டப்படபோகிறார்கள் என்பது யாருக்காவது புரியுமா?

பொதுசன முன்னணி அரசாங்கம் கடந்த ஆண்டு கண்டி பள்ளேகலையில் சுதந்திர வர்த்தக வலயம் அமைக்கவென தோட்டத்தை மூடி தொழிலாளர்களை நிர்க்கதிக்குள்ளாக்கியது.

இவ்வாண்டு அவிசாவளை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள "ஆர்தர் பீல்ட்" தோட்டத்தின். 360 ஏக்கர் காணியை கைத்தொழில் அபிவிருத்தி என்ற பெயரில் ஆக்கிரமித்துள்ளது. இத்தோட்டத்தில் இருந்த 160 தமிழ் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த 628 பேரின் எதிர்காலம் என்ன?

கண்டி மாவட்டத்தின் 980 ஏக்கர் பரப்புள்ள கந்தானை தோட்டம் குடியேற்றங்களுக்கென ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில், நாளாந்த தோட்டத்தின் 100 ஏக்கர் காணியும் ரத்வத்தை தோட்டத்தின் 700 ஏக்கர் காணியும், ஹவுல்பிட்டியவில் 100 ஏக்கர் காணியும் கைத்தொழில் அபிவிருத்திக்கென ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

**பொதுசன முன்னணி அரசாங்கம் பதவியேற்றதில் இருந்து இதுவரை எடுக்கப்பட்ட தோட்ட காணிகள்**

| தோட்டத்தின் பெயர் | மாவட்டம் | பரப்பு (ஏக்கர்) | பாதிக்கப்படும் தொழிலாளர்கள் |
|---|---|---|---|
| 1. நாகஸ்தன | கண்டி | 250 | 450 பேர் |
| 2.ஆர்தர்பீல்ட் | கொழும்பு | 360 | 628 பேர் |
| 3. கந்தானை | கண்டி | 980 | 4440 பேர் |
| 4. நாலந்தா | மாத்தளை | 100 | |
| 5. ரத்வத்தை | மாத்தளை | 700 | |
| 6. ஹபுஸ்பிட்டிய | மாத்தளை | 100 | |
| மொத்தம் | | 2490 | |

இந்த 'மலையக மண் ஆக்கிரமிப்புத்' தொடரில் மிகப் புதிதாய் இணைந்து கொண்டது. "சிவனொளிபாத மலைப் பிரதேசத்தை புனிதப் பிரதேசமாக்கும் திட்டமாகும். கணிசமான மலையகத் தமிழர்கள் வாழும் இப்பிரதேசமும் பறிபோகிற நிலைக்கு வந்துள்ளது. இப்பிரதேசத்தை புனிதமாக்கி அங்கு ஒரு பௌத்த பேரினவாத தலைமையகத்தை உருவாக்குவதன் மூலம் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதே இதன் நோக்கமெனக் கருதப்படுகிறது.

காடு வளர் ...ண்டி -மாத்தளை நுவரெலியா மாவடடத்தைச் சேர்ந்த தோட்டங்கள் உட்படவிருப்பதாகவும் இதன் மூலம் 2 லட்சத்து 75ஆயிரம் தமிழ் மக்கள் வெளியேற நேரும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுசன முன்னணி அரசின் முதலாம் ஆண்டு பூர்த்தியுடன் இன்றுவரை மொத்தமாக 2490 ஏக்கர் தோட்டக்காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர 30க்கு மேற்பட்ட தாக்குதல் ... வங்கள் தோட்டத் தொழிலாளருக்கு எதி... மேற்கொள்ளப்பட்டுள்ளன. களுத்து... காலி, மாத்தளை, கண்டி, நுவரெலி... மாவட்டங்களில் தோட்டத் தொழிலாளர் மீதான வன்முறைகள் படுகொலைகள் திட்டமிட்ட முறையில் முன்... படுகின்றன.

இவற்றுக்கு புறம்பாக டசன் கணக்கான தோட்டங்களில், (பிரேசெவல, பிட்டகந்த, புப்புரச) பலாத்கார குடியேற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

மலையக மக்கள் மீதான பொலிஸ் அடக்குமுறை எப்பொழுதும் இல்லாதவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது. மலையகம் மலையக மக்களையே அன்னியராக்கி, சந்தேக பிராணியாக்கி வருகிறது. சொந்த வீடுகளில் தோட்டங்களில் மலையக இளைஞருக்கு பாதுகாப்பின்மை காணப்படுகின்றது.

அவசரகால சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் என்பன தமிழின ஒழிப்பிற்கான சட்ட அங்கீகாரத்தை வழங்கியிருக்கின்றன. தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் மீது மிருகத்தனமான இராணுவத்தீர்வு திணிக்கப்பட்டுள்ளது. இவற்றை ஆதரித்து அங்கீகரித்து நிற்கின்ற மலையக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் இந்நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியாக துணை போய் வருவதானது அவர்கள் பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் சேற்றில் மூழ்கிவிட்ட நிலையையும் அற்ப சலுகைகளை பெறுவதற்காக மக்களது அடிப்படை உரிமைகளை விலைபேசவும் முன்னிற்கிறார்கள் எனவும் அம்பலப்படுத்துகின்றது.

இவ்வாறான நிலையில் பறிபோய்க் கொண்டிருக்கும் மலையகத்தை விலைபேசிக் கொண்டிருக்கும் அரசியல், தொழிற்சங்க, பாராளுமன்ற சந்தர்ப்பவாதிகளை அம்பலப்படுத்தி மலையக மக்களின் விடிவுக்காக குரல் எழுப்ப வேண்டியது சகல முன்னணி புத்திஜீவிகள், பத்திரிகைகள், முற்போக்கு இயக்கங்களின் வரலாற்று கடமையாகிறது.

–பொ.பிரபாகரன்

# யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் இல்லாத போது நாம் எவ்வாறு குடியேறுவது!

யாழ் நகர் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டமை உலகறிந்த உண்மை. இவ்வேளையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் எங்கெல்லாம் பரந்து வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களைப் பார்த்து எழும் கேள்வி என்னவெனில், எப்போது யாழ்ப்பாணம் செல்கின்றீர்கள் என்பதுதான். இது யாழ் முஸ்லிம்களின் உண்மை நிலை தெரியாதவர்களினால் எழுப்பப்படும் கேள்வியாகும். ஒரு சில பாமர யாழ் முஸ்லிம்கள் கூட பிரச்சினை தீர்ந்து விட்டதாகவும், நமது சொந்த தாயக மண்ணிற்கு செல்லலாம் எனவும் எண்ணத் தலைப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் கூட யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களை மீளக் குடியேறுமாறு அழைப்பு விடுத்துள்ளது. சென்ற கிழமை யாழ் நகர் சென்று வந்த அமைச்சர் நிமால் சிறிபால டி.சில்வா கூட, யாழ் முஸ்லிம்கள் மீளக் குடியேற ஆயத்தமாக இருப்பதாக ஏதோ ஒரு அமைப்பு கூறியதாக குறிப்பிட்டுள்ளார். யாழ் முஸ்லிம்கள் மத்தியிலிருந்தும் ஒரு குழு யாழ்ப்பாணம் செல்ல விருப்பதாக பரவலாகப் பேசப்படுகின்றது. இவை யெல்லாம் ஏட்டுச் சுரக்காய் போன்றதே.

வடகிழக்கில் இருந்து வெளியேறிய அகதிகள் சகலரையும், எல்லோரும் ஒரே கண்ணோட்டத்தில் தான் நோக்குகின்றனர். ஆனால் அகதிகள், வெளியேற்றப்பட்ட அகதிகள், வெளியேறிய அகதிகள் என இரு வகையில் உள்ளனர். வெளியேற்றப்பட்ட, வெளியேறிய இருவருக்கும் இடையில் பாரிய வேறுபாடு உண்டு. அதாவது அரசுக்கும், புலிகளுக்குமிடையிலே நடைபெறும் யுத்தத்தின் காரணமாக, பீதியினால் அகதிகளானோர் பணம், பதவிகளை காப்பாற்றுவதற்காக அகதிகளானோர் தமது சொந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அகதிகளானோர் எனப் பல நிலைகளில் அகதிகளாக வெளியேறியோர் உள்ளனர்.

ஆனால் யாழ் முஸ்லிம்கள் இவர்கள் யாவரையும் விட முதனிலையில் உள்ளனர். எவ்வாறெனில், சகல சொத்து சுதந்திரங்களும் பறிக்கப்பட்டு, இரண்டு மணித்தியால அவகாசத்தில் தமது சொந்த தாயக மண்ணிலிருந்து, சிறுபான்மை மக்களின் உரிமைக்காக போராடுபவர்களினால் விரட்டியடிக்கப்பட்டவர்கள். அடுத்த வேளை உணவுக்காக பிறரின் தயவை நாட வேண்டிய நிலையில், ஆடு மாடுகளைப் போல் லொறிகளில் ஏற்றி வவுனியாக்கப்பால் அனுப்பி வைக்கப்பட்டவர்கள். இவைதான் யாழ் முஸ்லிம் அகதிகளுக்கும், பிற அகதிகளுக்குமுள்ள வித்தியாசம். எனவே அரசும், பிறரும் யாழ் முஸ்லிம்களை விசேட கண்கொண்டு பார்க்ககடப்பாடுடையவர்கள். ஆனால் கடந்த ஐந்தாண்டு காலத்தில் இவ்வாறு அரவணைக்கப்பட்டோமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஆகவே இனிமேலாவது அகதிகள் விடயத்தில் யாழ் முஸ்லிம்களுக்கு சகல விடயங்களிலும் முன்னுரிமை வழங்கப்படுதல் அவசியமானது.



யாழ் மாவட்டத்திலிருந்து லட்சக்கணக்கான தமிழ் மக்கள், தாங்கள் வாழ்ந்த மாளிகை போன்ற வீடுகளையும், தோட்டந்துரவுகளையும், கால் நடைகளையும் இழந்து குடாநாட்டுக்கப்பால், கொட்டில்களிலும் மரங்களுக்குக் கீழும், தெரு ஓரங்களிலும் சொல்லவொண்ணா துயருடன், அரைவயிறு, கால் வயிற்றுக்கே உணவின்றி அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு தாய் பிள்ளைகள் போல் ஒருவர் சுக, துக்கங்களில் மற்றவர் பங்கேற்று அந்நியோன்யமாக பாசத்துடன் வாழ்ந்து பழகிய தமிழ் மக்கள் அங்கில்லாத இடத்தில் நாம் எவ்வாறு போய் குடியமர்வது?

நாம் போய் மீளக் குடியமர்வதை புலிகளும் வரவேற்கின்றனர். அண்மையில் இந்திய நிருபர், பன்னீர்ச்செல்வம் அவர்களுக்கு புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அளித்த பேட்டி இதற்குச் சான்றாகும். லண்டன் பி.பி.சியில் ஒலிபரப்பப்பட்ட இப் பேட்டி உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். இருந்தபோதிலும் அதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கேள்வி: யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்

பதில்: அது ஒரு தவறு. அவர்கள் எப்போது வேண்டுமானாலும் வந்துமீளக் குடியமரலாம். அவர்களுக்குரிய உரிமைகளையும், சலுகைகளையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

மேற்கூறிய பேட்டியிலிருந்து தெரியவருவது என்னவெனில், புலிகள் தாம் விட்ட தவறை உணரத் தலைப்பட்டு விட்டார்கள். இருந்த போதிலும் உறுதியான ஒரு நிலைப்பாடு ஏற்படாத வரை மீளக் குடியமர்வது சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகும்.

எனவே இவ்வேளையில், யாழ் முஸ்லிம்கள் மத்தியிலுள்ள கல்விமான்களும், புத்தி ஜீவிகளும், அரசியல்வாதிகளும், சமூகப்பற்றுடையோரும் சிந்தித்து செயலாற்ற வேண்டியது மிக, மிக அவசியமாகும். நமக்கென்ன என ஒவ்வொருவரும் வாழாதிருந்தால் எமது வருங்கால சமுதாயம் தான் பாதிப்புறும். நாம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் சில விடயங்களில் அலட்சிய போக்குடன் செயல்பட்டதால், தடியெடுத்தவன் எல்லாம் வேட்டைக்காரனாகி அதனால் எத்த

→ *2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பாலியல் உறவிலும் அசமத்துவம்தானா?

## பெண்களும் குடும்ப உறவுகளும் — 04

**சந்ததி மறுஉற்பத்தியும் பாலியல் தேவையும் பற்றியது:**

திருமணம் என்பது எமது தமிழ்ச் சமூகத்தில் எதிர்பாலார் (ஆண்-பெண்) இருவரும் உடலுறவு (Herto Sexual) கொள்வதற்கு அனுமதியளிப்பது போலாகும். இப் பாலியல் தேவை என்பது ஒவ்வொரு விலங்குகளினதும் (மனிதன் உட்பட) இயல்பூக்கம் ஆகும். இதனைக் கட்டுப்படுத்தவோ, நசுக்கவோ முயன்றால் வேறுவழிகளில் உளவியல் பாதிப்புக்களை உருவாக்கும் என உளவியலாளர்கள் கூறுகின்றார்கள். இந்தப் பாலூக்கமானது குழந்தைப் பருவம் முதல் வெளிப்படுவதை நாம் அவதானிக்கலாம். ஆனால் எமது குடும்ப நிறுவனமானது அது தவறான பழக்கம் எனக் கட்டுப்படுத்தும் அதனால் குழந்தை பயந்து கட்டுப்பட்டதாக செயற்படுவதும் தவறான வழிநடத்தலேயாகும். அதே போல் வயது வந்தவர்களின் பாலியல் தேவையை பூர்த்தி செய்வதன் வழிமுறையாகவே திருமணம் அமைகிறது என்பது உண்மையென்றபோதிலும் பெண்கள் அந்தப் பாலியல் தேவை என்பதை எந்தளவிற்கு புரிந்து கொண்டுள்ளார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. திருமணம் அதாவது குடும்பம் என்ற நிறுவனத்தினுள் பெண்ணோ, ஆணோ பலவித கற்பனையில் புகுந்து கொள்வதும், பின்னர் யதார்த்த பூர்வமாக சில அனுபவங்களைப் பெறுவதும் கசப்பான உண்மைகளாகும்.

பாலியல் தேவையினை பூர்த்தி செய்வதன் விளைவாகவே சந்ததிமறு உற்பத்தி என்பது சாத்தியமாகிறது. எமது சமூகத்தில் ஒவ்வொரு பெண்ணும் தமது பாலியல் திருப்தி என்பதற்கு மேலாக தாயாக வேண்டும் என்றே விரும்புகிறாள். இவர்கள் பாலியல் திருப்தி (Orgasm) என்பதை பெற்றுக் கொள்ளும் முன் தாயாகும் போது திருப்தியடைகிறார்கள். இயற்கைக்காரணிகளால் சிலசமயம் சந்ததி மறு உற்பத்தி நடைபெற முடியாமல் போனால் ஏதோ ஒரு மிகப் பாரிய குறைபாடுடையவர்கள் போல் பேதலிக்கிறார்கள். குழந்தை பெறுவது என்பது கஷ்டங்களின் மத்தியில் உருவாக்கப்படுவது ஆகும். இவ்வாறு ஏதோ ஒரு காரணத்தால் பெண் தாயாகும் சந்தர்ப்பம் கிடைக்காமல் போகுமானால் உடனேயே பெண்ணையே குற்றம் சாட்டி ''மலடி'' எனப் பட்டமும் சூட்டி விடுகிறார்கள். இங்கெல்லாம் ஆணிடம் குற்றைபிருந்தாலும் கூட பெண்ணையே குற்றவாளி கூண்டில் நிறுத்திப்பார்ப்பது என்பது இந்த ஆணாதிக்க சமூகத்தின் குறைபாடேயாகும். இதற்கு பெண்களும் பழியாகி குற்றவுணர்வடைவது என்பது ஒரு வேடிக்கையான விடயமாகும்.

இனி எதிர்ப்பால் பாலியல் உறவு (Hetro Sexual) பற்றிய உண்மைக் கருத்துக்கள் சிலவற்றைப் பார்ப்போம். பெண்ணிலைவாதிகள் பாலியல் உறவுபற்றி ஓர் ஆய்வு செய்த போது பின்வரும் முடிவுகள் கிடைத்தன. அஃது எதிர்பால் பாலியல் உறவில் ஈடுபடும் போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆண் 100% திருப்தியடைகிறான் எனவும், ஆனால், பெண்களில் 30% மானோர் மட்டுமே திருப்தியடைகிறார்கள் எனவும் கூறப்படுகின்றது. அதனால் பெண்ணிலைவாதிகள் இந்த (Hetro Sexual) எதிர்பால் பாலுறவு என்பது பரஸ்பரம் என்பதற்கு மேலாக பாரபட்சமான உறவு முறை எனக் கூறுகிறார்கள்.

எனவே எதிர்பால் பாலுறவில் ஈடுபடும் மிகுதி 70% பெண்களின் திருப்தி என்பதை ஆண்கள் எவ்வாறு புரிந்து கொள்வார்கள்? என்பது எமது சமூகத்தைப் பொறுத்தவரை கேள்விக்குறியாகவே உள்ளது. எனவே குடும்ப நிறுவனத்தில் எதிர்பால் பாலுறவு என்பது அசமத்துவ பாலுறவு நீடிப்பாகவே அர்த்தப்படும். ஆனால் இந்த ஆய்வு உண்மைகள் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை இன்று வரை அறியப்படாத விடயமாகவே இருக்கும் என நம்புகிறேன். எனவே பாலியல் உறவு என்பதை பெண்கள் தான் தேடிக்கற்பிக்கவேண்டும். ஏனெனில் அந்த உறவில் பாதிப்பிற்கு உள்ளாகுபவர்கள் இவர்களேயாவர். பெண்கள் பாலியல் தொடர்பாக மற்றவர்களுடன் பேசவோ கருத்தைப் பகிர்ந்துகொள்ளவோ முடியாதளவிற்கு குறுகிய வட்டத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவை பேசப்படாத விடயங்களாக (இன்றும் சமூகத்தில்) காணப்படுவதினால் பாலியல் தேவையின் திருப்தி (Orgasm) என்பது பல பெண்களுக்குத் தெரியாமலேயே உள்ளது.சில சமயம் இவர்களுக்கு குழந்தைகள் இல்லாவிடின் தம்மில் ஏதோ குறைபாடு இருப்பதாகவும், அதனால் தான் குழந்தைப்பேறு கிடைக்கவில்லை எனவும் தம்மைத்தாமே குறைப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் நெருங்கிப்பழகும் பெண்கள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. எனவே இங்கு பெண்கள் பாலுறவு என்பதை பேசும் பொருளாக்கி மற்றவர்களுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் குறைந்த பட்சம் அவர்களுடைய குற்றவுணர்வு தவறானது என்பதையாவது புரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என நம்புகிறேன். ஆனால் பல மேலை நாடுகளில் பாலியல் கல்வி (Sexual Education) என்பது ஒரு பாடமாகவே கல்விச்சாலைகளில் போதிக்கப்பட்டு வருகிறது. நமது குழந்தை என்பதில் ஆண்- பெண் இருவரும் திருப்தியடைந்தாலும் கூட சந்ததி மறு உற்பத்தி என்பது ஒரு பெண்ணின் உடல் நலம் பற்றிய விடயம் என்பதால் எத்தனை குழந்தைகளை பெறுவது? எப்போது பெறுவது? தேவையில்லாதபோது அதனைக் கலைப்பது என்பதெல்லாம் அவள் கட்டுப்பாட்டிற்குள் நிகழவேண்டும்.அதனை விடுத்து ஆணுக்கு வாரிசைப் பெற்றுக்கொடுக்கும் இயந்திரமாகப் பெண்ணைப் பயன்படுத்துவது, அவள் பத்துமாதம் படாத பாடு பட்டு சுமந்து பல கஷ்டங்களை அனுபவித்து பெற்றாலும் கூட தனது குழந்தை அல்லது தனது வாரிசு என தாயை வைத்து இனம் காணாது விடுவது என்பதெல்லாம் ஆணாதிக்க கருத்தியலேயாகும். இங்கு பெண் தான் கீழானவள் என ஏற்றுக் கொள்வது போலவே அவளது உடன்பாடு அர்த்தப்படுத்தப்படும்: அதாவது ஆணாதிக்க கருத்தியலுக்குப் பலியாகிப்போகும். இதனால் பெண்,குழந்தை பெறுவது முதல் வாரிசு உரிமை வரை அனைத்து விடயங்களிலும் ஆண்தான் தீர்மானிப்பது சரி என ஏற்றுக்கொள்கிறாள்.

எனவே பாலியல் தேவையும் மறு உற்பத்தியும் பற்றி குடும்ப நிறுவனத்தினுள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்வோமாகில் பாலியல் திருப்தி என்பதும், எதிர்பால் பாலுறவு என்பதும் அசமத்துவ உறவாகவே நீடித்து வருகிறது. இந்த திருப்தியின்மையென்பது பற்றி பெண் வெளிப்படையாகவே பேசாவிட்டாலும் எங்கோ ஓரிடத்தில் குடும்ப நிறுவனத்தினுள் உடைசல் ஏற்படுவதன் மூலம் பிரதிபலிக்கும். ஆனால் இந்த பாலியலில் திருப்தியின்மையே இவ்வாறு வெளிப்படுகிறது என இவர்களாலும் ஏன் இவர்களின் கணவன்மார்களினாலும் கூட இனம் காணமுடியாது. அடுத்து மறு உற்பத்தியை பாரபட்சமான முறையில் ஆணே தீர்மானிப்பது என்பதும் ஒரு வித அடக்குமுறையே என்றால் மிகையாகாது. இங்கு கஷ்டங்களை அனுபவிக்கும் பெண்ணே இவற்றை கேள்விக்குட்படுத்தி விழிப்புணர்வைப் பெறவேண்டுமே தவிர ஆண்கள் ஒரு போதும் தமது அதிகாரத்தை விட்டுக்கொடுப்பவராக குறைந்த பட்சம் ஜனநாயக உறவைப் பேணுவராகக் கூட இருக்கமாட்டார், என்பதே கசப்பான உண்மையாகும்.

**சமூக கருத்தியலின் (சித்தாந்த) மறு உற்பத்தி பற்றி.....**


சமூக கருத்தியலின் மறு உற்பத்தி என்பது பலம் வாய்ந்த ஒன்றாகும். நமது சமூகத்தில் 99% வீதமானோர் சமூக கருத்தியலின் தாக்கத்திற்கு உட்பட்டவர்களேயாவர். இந்த சமூக கருத்தியல் யாராலும் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியாதளவிற்கு பாலூட்டும் போது தொட்டு மெல்ல மெல்ல ஒவ்வொருவருக்கும் ஊட்டப்படும் விடயமாகும். இந்த சமூக கருத்தியலினுள் மதம், கலாசாரம், குடும்பம், ஆணாதிக்கம், சட்டம், அரசு போன்ற நிறுவனங்களை உள்ளடக்கலாம். இந்தக் கருத்தியல்கள் தானாக தோன்றிய இயற்கை அம்சங்கள் அல்ல. திட்டவட்டமாக தெளிவாக மானிடனால் பின்பற்றக்கூடியவகையில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு விடயம் ஆகும். உதாரணமாக மதக் கருத்தியலை எடுப்போமாயின் அது உருவம் அல்லது உருவமற்ற முறையில் மானிடரைத் தொடர்புபடுத்தி பல அர்த்தங்களையும், நம்பிக்கையினையும் உருவாக்கியுள்ளது. அந்த நம்பிக்கையில் குழந்தைப் பேறு என்பதைக் கூட இறைவனின் கொடை என அர்த்தப்படுத்திக்கொள்வர். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் ஒரு பெண்ணில் ஆயிரக்கணக்கான முட்டைகள் உருவாகும் என்றால் அவள் குடும்ப நிறுவனத்தினுள் சென்று பாலுறவில் ஈடுபடும்போது ஒவ்வொரு வருடமும் கருத்தரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு வருடமும் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டிருக்க முடியுமா? ஒரு காலத்தில் குடும்பத் திட்டம் என்றாலே என்ன என விளங்கிக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் இந்தக் கருத்தரிப்பே பெண்களுக்கு இயமனாக வந்ததுண்டு. ஆனால் இன்று விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் ஒரு பக்கம் வளர்ச்சியடைந்து சுகாதார மருத்துவப்படி இரண்டு குழந்தைகளுக்கிடையில் குறைந்த பட்சம் 3 வருடங்களாவது இடைவெளி இருத்தல் வேண்டும் எனவும், அத்துடன் பெண்ணின் உடல் நிலை, விருப்பு, குடும்ப வருமானம் என்பவற்றைப் பொறுத்து குழந்தைகளின் எண்ணிக்கைகளை மட்டுப்படுத்திக் கொள்ளலாம் எனவும் கூறப்படுகிறது.

எனவே இன்றைய காலகட்டத்தில் ஒரு பெண் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் கருத்தரிக்கும் நிலை ஏற்பட்டால் மதக் கருத்தியலுக்கு கட்டுப்பட்டு இறைவனின் கொடை என பொறுத்துக்கொள்ள முடியாதளவிற்கு அறிவு முரண்படுகின்றது. இதனால் அவள் கருக்கலைப்பு செய்து கொள்வது சர்வசாதாரணம். ஆனால் இரகசியமாகவே களவு செய்பவர் போல் குற்றவுணர்வு அடைபவர்களும் உண்டு. ஆனால் கரு சுமப்பது, கலைப்பது, என்பதெல்லாம் ஒரு பெண்ணின் விருப்பு, உடல்நிலை சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் அது அவளுடைய உரிமையும் கூட. எனவே மதக் கருத்தியல் அதனை சிசுக் கொலை என அர்த்தப்படுத்திக் கொண்டாலும் கூட இன்றைய காலகட்டத்தில் அதனை பலர் மீறவே செய்கிறார்கள். இலங்கையில் ஒவ்வொரு நாளும் ஏதோவொரு காரணத்தால் ஆயிரம் பேர்வரை கருக்கலைப்பு செய்து கொண்டேயிருக்கிறார்கள். இங்கு கருக்கலைப்பு நிகழ்வு சட்டரீதியாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து நாம் ஒரு தெளிவான முடிவிற்கு வரலாம். மதக் கருத்தியல் எவ்வளவு பலம் வாய்ந்த கருத்துக்களை கொண்டிருந்தாலும் கூட அவசியத் தேவையான தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் அவற்றுடன் முரண்பட்டு வேறுமுடிவுகளை நடைமுறை வாழ்க்கையில் எடுப்பதற்கு வழியமைக்கின்றது. இதிலிருந்து மதக்கருத்தியல் எவ்வளவுதான் அர்த்தப்படுத்தலுடன் பலம் வாய்ந்ததாக இருந்தாலும் கூட அறிவுத்துறையுடன், யதார்த்த வளர்ச்சிப்போக்குடன் வெற்றியீட்ட முடியாதளவிற்கு தோல்வியைத் தழுவியுள்ளது என்பதே உண்மையாகும்.

அடுத்து குடும்ப கலாசார கருத்தியலை நோக்குவோமாயின் இவை நேரடியாக செயற்படுவதில்லை. குடும்ப நிறுவனம், குழந்தைகளை சமூக இசைவாக்கமடையச் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இங்கு சமூக இசைவாக்கம் என்பது சமூகம் ஏற்றுக்கொண்ட நியமங்களை ஒரு குடும்பத்திலும் அந்தக் குழந்தை வளரும் போது அன்றாட சாதாரண நிகழ்வுக் கூடாகவே அவர்களின் மனதில் ஆழப்பதியவைத்தல் அதாவது அவற்றை உள்வாங்கி நடத்தல் - என்பதாகும்.

இந்தச் சமூக இசைவாக்கம் குடும்பத்தில் குழந்தை வளர்ப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் குறிப்பிட்ட அடையாளப்படுத்தல்களை கற்றுக் கொடுக்கின்றது. பெண் குழந்தைக்கு பொம்மை, விளையாட்டு சட்டிபானை என்பவற்றைக் கொடுத்தும், ஆண் குழந்தைகளுக்கு வீரம், பலம் என்பதை அடையாளப்படுத்துவதற்காக துப்பாக்கிகள், வாகனங்கள் போன்றவற்றைக் கொடுப்பதும் குறிப்பிடத்தக்க தாகும். இங்கு குடும்பத்தில் திரும்பத் திரும்ப ஒரே விதமான பாத்திரங்கள், நடத்தைகள் குழந்தைகளின் ஆழ்மனதில் பதிந்து விடுகின்றன. பெண்குழந்தைக்கு முன்மாதிரியாக தாயாரைப் பார்த்துக் கற்றுக்கொள்ளும். ஆனால் ஆண்குழந்தைக்கு தந்தையின் உண்மையானப் பாத்திரம் விளங்கமுடியாதளவிற்கு இருப்பினும் அது வேறு சமூக இசைவாக்கும் நிறுவனங்களாகிய பாடசாலை, ஒத்தார் குழு, சமூக யதார்த்தம் (தொலைத்தொடர்பு) வெகுஜன சாதனங்கள் இவற்றைப் பார்த்து கற்றுக்கொள்ளும். எனவே குடும்ப கருத்தியலின்படி குடும்ப நிறுவனத்தில் சமூக இசைவாக்கம் என்பது (Gender) பால்வேறுபாடு பற்றிய கருத்தியலையே மறை முகமாக பலப்படுத்துகிறது. அதாவது மறுஉற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த பலப்படுத்தல்களில் பெண் என்றால் அழகு, அடக்கம், ஒழுக்கம், என சினிமாக்களின் மூலம் காட்டப்படுகின்றது. கலை, இலக்கியம், மதம், சினிமா, போன்ற தொடர்புத்துறைகள் பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்தாலும், சினிமாத்துறையை எடுப்பின் இங்கு அழுத்தம் கொடுக்கப்படும் ஒழுக்கம் குறிப்பாக ஒரு தார மணம் அதாவது ஒருவனுக்கு ஒருத்தி என்பதெல்லாம் அதில் பங்கு கொள்பவர்களை மீறவே செய்கிறது. இவர்கள் தம் மளவில் பாலியல் ஒடுக்குமுறையை எதிர்த்து தமது நடைமுறை வாழ்க்கையில் செயற்பட்டபோதும், இது சமூகத்திற்கு வேறு அர்த்தத்தையே கொடுக்கின்றது. இதிலிருந்து சமூகத்தில் வலியுறுத்தப்படும் கருத்தியல் என்பது திட்டமிட்டு ஒருதலைப்பட்சமாக ஒழுங்கமைக்கப்பட்டதே என்றால் மிகையாகாது.

ஆகவே ஒரு மனிதனின் ஆளுமையினை வளர்த்துச் செல்வதில் இந்தச் சமூக கருத்தியல்கள் முக்கிய பங்களிக்கின்றன. தமிழ்ச் சூழலில் வாழும் ஒரு குழந்தையின் நடத்தைக்கோலத்திற்கும் தற்போது அகதிகளாக தஞ்சம் கோரி வேறு நாடுகளில் புலம் பெயர்ந்தவர்களில் அங்கத்தேய சூழலில் வளரும் ஒரு குழந்தையின் நடத்தைக்கோலத்திலும் வேறுபாடு காணப்படவே செய்யும். அது நாம் விரும்பாவிட்டாலும் கூட அந்த இடத்தின் சூழலில் பலம் மிகுந்து இருக்கும் சமூக கருத்தியல்களைக் குழந்தைகள் உள்வாங்குவது தவிர்க்க முடியாததாகும். இதனை நாம் கண்களாலேயே பார்க்கக் கூடியதாக உள்ளது. வெவ்வேறு நாடுகளில் சமூக கருத்தியல்கள் அவர்களுடைய வளர்ச்சிகளுக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டே உள்ளது. நாம் கலாசாரம், மதம், குடும்பகலை, இலக்கிய, சட்ட நிறுவனங்கள் மூலம் சமூக கருத்தியல்களை எவ்வளவுதான் அழுத்தம் கொடுத்தாலும் அறிவுத்துறையின் வளர்ச்சியில் இவை தோல்வியுறவே செய்யும் என்பதே உண்மையாகும். எமது தமிழ்ச் சமூகம் இன்று நியமம் என ஏற்றுக்கொண்டவை எப்படி புலம் பெயர்வுடன் மாற்றமடைகிறதோ அதே போல் வளர்ச்சிப் போக்கில் கருத்தியல் மாற்றங்கள் உருவாகியே தீரும் என்பதை யாராலும் மறுத்து விட முடியாது.



**அடுத்த இதழில்**
**உளவியல் தேவை பற்றிய**

**- இராசம்மா அனாமிகா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தமிழிலாவது தேசியகீதமாவது.....!

அரசாங்கம் தனது தீர்வுத்திட்டத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் சமர்ப்பிக்க விருப்பதாக அரசுக்கு நெருக்கமானவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். அதே வேளை புதிய அரசியலமைப்புக்கான வேலைகளும் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறன. இந்த அரசியலமைப்பில் இலங்கை பெளத்த நாடென்பதையும் வலியுறுத்தியிருப்பதாக தெரியவருகிறது. **'இலங்கை பெளத்த மதத்திற்கு முதன்மை அளிக்கும்'** என்ற ஏற்பாடு (1970இல் பதவிக்கு அமர்ந்த) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 1972ல் அறிமுகப்படுத்திய அரசியலமைப்பிலேயே முதற்தடவையாக கொண்டுவரப்பட்டிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசாங்கம் புதிதாக அறிமுகப்படுத்தவிருக்கிற அரசியலமைப்பில் தேசியக்கொடி, தேசிய கீதம், தேசிய பூ, தேசிய பறவை போன்ற தேசிய சின்னங்களிலும் மாற்றங்களைக் கொண்டு வரப்போவதாக சில மாதங்களுக்கு முன்னர் பேசப்பட்டது. தேசியக்கொடியில், நிற ரீதியில் வேறுபடுத்தி இனங்களை பிரதிநிதித்துவப்படுத்திய போதும் மேலதிகமாக சில வலியுறுத்தல்களும் இடம் பெறுகிறது. அவை, தேசியக்கொடியில் நான்கு மூலைகளிலும் உள்ள அரசிலை, பெளத்தத்தை குறிப்பதாகவும், சிங்கம், சிங்கள இனத்தை குறிப்பதாகவும் இருக்கிறது.

தேசியகீதத்திலும் கூட இச்சர்ச்சை இருந்தது. உதாரணத்துக்கு நமோ நமோ தாயே என்பதில் த... ல்லாத 'நமோ' எனும் பதம் பயன்படுத்தப்படு...து பற்றியும் ஆரம்பத்தில் கேள்வி எழுப்பப்பட்டன. இலங்கை என்று தமிழில் சொல்லாடப்பட்டது இல்லாமல் போய் 'ஸ்ரீலங்கா' என்ற சிங்களச் சொல்லையே தமிழில் புகுத்தியதிலும் இந்ததேசிய கீதத்திற்கு பங்குண்டு என்பதும் முக்கியமானது.



ஹிக்கடுவை பிரதேச சபை உறுப்பினர் திரு.நிவ்டன் ஹெட்டிஆராச்சி

தேசிய சின்னங்கள் உட்பட தேசியகீதம் எல்லாம் மாற்றப்படப் போகிறது என்ற கதை பேசப்பட்ட போது சிறுபான்மை சமூகங்களது நலன்களும் அதில் பேணப்படும் என்ற எதிர்பார்ப்புடன் சிறுபான்மை சமூகங்கள் காத்திருந்த வேளையில் தேசிய கீதம் பாடப்பட்டது பற்றிய சர்ச்சையில் அரசாங்கம் நடந்து கொண்ட முறை, அரசாங்கத்தின் அரசியலமைப்பு மீதான சந்தேகங்கள் வலுப்பட காரணமாகியுள்ளது.

## சர்ச்சையின் தொடக்கம்

***"கடந்த செப்டம்பர் 2ம்திகதி பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியின் போது தமிழ் மொழியில் தேசியகீதம் பாடப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்தப்படும்"*** இவ்வாறு பாராளுமன்றத்தில் சந்திரிகா அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளரும், தொடர்பு சாதன உல்லாச விமானப்போக்குவரத்து அமைச்சருமான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்திருந்தார். ( லங்கா தீப7.9.95)

நடந்தது இதுதான் பண்டாரநாயக்கா சர்வதேச கல்வி நிறுவனத்தில் கற்பிக்கப்பட்ட தமிழ், ஜப்பானிய மொழிப்பயிற்சிகளை முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமே செப்டம்பர் 2ம் திகதியன்று நடந்திருந்தது. கற்கைநெறியில் தமிழ் மொழி கற்ற சிங்கள மாணவர்களைக் கொண்டு தமிழில் தேசியகீதம் பாடச்செய்யப்பட்டிருந்தது. ( இந்த வைபவத்திற்கு தலைமை தாங்குவதற்காக பிரதமர் ஸ்ரீமாவோ அழைக்கப்பட்டிருந்தார். என்ற போதும் அன்று அவர் அதில் கலந்து கொள்ளவில்லை.) இப்பாடலை ஒன்பது மாணவிகளும் பதினொரு மாணவர்களும் பாடினர். அப்போதுதான் கிளம்பியது சர்ச்சை, அந்த வைபவத்தில் கலந்துகொண்டிருந்த ஒருசாரார் இப்பிரச்சினையை கிளப்பினர். 'இனவாத நோக்கமற்ற ரீதியில் சகல தேசத்தவர்களும் கெளரவிக்க வேண்டிய தேசயகீதத்தை இப்படி மொழிபெயர்த்து எங்கள் இளைஞர் யுவதிகளாலேயே பாடச்செய்தது மிகப் பெரிய குற்றம். இந்த வெட்கம் கெட்ட செயலுக்கு பொறுப்பானவர்கள், இதனை அவ்விளைஞர்களுக்கு அறிவுறுத்தாமை இன்னும் ஒரு குற்றம்' என்று கூறினர்.

''பல இனங்கள் வாழுகின்ற இந்தியாவில் இந்தி மொழியிலேயே தேசியகீதம் பாடப்படுகின்றது. நாங்கள் கூட அதற்கு எந்த அளவு மதிப்பு கொடுக்கிறோம். எமது தேசியகீதத்தை சிங்களத்தில் இருந்து மொழிபெயர்த்துப் படிக்கும் அளவிற்கு எமது நாடு இன்னமும் இழிநிலைக்கு உள்ளாகவில்லை'' இது இன்னொருவர். (திவயின 4-9-95)

இந்த வைபவத்தின் போது சில பழைய சிங்களப் பாடல்களும் அதே மெட்டில் தமிழ் மொழியில் பெயர்க்கப்பட்டு பாடப்பட்டு இருந்தன. இதனை சகிக்காத சில இனவாத தரப்பினர் இவற்றைப் பெரிதுபடுத்தி பூதாகரமாக்கினர்.

இது தொடர்பாக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (ஐ.தே.க.) பிரதீப் ஹப்பங்கம பாராளுமன்றத்தில் கீழ் வருமாறு கேள்வி எழுப்பி இருந்தார்.

***"பண்டாரநாயக்க மகாநாட்டு மண்டபத்தில் நடந்த வைபவத்தில் தமிழில் தேசியகீதம் பாடப்பட்டதாக பத்திரிகையில் செய்திகள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டில், பல மொழிகளில் தேசியகீதம் அமைந்திருக்கி முடியாதென்பதை உங்களுக்குப் புதிதாகச் சொல்லித்தரத் தேவையில்லை.***

***அப்படியிருக்கும் போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தாலோ அல்லது வேறு நபர்களினாலோ அல்லது வேறு நிறுவனங்களினாலோ இலங்கை தேசியகீதம் வேற்று மொழிகளில் ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்தால் அந்த நடவடிக்கையைப் புரிந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து தமிழ் மொழியில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட கீதத்தை தடைசெய்ய நடவடிக்கை எடுக்க மாட்டீர்களா?"***

இந்த கேள்விக்கு பதிலளிக்கு முகமாகவே பாராளுமன்றத்தில் வைத்து **"தமிழில் தேசியகீதம் பாடப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்தப்படும்"** என பதில் கூறியிருந்தார் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க. இந்த வேடிக்கையான பதிலை கூறியதன் மூலம் அமைச்சர் சிங்கள பெளத்த பேரினவாதத்திற்கு எதிராக தம்மால் பொறுப்பான ஒரு பதிலைக் கூட கூற முடியாதென நீருபித்திருக்கிறார். இனவாதம் வளரக்கூடிய சகல சாத்தியமான சூழலையும் திறந்து விட்ட அரசு, தங்கள் கையையும் மீறி பேரினவாதம் வன்முறை வடிவத்தை பெறுகின்ற போது, வளர்த்து விட்ட அரசினால் கூட அதனை தடுத்து நிறுத்த முடியாமல் போகும் என்பது கண்கூடு. இந்தச்சம்பவம் இத்துடன் முடியவில்லை. நாடுமுழுவதும் இனவாதம் கேள்வியெழுப்பியது ''தமிழில் தேசியகீதம் ஏன்?'' என்பதே எங்கும் எழுப்பப்பட்ட கேள்வி.


## இனவெறி பிடித்த அம்மணங்கள்

ஹிக்கடுவ பிரதேச சபையின் மாதாந்தக்கூட்டத்திலும் 'தமிழில் தேசியகீதம்' பாடப்பட்ட அந்த நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பிரதேச சபை உறுப்பினர் நிவ்டன் ஹெட்டிஆராச்சி (ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி -ஒஸி அணி) தனது மேற்சட்டையை கழற்றி விட்டு வந்தார். அவருக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவர் சந்திரா டி சில்வா (ஸ்ரீலங்கா மக்கள் கட்சி - வை.பி.டி..பிரிவு) தனது ஜட்டியைத் தவிர அணிந்திருந்த ஆடை எல்லாவற்றையும் களைந்தெறிந்தார். இவர் அப்படிச் செய்தது நிவ்டன் ஹெட்டிஆராய்ச்சி எழுப்பிய பிரச்சினைக்கு பதிலளிப்பதற்காக அல்ல மாறாக அவர்களிருவரது தனிப்பட்ட அரசியலே இச்செய்கையில் செல்வாக்கு செலுத்தியிருந்தது. (லங்கா தீப-13-09-95)

இனவாதத்துக்கு பதில் கொடுக்ககூடிய எவரும் அ...கும் இருக்கவில்லை. இதற்கிடையில் ஜனாதிபதிக்கு ஒரு முறைப்பரடு சென்றடைந்தது. அதில் ''தேசியகீதம்- தமிழில் பாடப்பட்டதானது இலங்கையின் அரசியலமைப்பை மீறுகின்ற செய்கையாகும். இலங்கை அரசியலமைப்பின் படி தேசியகீதமானது ''நமோ நமோ மாதா'' என்றே தொடங்க வேண்டும். வட - கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசாங்க யோசனைகள் முன்வைக்கப்பட்டிருக்கிற இந்நேரத்தில் இப்படியான விடயங்கள் அதனை பாரதூரமாக்கும். எனவே இது தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும்'' என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அரச கூட்டுத்தாபனங்களின் தொழிற்சங்கத் தலைவர் 'ஏ.பீ.சீ. சில்வா' என்பவரே அந்த கோரிக்கை விடுத்தவர். (தினமின - 06-09-95)

இது இப்படியிருக்க செப்டம்பர் மாதம் 7ம்திகதி மேல்மாகாண சபைக்கூட்டத்தில் உரையாற்றிய மேல் மாகாண சுகாதார அமைச்சர் லக்ஷ்மன் அபே குணவர்த்தன இது பற்றி இப்படி கேள்வியெழுப்பியிருந்தார்.

''இலங்கையின் தேசியகீதம் தமிழ் மொழியில் பாடப்பட்டதாக 'திவயின' பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. இச்சம்பவம் மேல்மாகாணத்தில் நடந்த படியால் நாம் இவ்விடயத்தில் அவதானம் செலுத்த வேண்டும். இது மோசடிமிக்கதொரு செயல். இச்செயலைப் புரிந்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் அவசியமானது இது தொடர்பாக தேவையான ஆணையை இடுமாறு முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்'' (திவயின - 08-09-95)



பாராளுமன்றத்தில், மாகாண சபையில், பிரதேச சபையில்; ஏன் அதற்கு வெளியிலும் தமிழில் தேசியகீதம் பாடப்பட்டதை இனவாத நோக்கில் கண்டனம் தெரிவிக்கப்பட்ட போது இனவாத அமைப்புக்களில் ஒன்றான 'தேசபிரேமி பிக்கு பெரமுன' எனும் அமைப்பின் செயலாளரான பெங்கமுவே நாலக்க தேரோ எனும் பெளத்த பிக்கு வெளியிட்ட அறிக்கையில்

''தமிழில் ஸ்ரீலங்காவின் தேசியகீதம் பாடப்பட்டதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். இவ்வாறான தேசத்துரோக இனத்துரோக நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை நாடுகடத்த வேண்டும் என்றும், கேட்டுக் கொள்கிறோம். இது, சிறிய இலங்கையை உடைத்து பிளவுபடுத்தி தமிழ் தேசம் ஒன்றை உருவாக்குவதற்கு திட்டமிடும் 'தமிழ் ஈழ' வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக கொள்ளலாம்'' என குறிப்பிட்டுள்ளார். (திவயின-05-09-95)

***"திரிசிங்கலே" எனும் சிங்கள இனவாத (வாரப்)பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "தமிழில் தேசியகீதம் பாடப்படுவது சரியென சிலபேர் வாதிடுகிறார்கள். இது பைத்தியக்காரத்தனமான வாதம். இந்த நாட்டில் பெரும்பான்மையாகப் பேசப்படும் மொழி சிங்களம். அதைப்புரிந்து கொள்ளாமல் பன்மொழி, பல்லின, பல்மத நாடு என அர்த்தப்படுத்துவது முட்டாள்தனம் நாட்டில் பெரும்பான்மை மக்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் சிறுபான்மையினர் வாழவேண்டும்". (திரிசிங்கலே - 03-09-95)***

இப்படியாக இந்தப்பிரச்சினை உயர்த்திப்பிடிக்கப்பட்டு சர்சைக்குள்ளாகியிருக்கிற நேரத்தில் அரசதரப்பில் இருந்தாவது இதற்கு சரியான பதில் கொடுக்கப்படுமா என எதிர்பார்க்கப்பட்ட போதும் இறுதிவரை இனவாதத்திற்கு பதிலடி கொடுக்க அரசு முன்வரவில்லை மாறாக 'தமிழில் தேசியகீதம் பாடப்பட்டது தொடர்பாக விசாரணை செய்யப்படும்' என்று தமிழ் மக்களின் முகத்தில் அறைந்தாற் போல் ஏமாற்றமான பதிலை தந்தது மட்டுமல்லாது அரசாங்கத்தரப்பு பாராளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் தமிழில் பாடப்பட்டதைக் கண்டித்தும் இருப்பது சந்திரிகா அரசாங்கத்தின் இனவாத ஒழிப்பினதும் த்மிழ் மக்கள் மீதான பச்சாதாபத்தினதும் போலித்தனத்தை தோலுரித்துக்காட்டுகிறது.

இவையெல்லாவற்றையும் விட சந்திரிகா அரசாங்கம் 'புதிய அரசியலமைப்பு' என்றும் 'இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் என்றும் செயற்படுவதாக வெளியுலகிற்கு காட்டிக்கொண்டிருக்கிற நிலையில் தேசியகீதம் தமிழில் பாடுவது தொடர்பாக கூட தெளிவான நிலைப்பாடு இல்லையென்றால் அரசியலமைப்புத்திட்டம், தீர்வுத்திட்டம் என்பனவெல்லாம் வெறும் கதையலப்புக்கள்தான் எனச்சொன்னால் அதில் தவறேதும உண்டோ?

இதிலுள்ள கவலைக்கிடமான இனனுமொரு விடயம் என்னவென்றால் இச்செய்கையை கண்டித்து எந்த சமாதான இயக்கங்களும் கருத்து தெரிவித்திருக்கவில்லை. அதை விட கவலைக்கிடமானது என்னவென்றால் பாராளுமன்றத்தில் அமைச்சர் தர்மசிறியின் உரையின் போது சமூகமளித்திருந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு தக்க பதில் கொடுத்து கண்டிக்காதது.

வேரூன்றியிருக்கிற பேரினவாத கருத்தியல் கட்டமைப்பில், ஆட்சி புரிகின்ற எந்த சிங்கள அரசாங்கமும் இவ்விடயத்தில் விதிவிலக்கல்ல என்ற கூற்று மேலும் மேலும் ஊர்ஜிதப்படுத்தப் பட்டுக்கொண்டே செல்கின்றது என்பதுதான் மறைக்கமுடியாத உண்மை போலும்.

**என்.எஸ்.குமரன்**

## தேசிய கீதம் பற்றி...

**இலங்கையின் தேசியகீதமானது ஆனந்த சமரக்கோன் என்பவரால் இயற்றப்பட்டு 1951ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம்திகதி பாராளுமன்றத்தில் அங்கீகாரத்தைப் பெற்றது. இதனை முதன் முதல் தமிழுக்கு மொழிபெயர்த்தவர் முத்தமிழ்ப் புலவர் நல்லதம்பி அவர்கள். 1950களின் ஆரம்பத்தில் இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் முதலாவது யாழ் விஜயத்தின் போதும், தமிழில் இதுபாடப்பட்டது.**

**1955 பெப்பிரவரி 4ம்திகதி இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் தமிழில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இக்கீதத்தை தமிழில் மீனா, சங்கரி ஆகியோர் பாடியிருந்தனர். இவ்விசைத்தட்டின் இலக்கம் T- 11/96ஆகும்.**

**1970ம் ஆண்டு பதவியேற்ற ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின் நியமிக்கப்பட்ட விசேட குழுவொன்றின் விசாரணையின் பின் தமிழ் மொழியில் தேசியகீதம் தொடர்ந்து ஒலிபரப்பப்பட்டது. அதுமட்டுமன்றி 1985ம் ஆண்டில் இருந்து (ஐ.தே.கட்சியின் ஆட்சியின் போதும்) வெளியிடப்பட்ட தமிழ் பாடசாலைப் புத்தகங்களில் கூட தேசியகீதம் தமிழிலேயே அச்சிடப்பட்டது. இலங்கையின் 1978ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் தமிழ் பதிப்பில் கூட தேசிய கீதம் "ஸ்ரீலங்கா தாயே" என்றிருக்கிறது. இருப்பினும் அத்தேசியகீதத்தின் இடையில் நமோ நமோ தாயே என்றும் தொடர்கிறது. நமோ என்பது தமிழ் சொல்லே அல்ல என்றும் அதனை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் தமிழர் தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வருகின்ற போதும் தமிழிலே தேசியகீதம் பாடக்கூடாது என்ற கோசம் இப்போது எழுந்துள்ளது.**

**எழுபதுகளில் வடகிழக்கு எங்கும் இத்தேசியகீதத்தை ஆக்கிரமிப்பு கீதமாகவே கருதி வந்தார்கள் தமிழ் மக்கள். இதன் காரணமாக பாடசாலைகளிலும் கூட்டங்களிலும் தேசியக்கீதத்திற்குப்பதிலாக தமிழ் வாழ்த்துப்பாடல் பாடிவந்தனர் என்பதும் முக்கியமானது.**

**பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 2வது ஈழயுத்தம் ஆரம்பமானதன் பின் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த வீ.ஜெ. மு. லொக்குபண்டாரவின் ஆணையின் பேரில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபணத்தின் தமிழ் சேவையில் தமிழில் தேசியகீதம் பாடப்படுவது நிறுத்தப்பட்டு அதன் இசை மாத்திரம் ஒலிபரப்பப்பட்டது. 1994 ஒகஸ்டில் ஆட்சிக்கு வந்த தற்போதைய சந்திரிகா அரசாங்கம் அதையும் மாற்றி தமிழ்ச்சேவை ஒலிபரப்பு முடிந்ததன் பின் சிங்களத்திலேயே தேசிய கீதத்தை ஒலிபரப்பும் வேலையை செய்தது.**

**பல மொழிகள் பேசும் மக்களையுடைய இந்தியாவில் இந்தி மொழியிலேயே தேசிய கீதம் பாடப்படுவதாகப் பேரினவாதத் தரப்பில் கூறப்படுகிறது. ஆனால், அதுவல்ல உண்மை. இந்தியாவில் பாடப்படும் தேசியகீதமான 'ஜன கன மன' கீதம் இந்தியாவின் தேசிய மொழியான இந்தியோ அல்லது இணைப்பு மொழியான ஆங்கிலமோ அல்ல. அது ரவீந்திரநாத் தாகூரால் எழுதப்பட்ட பெங்காலிமொழிப் பாடல் என்பதுதான் உண்மை.**

**... கீதம் இலங்கை எனும் தேசத்திற்கு சொந்தமானதா?**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒரே நாடு! ஒரே இனம்!

இலங்கையில் இதுவரை முன்வைக்கப்பட்ட அரசியலமைப்புகளிற்கு ஒரு நாடு, ஒரு இனம் (தேசம்) என்ற வகையில் இனக் குழுக்களிற்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியாது போனது. அதனாலேயே நாளுக்கு நாள் இனப் பூசல் உக்கிரமடைந்து நாடு இரண்டு மூன்றாகப் பிளவு படும் நிலைக்குள்ளாகியுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான சிரேஷ்ட விரிவுரையாளர் அமரசிறி த சொய்ஸா இவ்வாறு தெரிவித்தது கண்டி டீ.எஸ்.சேனாநாயக்க நூல் நிலைய கேட்போர் கூடத்தில் சர்வதேச விஞ்ஞான நிறுவனம் நடத்திய கருத்தரங்கில் உரையாற்றுகையிலாகும்.

மேலும் கருத்து தெரிவித்த விரிவுரையாளர் பின்வருமாறு கூறினார். எமது நாட்டில பெரும்பான்மை மக்கள் அரசியலமைப்பு மீது சந்தேகம் எழுப்பும் போது சிறுபான்மை இனங்கள் இயல்பாகவே அதனைச் சந்தேகிக்கின்றனர். எமது நாட்டின் அரசியலமைப்பின்படி சிங்கள பௌத்தர்கள், தமிழ், முஸ்லிம் மக்கள் இரு விதமாக நினைக்கின்றனர். அதனால் பௌத்த மதத்தை அரச மதமாகவும், பௌத்த மதத்தையும் ஊட்டி வளர்க்க அரசு கடமைப்படுவதும் மிகப் பயங்கரமானதாகும். மதம் என்பது தனிநபர் விருப்பத்திற்கேற்ப பின்பற்றப்படுகின்ற ஒன்றாகும். எமது நாட்டில் இருக்க வேண்டியது இலங்கையர் என்ற ஒரே இனம், இலங்கை என்ற ஒரே நாடு என்ற உணர்வைக் கொடுக்கும் அரசியலமைப்பொன்றேயாகும்.

ஆனாலும் குத்துவெட்டுப்பட்டுக் கொண்டு நாட்டை இரண்டு மூன்றாகப் பிளவு படுதததும் அரசியலமைப்புகளே இதுவரை முன் வைக்கப்பட்டுள்ளன.

நாடொன்றில் அரசியலமைப்பு சட்டமொன்று இருக்கும் போது மக்கள் அரசியல்வாதிகளின் பின்னால் செல்ல மாட்டார்கள். மக்கள் அரசியலமைப்பு மீது பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருப்பர். அப்போது நாடொன்றின் அரசியலமைப்பு உன்னத நிலைக்குள்ளாக்கும். அதன் பின் அது ஒரு சிவில் மதமாக மாறும். ஒருமைப்பட்ட நோக்குள்ள அரசியலமைப்புச் சட்டம் நிலவும் நாடுகளில் எந்த அரசியல் கட்சி ஆட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் மக்கள் பீதியுறுவதோ அல்லது கலவரத்திற்குட்படுவதோ இல்லை.

(திவயின 1996.01.09)

## வவுனியாவில் படுகொலை

வவுனியாவில் தியாகராஜா ஸ்ரீதரன் (35) என்ற இளைஞர் கழுத்து வெட்டப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். இவர் யு.என்.எச்.சீ.ஆரினால் வவுனியா சிதம்பரபுரத்தில் நிர்வகிக்கப்பட்டு வரும் நலன்புரி முகாமின் பொறுப்பாளராக கடமையாற்றி வந்தார். ஜனவரி 5ம் திகதி வெள்ளியன்று 6.45 மணியளவில் அலுவலகத்திலிருந்து வெளியேறிய இவர் வீடு வந்து சேரவில்லை. மறுநாள் காலையில் உள்சுற்று வீதியில் இவரது சடலம் கிடக்கக் காணப்பட்டது. அருகில் அவரது சைக்கில் கிடந்தது. அவரது பேர்சும் பைலும்; அருகிலுள்ள வளவிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வயர் அல்லது கம்பி போன்ற பொருளொன்றினால் கழுத்து நெரிக்கப்பட்டிருப்பதோடு நெஞ்சில் மூன்று கத்திக் குத்துக் காயங்களும் காணப்பட்டன. எனினும் அவரணிந்திருந்த ரி சேர்ட்டில் இரத்தக் கரை காணப்படாததால் இவர் கட்த்திச் செல்லப்பட்டு இரகசிய இடமொன்றில் வைத்து கொல்லப்பட்ட பின் இங்கு கொண்டு வந்து போடப்பட்டிருக்கலாமென கருதப்படுகிறது.

ஏற்கனவே ஒரு மாதத்திற்கு முன்னரும் வைரவப் புலியங்குளம் எனுமிடத்தில் ஒரு இளைஞனின் சடலம் கண்டெடுக்கப்பட்டிருந்தது. அவ்விளைஞனும் இதே பாணியிலேயே கொல்லப்பட்டிருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அரச இராணுவம்; பொலிஸார்; தமிழ் கட்சிகள் எல்லாம் முகாமிட்டிருக்கும் வவுனியா நகருக்குள் தான் இப்படுகொலை நடந்திருக்கிறது.

## STFஐ பலப்படுத்த வேண்டும்!

பொலிஸ் விஷேட அதிரடிப் படையை (STF) மீண்டும் புனரமைப்புச் செய்து பலப்படுத்த வேண்டுமென்ற யோசனை கடந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்டது.

கொமாண்டோத் தாக்குதல் பிரிவொன்றாக அமைக்கப்பட்ட இப் படைப் பிரிவு; கடந்த வருடத்தினுள் புலிகளின் கடுந் தாக்குதல்கள் பலவற்றிற்குப் பலியானமையே புனரமைப்பு யோசனைகளிற்கான காரணமெனத் தெரிய வருகிறது.

கொமாண்டோத் தாக்குதல் பிரிவொன்று இவ்வாறு பலமிழந்து கொண்டிருப்பது பொருத்தமற்றதெனவும், அதனைப் புனரமைப்புச் செய்யாவிடின் சிக்கல்கள் ஏற்படலாம் எனவும் இராணுவத் தளபதி ஜெரி சில்வா அக்கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(லக்பிம 1996.01.07)

## ஹொரணையில் அதிகாரப்பரவலாக்கம்

மாகாண சபை முறையைப் பின்பற்றி அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் வெற்றிகரமான வேலைத்திட்டமொன்று பற்றி பரிந்துரைப்பதற்காக மாகாண சபைகள் அமைச்சர் அமரசிறி தொடங்கொடவினால் ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் ஆலோசனைக்கமையவே அமைச்சர் இக்குழுவை நியமித்துள்ளார்.

குழுவின் தலைவராக எம்.குணவர்தன செயற்படுவதுடன் செயலாளராக ஏ.விஜேதுங்க செயற்படுகிறார். குழுவின் ஏனைய உறுப்பினர்கள் வை.டபிள்யூ.குணவர்தன, குணபால நாணயக்கார, என்.பத்மநாதன், எச்.ஏ.பீ.அபேவர்தன ஆகியோராவார்.

குழு, மக்களின் கருத்துக்களை எதிர்ப்பதால் அது பற்றி அக்கறை செலுத்துபவர்கள் குழுச் செயலாளருக்குத் தமது கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

(லக்பிம 1996.01.07)

## அதிகாரப் பகிர்வு குழு நியமனம்!

அதிகாரத்தைப் பரவலாக்கம் செய்யும் அரசின் தீர்வுத் திட்டம் தொடர்பாக மக்களை அறிவூட்டும் பகிரங்க சொற்பொழிவை உள்ளடக்கிய கருத்தரங்கொன்று ஜனவரி 14ம் திகதி அன்று ஹொரணை பொது நூல் நிலைய கேட்போர் கூடத்தில் பி.ப. 2.30க்கு நடத்த ஹொரண முற்போக்கு அமைப்புக்களின் கூட்டு நடவடிக்கை எடுத்துள்ளது.

அங்கு வரவேற்புச் சொற்பொழிவு மீன்பிடி, நீர்வள அமைச்சர் இந்திக்க குணவர்தனவால் நிகழ்த்தப்படுவதுடன் வரவேற்புச் சொற்பொழிவாளர்களினுள் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, பத்திரிகையாளர் எஸ்.சிவகுருநாதன் ஆகியோரும் பேசுவார்கள் கலாநிதி ஜயதேவ உயங்கொடவின் தலைமையில் அன்றைய தின கலந்துரையாடலை நடத்த அவ் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

(யுக்திய 1996.01.07)

## 666 வழக்குகள்

கடந்த வருடம் மாத்திரம் அரசாங்கத்திற்கு எதிராக 666 அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குகள் தொடுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. 1993இல் ஐ.தே.க.ஆட்சியின் போது இவ்வழக்குகளின் எண்ணிக்கை 486 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர பொ.ஐ.மு. ஆட்சி ஏற்ற வருடமான 1994இல் அரசுக்கு எதிரான மனித உரிமை வழக்கு 302 ஆக இருந்தது. இவற்றில் சட்டவிரோதமாக கைது செய்தல், தடுத்து வைத்தல், வதைபுரிதல் என்பவற்றுக்கெதிரான வழக்குகளும் அடங்கும்.

## யாழ்ப்பாணத்தில்..

னையோ விபரீத விளைவுகள் ஏற்பட்டதை யாரும் மறந்து விடக்கூடாது.

ஐந்து வருடகாலமாக அகதி வாழ்க்கை வாழுகின்ற நாம் இன்று அரசியலிலும் அனாதைகளாகி விட்டோம். எங்களுக்காக குரல் கொடுக்க எந்த முஸ்லிம் அரசியல் வாதியும் முன்வருவதில்லை. முஸ்லிம் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்குக் கூட எம்மைப்பற்றிச் சிந்திப்பதற்கு நேரமில்லை. ஒரு சில வேளைகளில் தமிழ்த் தலைவர்கள் எங்களுக்காகக் குரல் கொடுக்கின்றனர்.

ஆகவே, எங்களுடைய தலைவிதியை நாங்கள் தான் நிர்ணயிக்க வேண்டும். வருங்கால எமது சிறார்களின் நிலையை எண்ணி செயலாற்ற வேண்டிய தருணம் இதுவாகும். கட்சி பேதங்கள், இயக்க பேதங்கள் என்பவற்றை மறந்து ஒரே கொடியின் கீழ் ஒன்று திரள வேண்டிய சந்தர்ப்பம் எம்மை எதிர் நோக்கி உள்ளது.

இறுதியாக நான் கூற விரும்புவது என்னவெனில், நாங்கள் மீண்டும் எமது தாயகமாம் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள தமிழ் மக்களுடன் ஒட்டி உறவாடி வாழவே விரும்புகிறோம். சுருங்கக் கூறின், ஒட்டி வாழ விரும்புகிறோமே தவிர வெட்டி வாழ விரும்பவில்லை. எனவே முதலாவதாக, இடம் பெயர்ந்த எமது சகோதர தமிழ் மக்கள் மீண்டும் தத்தமது இடங்களுக்குச் சென்று தமது இயல்பு வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும். அரசும், ஆயுதக்குழுக்களும், தமிழ்க் கட்சிகளும் எமது எதிர்கால நிலைபற்றி உத்தரவாதம் அளிக்க வேண்டும். நாம் இழந்த சொத்துக்களை மீளளிக்க ஆவண செய்ய வேண்டும்.. அப்போது தான் நாம் எமது தாயக மண்ணில் மீளக் குடியேறி சுய கௌரவத்துடன் எமது பழைய வாழ்க்கை ஆரம்பிக்க முடியும். ஐந்து வருடகாலம் பொறுத்திருந்தது போல் இன்னும் சிலகாலம் பொறுத்திருப்போம்.

"எமது தாயகமும் வடக்கே"

**கே.எம்.எஸ்.ஹமீட்**
**இளைப்பாறிய உப அதிபர்**
**ஒஸ்மானியாக் கல்லூரி, யாழ்ப்பாணம்**
**முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினர்**

## ஒரு பழைய மாணவனின் அறிக்கை

அரிவரி முதல் பல்கலைக்கழகம்வரை
ஒரு நேர்கோட்டு மரதனில்
வென்றும்
தோற்றுப் போனவன் நான்.
ஆண்டுக்கு ஆண்டு
4A 3A க்களை எண்ணி எண்ணிப் பெருமைப்படும்
எனது பிரபல கல்லூரியினூடான
இந்தப் பாதையில்
பலர் ஓடிக்கொண்டே இருப்பர்.
பல்கலைக் கழக நுழைவாயிலில் மோதுண்டு வீழும் பலர்
சோர்ந்து எழும்புவர் -
எதிர்காலத்தைச் சூனியமாய்க் கண்டபடி!

நன்றி
நன்றி என் பிரபல கல்லூரியே!
எனது வாழ்க்கையை நீ
அர்த்தப்படுத்திய விதம் அற்புதமானது.

வியர்த்துப் புழுங்கும் ஒரு நாட்டில்
வெள்ளைச் சீருடை
கழுத்துவரை தெறிப் பூட்டு.
எனனை நீ
ஒழுங்குபடுத்திய விதம் அற்புதமானது.

மாணவர்க்கு
அரசியல் தீண்டத்தகாதது என்றீர்.
முதலில் அரசியல்வாதிகள் போராட வேண்டும்
பிறகு பெற்றார்கள்
ஆசிரியர்கள்
இறுதியில்தான் மாணவர்கள்!
இப்படியாய் அரசியலை
-சமூக விஞ்ஞானத்தை- நீ
அர்த்தப்படுத்திய விதம் அற்புதமானது.

சித்திரம் வரைய எனக்கு வராததால்
நான் திறப்பால் குட்டுவாங்கிய நாட்கள் எத்தனை.
நல்ல நேரம்
கவிதை எழுத வராமல் தண்டிக்கப்படாதளவில்
நான் அதிர்ஷ்டசாலி.
கலையை நீ அர்த்தப்படுத்திய விதம் அற்புதமானது.

பாடநேரம்
கடைசிவாங்கிலில் கைமாறும் டசக்ஸ் புத்தகம்
மாட்டுப்பட்டுவிட
தண்டிப்பதுபோல் பறித்துச் சென்ற வாத்திக்குப் பின்னால்
எத்தனை நாள் அலைந்திருப்பேன்,
என் புத்தகத்தைக் கேட்டு.
இனப்பெருக்கம் பற்றிய பாடத்தில்
சிரிப்பவர்கள் வெளியே போவீர்கள் என்று
முன்நிபந்தனையிட்டு
பாடம் நடத்துவீர்.
பாலியலை எனக்கு நீ
அடையாளப்படுத்திய விதம் அற்புதமானது.

உயிர்களின் தோற்றம் பற்றி விளக்க
விஞ்ஞான வகுப்பில் டார்வினை அழைப்பாய்
சமய வகுப்பில் கடவுளை அழைப்பாய்.
அறிவியலை நீ அர்த்தப்படுத்திய விதம் அற்புதமானது.

சைக்கிளிலே டபிள் போன என்னை
ஒழுங்கைவரை
ஸ்கூட்டரில் துரத்தி...
முறைப்பெடுத்துப் பார்த்து
பெயரெழுதிச் சென்று
மறுநாள் பள்ளியில் தண்டனை தரும்
உனது 'டிசிப்பிளினில்'
பாடசாலையை ஒரு சிறையாக அர்த்தப்படுத்தினாய்
அங்கீகரிக்கப்பட்ட கைதிகள் நாம் -
சமூகத்தால் மட்டுமல்ல,
பெற்றோராலும்கூட.
இருத்தி எழுப்பவும்
அடிக்கவும்
நியாயங்களை (கேட்கக்கூட) மறுக்கவும்
உச்சக்கட்டமாய் பள்ளியை விட்டுத் துரத்தவும்
அதிகாரியாவாய்,
ஆசான் வேடம் கலைத்து.

பாடமெல்லாம் கரைத்துக் குடித்து
ஒவ்வொரு சோதனையிலும்
அடைந்த வெற்றியும்
மகிழ்ச்சியும்
இப்போ எனக்கு சிரிப்புக்குரியதாகிறது.
எனது சிந்தனையையும்
தெரிவையும்கூட
இப்படியோர் கல்வி முறையால்
நீ அர்த்தப்படுத்திய விதம் அற்புதமானது.

குறித்துக் கொள் இவற்றையும்
பழைய மாணவர் அறிக்கையில்.


கொழும்பு குளுகுளு ஹோட்டலிலே
ஆண்டுக்கொருமுறை கூடிக்கலைவர்
உனக்கான பழைய மாணவர்கள்.
புகழ், வீம்பு, முதுகுசொறி... என்றெல்லாம்
பரிமாறி
குதூகலிப்பர்,
இந்த நேர்கோட்டுப் புத்திஜீவிகள்.

ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையில்
எனது மாணவப் பருவம் கழிந்துபோனதாய்
உணர்கிறேன் நான்.
இதையும் அறிக்கையில் குறித்துக் கொள்,
பொறுமையாய்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# காற்று கனக்கும் தேசம்

கவியுவன்

வியர்வை அரும்பிய கன்னங்களை சேலைத்தலைப்பி னால் துடைத்தபடி, வெற்றிலைத்தட்டுடன் முற்றத்திற்கு வந்த ராசம்மாவின் முகத்திலறைவதுபோல் வீசியது காற்று. வெண்மணலில் நிலா காய்ந்துகொண்டிருந்தது. ஏழோ? எட்டோ? எத்தனையாம் பிறையென்று தெரியவில்லை. அது எத்தனையாய் இருந்தால் அவளுக்கென்ன? நிலா வானில் தோன்றி அவளுக்குச் சந்தோசத்தையா கொடுக்கப் போகிறது. அது ஒரு காலம், எட்டுப்பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் புடைசூழ 'ணங்கு ணங்கு' என்று வெற்றி லையை இடித்து கணபதியாரின் கையில் கொட்டியபடி நிலவில் இருந்ததெல்லாம் ஒரு காலம். இப்போது நிலவைப் பார்த்து என்ன ஆகப்போகிறது. வீணே மனதில் வலியை வாங்கிக் கொள்வது தான் மிச்சம்.

''இப்படி ஒரு வளர்பிறையிலதானே சாந்தன் வீட்ட விட்டுப் போனவன். கடசிப் போக்கு. அப்பவும் இப்படித்தானே காற்று தாலாட்டுற மாதிரி வீசிக்கொண்டிருந்தது.

கடக்குட்டி. துடுக்கன். வீம்புக்காரன். எவ்வளவுபேர் சொல் லியும் கேட்டவனோ. கடதாசிப்பைக்குள்ள ரெண்டு சேட் டையும், ரெண்டு சாரத்தையும் சுற்றியெடுத்துக்கொண்டு.... ''

''கண்ணா, அடிவாங்காமச் சாப்பிடு பாப்பம்'' குசினியின் உள்ளிருந்து கமலத்தின் கோபமான குரல் கேட்கிறது, கூடவே கண்ணனின் சிணுங்கல் சத்தம்.

ராசம்மாவிற்கு புரிந்துவிட்டது. கண்ணன் அடம் பிடிக்கத் தொடங்கி விட்டான். இனி அவள் போனால்தான் அவனை அரவணைத்து அழுகையை நிறுத்த முடியும்.

''என்ன பிள்ள அது'' எழுந்து சேலையில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிவிட்டு மகளை விளித்தபடியே குசினிக்குள நுழைகிறாள்.

''பாரம்மா, சாப்பிடச் சொன்னா, குட்டிமாமாவக் காட்டு, குட்டிமாமாவக் காட்டு எண்டு நிக்கிறான். ஒவ்வொரு நாளும் இவனோட இதே கரைச்சலாக்கிடக்கு. இண்டைக்கு அடிவாங்கித்தான் சாப்பிடப் போறான்''

கமலத்தின் குரல் கசிந்து போகிறது. நீர்முட்டிய விழிகளு டன் குனிந்தபடியே பதில் சொல்கிறாள். இருக்காதா பின்ன? பிள்ளை மாதிரி வளர்த்தவன் அல்லவா.

''இஞ்சகொண்டா, நான் அவனுக்கு தீத்திவிடுறன். கண்ணா, வாடா குஞ்சு அம்மம்மாவும் கண்ணாக்குட்டியும் கத சொல்லிச் சொல்லி சாப்பிடுவம் என்ன?''

ராசம்மாவிடம் ஓடிவருகிறான் கண்ணன். அழுகை திடீ ரென நின்றுவிடுகிறது. ராசம்மா கதை சொல்லப் போகிறாள் என்றவுடன் மண்டபத்திற்குள்ளே படித்துக்கொண்டிருந்த பிரியாவும், சாந்தியும், மாறனும் முற்றத்திற்கு வந்துவிட் டார்கள். அவள் இங்கே கதை சொல்லும்போது அவர்கள் அங்கே எதைப்படிப்பது. கண்ணனின் அழுகையில் கிடைக் கும் சந்தோசத்தில் அவர்களுக்கும் பங்கு.

''அம்மம்மா, அம்மம்மா பேய்க்கதை சொல்லுங்கோ அம் மம்மா'' மாறன் அவளின் கையைப்பிடித்துக்கொள்கிறான். அவளுக்கு பேய்க்கதை சொல்வதில் அதிகம் விருப்ப மில்லை.

''பேய்க்கதை வேணாம், சங்கிலியன்ட கதை சொல்றன் என்ன''

''அதென்னத்துக்கு, எத்தினிதரம் அதக்கேக்கிறது'' குழந் தைகளெல்லாம் ஏகோபித்த குரலில் முணுமுணுத்தன.

''அப்பிடியெண்டா, குள்ள நரிக்கத சொல்றன்என்ன''

ஐயோ அதுகும் வேணாம் அம்மம்மா''

''அப்ப என்ன கத சொல்ற,.......ம்...ம்...ம் ஒரு கதயும் ஞாப கம் வருகுதில்லை.....''

இல்ல, இல்லி, இரிக்கி நிறையக் கதயிரிக்கி. நான் உங்களிட் டச் சொல்லாத இன்னம் எத்தினையோ கதயிரிக்கி நான் இப்ப சொல்லப்போற கதய கவனமாய்க் கேக்கோணும் என்ன? கேட்டுக்கேட்டு கண்ணாக்குட்டி சாப்பிட்டு முடிக் கோணும் என்ன''

கண்ணனுக்கு உணவை ஊட்டியபடியே அவள் கதை சொல்லத் தொடங்கினாள்.......

*

அந்த வனம் தன் எழில் இழந்து போய் எத்தனையோ வருடங்கள் ஆயிற்று. நாற்புறமும் கடல் சூழ தனித்த தீவாய் அழகுற விளங்கிய அவ்வனத்தில் இன்று பச்சைப் பசே லென்று எதுவுமே தெரியவில்லை.

சடைத்து விரிந்த மருதமரங்களாலும், பூத்துக் குலுங்கும் கொன்றை மரங்களாலும், குளிர்ந்தபடி சிற்றோடைகள் ஓடிய இடங்களெல்லாம் பாளம் பாளமாய் வெடித்துக் கிடக் கின்றன.

குயில்கள் கூவும் சத்தமும், மயில்கள் அகவும் சத்தமும், கோழிகள் கீச்சிடும் சத்தமும் கேட்டு எவ்வளவோ காலமா யிற்று.

மயானத்தின் அமைதி கொண்ட அக் கொதிமணல் வெளிக ளிலே இப்போது கேட்பதெல்லாம் ஓயாது இரையும் சமுத்தி ரத்தின் இரைச்சல் மட்டுமே. காற்றுக்குக் கூட பெரிய துக்கம் தன்னை உசுப்பிவிட யாருமே இல்லையென்று: அது தன் கடைசிச் சேவையாய், ஒரு நாள் சீற்றம் கொண்டெழுந்து. வனம் முழுவதும் பரவிக்கிடந்த இலை சருகுகளையும் உதிர்ந்து கிடந்த சிறகுகளையும் அள்ளிக்கொண்டு எங்கோ எறிந்துவிட்டு அந்த வனம் முழுவதும் சுழன்று சுழன்று வீசியதுடன் மௌனித்துக் கொண்டது. பின்னெப்போதா வது பௌர்ணமி நாட்களிலோ, அமாவசை நாட்களிலோ நடந்து முடிந்தவைகள் பற்றிய துக்கம் நெருட எழுந்து, இன்னும் அவ்வனத்தில் குத்திட்டு நிற்கும் பாறைகளிடம் போய் அழுது புலம்பிவிட்டு வருவதுடன் சரி. அவ்வனத் தில் நிகழ்ந்த அத்தனை கொடுமைகளையும் பார்த்துவிட்டு இன்னுமுயிரோடிருக்கும் இரண்டாவது நபர் இந்தப் பாறை கள்தான். கொடிய கழுகிற்கு தாம் புகலிடம் வழங்கியமைக் காக அது எப்போதோ உருகி உருகிக் கரைந்திருக்க வேண் டும். ஆனால் அது கரைய்வில்லை. அது இன்னமும் கரை யாமல் இருப்பதால்தான் காற்று அதனிடம் சென்று குத்திக் காட்டி அழுதுவிட்டு வருகிறதோ தெரியவில்லை. காற்று, பாறை இந்த இரண்டையும் தவிர அங்கே நிகழ்ந்ததையெல் லாம் பார்த்த மூன்றாவது நபர் ஒருத்தர் உள்ளாரெனின், அது ஓயாது இரையும் நமது சமுத்ராதேவிதான்.

இத்தனை கொடுமைகள் நிகழ்ந்த அவ்வனத்தை இன்னும் ஏன் சமுத்திரம் அடித்துச் செல்லாமல் இருக்கின்றது என்பது தான் இன்னமும் ஆச்சரியமாய் உள்ளது. ஒரு வேளை எப்போதேனும், எதற்கேனும் அத்தீவிற்கு அல்லது வனத் திற்கு வருபவர்கள் அங்கே நிகழ்ந்தகொடுமையினை அறிய வேண்டும் என்பதற்குச் சான்றாய் அதை விட்டு வைத்திருக்கிறதோ?

அதுவும் ஒரு வகையில் நல்லதுதான். நாளை, அத்தீவில் அல்லது வனத்தில் ஆராய்ச்சி செய்பவன், ஏங்கேயாவது பாறை இடுக்குகளில் பொருதிக் கிடக்கும் அக்கொடிய கழு கின் எலும்புக் கூடுகளையாவது எடுத்துக் கொள்ளட்டும்.

1

உச்சி வெயிலுக்கு பாறைச்சூடு கூட்டையும் தாண்டி உடலி னில் பரவ சலிப்புடன் எழுந்து கொண்டது கழுகு.

வெம்மையைத் தணிக்க காற்று வீசாததால் ஒரே புழுக்கமா யிருந்தது அதற்கு. கொடிய வெயில். பாறையை உருக்கி திரவமாய் வழிய வைப்பதற்கு முயற்சிப்பது போல் கொடிய வெயில். ஊதாப்பூக்கள் கருகிக் கிடந்தன.

வரவர தளர்ந்து வரும் தன்னுடலைச் சிலிர்த்தபடி ஒரு தரம் கண்களை சுழல விட்டது கழுகு. இறகுகள் சுற்றிவர இறைந்து கிடந்தன.

பசிப்பது போலிருந்தது. இருந்தும் இரை தேடச்செல்வது அலுப்பாக இருந்தது.

ஒரு கோழிக் குஞ்சுக்காகவோ அல்லதுஇரு கோழிக் குஞ்சுக் காகவோ அலைந்து திரிவதெல்லாம் அதற்கு இப்போது இஷ்டமில்லை. ஒரே தாவலில் ஐம்பது நூறாய் காலில் இடுக் கிக்கொண்டு வருவதென்றால் எவ்வளவு சந்தோஷம். அதைவிட்டு இப்பிடி ஒன்றாயும், ரெண்டாயும், சமயங்க ளில் எதுவுமே இல்லாமல் களைத்து.......சே.

சலிப்பை பசி வென்றுகொள்ள பாறையோடு சேர்ந்திருக் கும் மருத மரத்தின். உச்சாணிக் கொப்பிற்கு சிறகை விரித் தது. மஞ்சள் வெயிலை சிறகடிப்பில் சிதறடிப்பதுபோல் வேகம்.

பூமியில் மட்டுமென்ன, வானத்திலேனும் கூட்டம் கூட்ட மாய் இரை தென்படுகின்றதா என்பதாய் பார்வை.

தூங்கிக் கிடந்த இலைகளெல்லாம் கழுகின் சிதறடிப்பில் காற்றை உசுப்பத் தொடங்கின.

ஏதோ ஒரு கோழிக் குஞ்சின் மரணத்திற்காகப் பரிதாபப்பட் டது மரம்.

தன்னைத் தனக்குள்ளேயே குறுக்கிக் கொள்ளமுடியாது உச் சாணிக் கொப்பு சங்கடமாய் நெளிந்தது.

தூரங்களை ஊடறுக்கும் பார்வையுடன் உச்சாணிக் கொப் பில் வந்தமர்ந்தது கழுகு. பழுத்த இலைகள் உதிர்தன. கொப்பு ஒரு தரம் குலுங்கி மீண்டது.

எழுபத்திரு திசைகளிலும் அதன் பார்வை திரும்பிற்று. மரங்களையும், குன்றுகளையும், முள்ளடர்ந்த புதர்களை யும் தாண்டி பார்வை விரைந்தது.

வெயிலின் எரிப்புக்கு காய்ந்து போன கம்பு செடிகளும், முள்ளுதிர்ந்த மிலாறுகளும் ஒளி தெறித்த பாறைகளும் தெரிந்தன.

ஒரு கோழிதானும் தென்படவில்லை.

நேரம் செல்லச் செல்ல கழுகுக்கு பசி அதிகமாகியது. சிறுகு டலை பெருங்குடல் விழுங்கி விடுவது போலான வலி.

பசி அதிகமாக அதிகமாக கொழுத்த கோழி இல்லையெனி லும் ஒரு கோழிக்குஞ்சாவது கிடைக்காதா என அதன் பார்வை கூர்மையடைந்தது.

இப்படிப்பார்ப்பது அதற்கு வெட்கத்திற்குரியதுபோல் தோன்றியது.

வெண்பஞ்சாய் இறகுகள் உதிர உதிர, மழைத்துளியாய் குருதிவடிய வடிய காலிடுக்கில் நிறைய குஞ்சுகளையும் கோழிகளையும் சுமந்து வரும் நாட்கள் ஞாபகத்தில் வந் தன. இந்த ஞாபகங்கள் வரும்போதெல்லாம் கூடவே அந்த வெண்புறாவின் ஞாபகமும் வரும்.

வெண்புறா வானில் சிறகடிக்குமந்த ஓரிரு நாட்களிலும் தான் இரையெதையும் கௌவிக் கொள்ள முடியா தென்றா லும் வெண்புறா காயம் பட்டுக்கொண்டு வந்த வேகத்தி லேயே திரும்பிப் போனபின் தனக்குக் கிடைக்கும் கொழுத்த வேட்டைக்காக அது ஏங்கிக் கிடக்கும். இயல்பில் அது தனக்கு எதிரியென்றாலும் இவ்விடயத்தில் மட்டும் உதவி செய்வதாகவே தோன்றும். மற்றும்படி வெண்புறா அதற்கு எப்போதும் எதிரிதான். தன்னைத் தடவிப்பறக்க விடும் வனதேவதையின் கைகளே வெண்புறாவையும் தட விப்பறக்க விடுவதையிட்டு கழுகுக்கு மிகுந்த கோபம்.

அத்தகைய நாட்களில் தான் இரையெதனையும் கௌவிக் கொள்ள முடியாது கால்கள் கட்டப்படுவதையிட்டும், கூட் டினுள் முடங்கிக் கிடப்பதையிட்டும் தீராத எரிச்சல். எனி னும் உச்சாணிக் கொப்பிற்கு மட்டும் பறப்பதற்கும் அங்கி ருந்த படியே இரைகளை நோட்டம் விடுவதற்கும் அனும தித்திருப்பதையிட்டு கொஞ்சம் திருப்தி. கலக்க முகத்துடன் கழுகு வாடிக்கிடக்கையில் திடீரென்று ஒரு நள்ளிரவில் அதன் முன் வனதேவதை தோன்றும். கழுகை மடியினுள் போட்டுக்கொண்டு செட்டைகளை தடவியபடி ஆறுதல் கூறும்.

வெண்புறாவில் தனக்கு அதிகம் விருப்பம் இல்லையென் றும், கழுகில் தான் அதிகம் விருப்பு என்றும், எனினும் களைத்துப்போன கழுகிற்கு ஓய்வு தேவையென்றும் அத னால்தான் வெண்புறாவை பறக்கவிட்டிருக்கிறேன் என்றும் கூறும். வனதேவதையின் மடியில் படுத்தபடியே கழுகு பல சந்தேகங்களை கேட்கும். சிலவற்றை நம்பாது சத்தியம் செய்யும்படி கோரும்.

கழுகு கேட்ட சத்தியத்தையெல்லாம் கொடுத்துவிட்டு வன தேவதை மறைத்துபோகும்.

மறையுமுன் தான் வந்தது பற்றி வெளியில் தெரியக்கூடா தென எச்சரித்துச் செல்லும்.

அதன்பின் தென்றல் வருடும் மாலைநேரங்களிலும், பனிவி ழும் இரவுகளிலும் மென்மையாய் தூக்கம் தொடும் போதெல்லாம் கனவில் மிதக்கும் கழுகு. மரண வேதனை யில் கோழிகள் அலறுவதாயும், உயிரைக்கையில் பிடித்துக் கொண்டு புதர்களிடையே அவை ஓடி ஒளிவதாயும், இழந்த கோழிக்காக குஞ்சுகளும், குஞ்சுக்காக கோழிகளும் அழுவ தாயும் காட்சிகள்.

எழுந்து உடகார்ந்து பாறை வெடிப்பது போல சிரிக்கும். கொப்பிற்கும் கூட்டிற்குமாய் மாறிமாறி பறக்கும்.

பசியெல்லாம் பறந்து விட்டநிலையில் பாடவும் தொடங் கும். காற்றை வீசியே வெண்புறாவின் சிறகை ஒடிப்பது போல் எண்ணும். வனதேவதையின் மடியினில் படுக்கும் போது கிடைக்கும் சுகம்பற்றி மீட்டுப்பார்க்கும்.

எதையெல்லாம் செய்தால் வனதேவதையை இன்னும் குளி ரப்பண்ணலாம் என்று தீவிரமாய் சிந்திக்கும். வெண்புறா வைப் பற்றிக் கேலியாய் புன்னகைக்கும். இப்போதும் பசி மயக்கத்துடனே, வெண்புறா இனி எப்போது வரும் என்று கழுகு ஏங்கலாயிற்று.

2

நிலா மெதுவாயெழும் பின்னிரவொன்றில், அதனொலி யில் காயப்பட்டுப்போன தன் சிறகுகளைப் பார்த்தபடி நலிந்து கிடந்தது வெண்புறா.

சுவரில்லாத பாழ்மண்டபத்தினுள் தடையில்லாது வந்த நிலாக்கிரணங்களில் அதன் தங்கக்கூடு மிக அழகாய் மின் னித்தெறித்தது.

புதிதாய் முளைத்த சிறகுகள் கூட அதன் ஒளியில் வெண்மை பரப்பி விரிந்து கிடந்தன.

மூடியும் மூடாது கிடந்த சிறகினூடு காற்றுப் புகுந்து உள் நரம்புகளையெல்லாம் சிலிர்க்க வைத்துக்கொண்டிருந்தது. இருந்தும் மனதளவில் அது மிகவும் விசனப்பட்டுப்போயி ருந்தது. நீண்ட நாட்களாக தான் அந்தக் தங்கக் கூட்டி னுள்ளே அடைபட்டுக்கிடப்பது எதற்காக என்று யோசித் துக்கொண்டது. பதில் தெரியாமல் பெருமூச்சு விட்டது.

ஒரு வேளை அடிக்கடி ஒடிக்கப்படும் தன் சிறகுகள் முளைக் கும் வரை கூண்டினுள் இருக்கிறோமா? என்று எண்ணிக் கொண்டது. சிறகு ஒடிக்கப்படுவது பற்றியும், பின் அது மீண்டும் மீண்டும் வளர்வது பற்றியும் நினைக்கும் போதே அதற்கு ஒரு கேலிச்சிரிப்பு பிறந்தது.

அதை விட, தான் வானில் சிறகடிக்கும் போதெல்லாம் ஆனந்தக் கூச்சலிடும் கோழிகளை எண்ணிப் பார்த்து இன் னும் சிரித்துக்கொண்டது. வெளியே தெரியாத மயிர் போன்ற இழையினால் தன் கால்களைக் கட்டியபடியே பறக் கவிடும்.

வனதேவதையை வாழ்த்தி கோழிகள் படையல் வைப்பதை எண்ணி இன்னும் இன்னும் சிரித்துக்கொண்டது.

சிரிக்கும் போதும் அந்தக் கோழிகளுக்காக அதன் மனமிரக் கப்பட்டது. தனக்காகவும் அதன் மனமிரக்கப்பட்டது.

கடைசியாய் தான் பறந்தபோது, அந்தக் காலொடிந்த அந் தக் புள்ளிக்கோழி வருத்தத்துடனேயே கூறியவைகளை எண்ணிப் பார்த்தது.

''சே, என்ன உருக்கமாய்த்தான் அந்தப் புள்ளிக்கோழி தன் கதையை சொல்லிற்று''.

''ஓ வெண்புறாவே, என்னால் உன்போல் பறக்க முடிய வில்லை. என்னினத்தவரைப்போல் அதிக தூரம் நடக்கவும் முடியவில்லை. தானியங்களைப் பொறுக்குவதுகூட மிகச் சிரமமாக இருக்கிறது. என் காலொடிந்த காலத்திலிருந்தே கண்கள் இருண்டுபோனது போல் உணர்கின்றேன்.

என் குஞ்சுகள் இருந்தாலும் பரவாயில்லை அவையாவது ஏதேனும் தானியங்களை பொறுக்கி வந்து ஊட்டி விடக்கூ டும். அவைகூட கொடிய கழுகின் காலிடுக்கில் உயிரை →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாய்த்துக்கொண்டன. எஞ்சிய ஒன்றிரண்டும் கழுகிற்கு பயந்து தூர தேசமாய் போய்விட்டன.

அவைபற்றி கவலை இன்னும் என்னை வாட்டுகிறது. நீ வரும் போதேல்லாம் தூரமாய்ப் போன அவைகள் திரும்பி வருமா என மகிழ்வுறும் போது நீ சொல்லிக் கொள்ளாமலேயே மறைந்து போகின்றாய்.

எனவே அவைகளை மீண்டும் நான் காண்பேன் எனும் நம்பிக்கை என்னை விட்டுப் போய்விட்டது.

இனி நான் வாழ்வதிலும் ஏதும் அர்த்தம் இருப்பதாய்த் தெரியவில்லை.

எப்போதுமே இந்தப் புதர்களிடையே - வானத்தையும், வெள்ளிகளையும் மேகக் காட்டுக்குள் ஒளிந்து விளையாடும் நிலாவையும், கடும் ராட்ஷஷனாய் விரிந்து வரும் கழுகினையும் பார்த்து எனக்கு சலித்து விட்டது.

ஆகையினால் என்னை எங்காவது அழைத்துச் செல். அன்றொரு நாள் ஒரு கனாக் கண்டேன்.

இந்தப் பூமிக்குக் கீழே அழகியதோர் உலகமிருப்பது தெரிந்தது. அங்கே கண்ணாடியுடம்பினையுடைய பறவை என்று சொல்லத்தக்க ஓரினம் காற்று வெளியில் மிதந்து செல்கின்றது எதுவும் எதன் மீதும் முட்டிக் கொள்ளவில்லை, எதுவும் எதனையும் கட்டிப் போடவில்லை. புன்னகை கூட இதய ஆழத்திலிருந்து வருவது போல்தான் தோன்றிற்று.

அங்கே என்னை அழைத்துச் செல்.

அது உனக்குச் சிரமம் என்றால்-

வேறோர் நாள் பிறிதோர் கனாக் கண்டேன்.

அதலே, இந்தப் பூமியிலே எங்கோ ஓரிடத்தில் அழகியதோர் நந்தவனமிருப்பது தெரிந்தது. அங்கே நறுமணம் கமழும் காட்டுப் பூக்களும், தீங்கற்ற சிறுபிராணிகளும், மென்மையான அலகிற்குரிய சிறு பறவைகளும் மட்டுமே தெரிந்தன.

ரத்த வாடைக்காக எச்சில் ஒழுக ஒழுக அலைந்து திரியும் எந்தப் பிராணியும் தென்படவில்லை.

சிறு அட்டை கூட இருக்காதென்றே நம்புகிறேன்.

அங்கேயாவது என்னை அழைத்துச் செல்.

எங்கள் வனதேவதை மழையைத் தருவித்து எங்கள் சிறகுகளிலும் காலிடுக்குகளிலும் புதர்களிலும் ஒட்டியிருக்கும் ரத்தக் கறையைக் கழுவிவிடும் என்று பார்த்துப்பார்த்தே காலம் ஓடிவிட்டது''.

தொடராய் வரும் எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாகிப் போனதில் நொந்து போன அப்புள்ளிக் கோழியின் வருத்தங்கள் பற்றி மனம் கசிந்து கொண்டது வெண்புறா.

இக்கணத்தில் அப்புள்ளிக்கோழி என்ன செய்து கொண்டிருக்கும் என்று யோசித்துக்கொண்டது. இப்போதும் அது கனாக்கண்டு கொண்டிருக்கும். அல்லது விந்தி விந்தி எங்கேயேனும் எதயேனும் கொறிக்கவும் போயிருக்கும்.

சிலவேளை எதுவுமே செய்யாமல் கழுகின் வயிற்றினுள் ஜீரணமாயுமிருக்கலாம்.

கூண்டை உடைத்துச் சென்று வனதேவதையின் கண்களை கொத்தி விடுவோமா என்றெண்ணியது. எழுந்து சிறகை விரித்து கூண்டைக் கம்பிகளில் மோதி விழுந்தது.

பிறகு படுத்துக் கொண்டது. மீண்டும் எழுந்து சிறகை விரித்துக் கூண்டுக் கம்பிகளில் மோதி விழுந்தது. பிறகு நீண்ட பெரிய மேகக் கூட்டமொன்றினுள் நிலா புகுந்து கொள்ள வெண்புறாவும் இருட்டில் சோர்வுடன் படுத்துக்கொண்டது.

## 3

நாளுக்கு ஒன்றாயும் ரெண்டாயும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு கோழிகள் புதரிடையே பதுங்கியும், வயிறு பசிக்கும் போது வெளிவந்தும் வாழ்வைப் பழக்கிக் கொண்டு வெண்புறாவை மறந்திருந்த நிலையில் திடீரென அவைகளிடையே ஒரு மெல்லிய சலசலப்புக் கிளம்பிற்று.

கழுகு கண்ணுறங்கும் இராப் பொழுதுகளிலும், கூதலுக்காக அது கொடுகிப் படுத்திருக்கக் கூடிய மழை நேரங்களிலும் அடர்ந்த மருத மரங்களின் கீழ் அவை கூடிக் கூடிக் கதைத்தன.

வனத்துக்குப் புதிய வனதேவதை வரப்போவதாயும் அப்படி வந்தால் அன்றுடன் தமதின்னல்களெல்லாம் நீங்கிவிடும் என்றும் புதிதாய் வரப்போகும் வனவேதை இப்போது வெண்புறாவைத் தேடித்தான் போய்க்கொண்டிருப்பதாயும், அதற்கு எப்போதுமே கழுகை பிடிப்பதில்லையென்றும், ஒரு சமயம் அதன் சுட்டுவிரலைக் கூட கழுகு கொத்திற்றுப் போயிருக்கிறதென்றும் அதிகமாய் ஊர்மேயும் சிவப்புச் சேவல் சொல்லிற்று.

பொழியும் மழையில் தங்கம் விழுவது போல் அனேக கோழிகளின் கண்கள் அகல விரிந்தன.

''வருகிற வனதேவதை சிறிது முன்னமே வந்திருக்கக் கூடாதா என் குஞ்சு பிழைத்திருக்குமே'' என ஆதங்கப்பட்டதொரு கோழி, கன்னம் ஈரலித்தபடியே.

''வருகிற வனதேவதைக்கு இப்போதே படையல் வைப்போம்'' என்ற தொரு குஞ்சுக்கோழி.

''முதலில் பொறுங்கள் படையலைப் பிறகு பார்ப்போம், முதலில் நமக்கிருக்கும் பாடும் உரிமையைக் கொண்டு பாடி பழைய வனதேவதையை அனுப்பி வைத்து புதிய தேவதையை வரவழைப்போம்'' என்றது ஊர்மேயும் சிவப்புச் சேவல்.

''ஓம், பாடுவோம், பாடுவோம்'' என்று உரக்கக் கத்தின மற்றக் கோழிகள்

''ஏனிப்படி அவசரம், கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போமே'' என்றது காலொடிந்த புள்ளிக்கோழி.


அதன் கண்களில் நம்பிக்கைக்கான எந்த அடையாளமும் தெரியவில்லை, முன்போல், வெண்புறா வரப்போகிறது என்றவுடன் தூரமாய்ப் போன தன் குஞ்சுகள் திரும்பி வருமா என்ற கேள்வியெல்லாம் அதனுள் எழவில்லை. பிறக்காத குழந்தை எப்படியிருக்கும் என்று எங்கனம் சொல்ல முடியாதோ அங்கனமே இன்னும் வராத வனதேவதை பற்றி எதுவும் எதிர்பார்க்க அது விரும்பவில்லை.

மற்றக் கோழிகளெல்லாம் புள்ளிக்கோழி மீது ஒரு வினோதப் பார்வையை வீசின.

சிலவற்றின் பார்வையில் வெறுப்பு மிஞ்சிக்கிடந்தது.

அவையெல்லாம், புதிய வனதேவதை பற்றி சிவப்புச் சேவல் சொல்லியவைகளைக் கேட்டுக் கேட்டு கனவுகளை வளர்த்துக் கொண்டு விட்டன.

தம் புதர்களுக்கு ஒளி கொடுக்க நட்சத்திரங்கள் இறங்கிவர இருப்பதாகவும், மட்டுப்படுத்திய தம் பறத்தல்கள் இனி மேல் கட்டுக்கடங்காது போகுமென்றும், எங்கும் எந்த வேளையிலும் தாம் இனி இரைதேடப் போக முடிமென்றும் இரைகிடைக்காது போயின் கூட வனதேவதை தம்புதர்களுக்கு மூடை மூடையாக தானியங்களை இறைஞ்சி விடுமென்றும் அவற்றின் கனவுகள் விரிந்தன.



ஆதலால் அவைகள் புள்ளிக் கோழியை சத்தமில்லாது வைதன. இன்னும் சில பெரிதாய் கூச்சல் போட்டன. ''சரி சத்தத்தை நிறுத்துங்கள் இங்கே வாதம் செய்து நேரத்தை வீணடிப்பதை விட நாம் பாடிப்பாடி புதிய தேவதையை வரவழைப்போம்'' என்று மற்றக் கோழிகளை அடக்கியது சிவப்புச் சேவல். மந்திரத்துக்குக்கட்டுண்ட தாய் அனேக கோழிகள் உடன் மௌனமாகின.

பின் அவையெல்லாம் வனதேவதையை வரவழைக்கும் பாடலை உரத்துப்பாடிக் கொண்டு வனத்தின் மூலை முடுக்கெல்லாம் பவனிவரத் தொடங்கின.

ஆங்காங்கு புதர்களில் இருந்து வேறுபல கோழிகள் இணைந்து பவனி பெருக்கத் தொடங்கிற்று....

எங்கும் போகாது இருந்த இடத்தில் உட்கார்ந்தபடியே தன் கனவுகளை மீட்டுக் கொண்டிருந்தது காலொடிந்த புள்ளிக் கோழி.

## 4

பனிப்பூக்கள் நுனிப்புல்லை மறக்கத் தொடங்கும் காலைப் பொழுது. வசந்தம் பூப்பதற்காக விரிந்து கொண்டிருந்தன காட்டுப்பூக்கள். ஓடிக்கொண்டிருந்த சிற்றோடை அமைதியாய்க் கிடந்தது. எங்கோ மையம் கொண்டு உட்கார்ந்திருந்தது காற்று.

நீண்ட, பரந்த அந்தப் புல்வெளியில் ஏறுவெயிலைத் தாங்கியபடி குழுமியிருந்தன கோழிகளெல்லாம். யாவற்றின் கண்களும் நெடிதுயர்ந்த மரங்களுக்கப்பால் மேகக் கூட்டங்களை கிழித்தப்படி பொருதிக் கிடந்தன.

எக்கணத்திலும் மேகத்தைக் கிழித்துக்கொண்டு புதிய வனதேவதை தங்கள் முன் தோன்றலாம் என்ற ஆவல் அக்கண்களில் நிரம்பியிருந்தன.

அவற்றின் மனங்களோ தம் பாடும் உரிமையைப் கொண்டு பழைய வனதேவதையை அகற்றிவிட்டதுபற்றியும், புதிய தேவதையை வரவழைத்துக்கொண்டது பற்றியும் எண்ணி எண்ணி நெகிழ்ந்து கிடந்தன.

வனதேவதை வரும் வழியில் பார்வைக்கு குளிர்ச்சியாக தம் இறகுகளை பிடுங்கியவண்ணம் தோய்த்து மிதக்க விட்டிருந்தன.

காதுக்கு இனிமையாக குயில்களை அழைத்து கச்சேரி வேறு. புல்வெளியின் ஓரத்தில் தேவதைக்கு படையல் வைக்க அவிப்பொருள் அவிந்து கொண்டிருந்தது.

யாவற்றையும் மேற்பார்வை செய்தபடி தலையாரிபோல் வீறுநடை போட்டுக்கொண்டிருந்தது சிவப்புச் சேவல்.

பசியால் வெகுண்ட குஞ்சுகள் தாய்க் கோழிகளின் செட்டைகளை கொத்தியபடியிருந்தன.

வானம் நிர்மலமாய்க் கிடந்தது.

எத்திசையிலும் மேகத்தில் வெடிப்பு விழுவதாகவோ ஒளி வட்டம் தோன்றுவதாகவோ தெரியவில்லை.

பசியின் கோரத்தில் குஞ்சுகள் இரையற்ற தரையை கொத்திக் கொத்தி தம் அலகுகளைத் தேய்த்துக்கொண்டன.

தாய்க் கோழிகள் விம்மின, வெதும்பின, தத்தமக்குள் முனகின, சிறு சிறு குழுக்களாய் சேர்ந்து கொண்டு தம் அங்கலாய்ப்புக்களை பங்கிட்டுக்கொண்டன. வனதேவதை தம் முன் தோன்றியவுடன் எல்லாம் சரிவரும் என்று நம்பின. சிவப்புச்சேவல் அண்மித்து வரும்போதேல்லாம் மௌனம் காத்தன.

திடீரென்று எங்கும் இருட்டு. சூரியனுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லை.

கோழிகள குய்யோ முறையோ என்று கத்தியபடி ஓடித்திரிந்தன. ஒன்றில் ஒன்று முட்டிக்கொண்டன, மோதிக்கொண்டன. முடிவற்ற தூரத்தில் இருந்து ஒரு நீலநிறக்கதிர்கள் நீண்டு வந்தது. நேரே சிவப்புச் சேவலை விழுந்தது.

காந்தம் இரும்பினை அப்பிக்கொள்வது போல், கைகொடுக்கும் நேரத்தில் சிவப்புச் சேவலை அப்பிக்கொண்டு அக்கதிர் மேகத்தினுள் மறைந்து போனது.

பிரமிப்பிலிருந்து மீள முடியாமல் கோழிகள் கண்களை அகல விரித்தபடியே வானத்தை வெறித்துக் கொண்டிருந்தன.

இருண்ட மேகங்களுக்குப் பின்னே செறிந்த நீலநிற ஒளி தோன்றி பூமியை நோக்கி நகரத்தொடங்கியது.

''ஆ, எங்கள் வனதேவதை, எங்கள் வனதேவதை'' அதோ அதோ வந்துகொண்டிருக்கிறது எங்கள் வனதேவதை. என்று சந்தோஷ மிகுதியில் எல்லாக் கோழிகளும் கூச்சலிட்டன

நீல ஒளிப்பின்னணியில், வெண்தாமரைப்பூவில் அமர்ந்துக்கொண்டு மெதுவாய்....மெதுவாய்...இறங்கி வந்து கொண்டிருந்தது வனதேவதை.

புன்னகை பூத்த முகம். சாந்தமான பார்வை. இடக்கையிலிருக்கும் வெண்புறாவைத் தட்விக்கொடுத்தபடி வலக்கை. வனதேவதையின் காலைக் கட்டிப்பிடித்துக்கொண்டு சிவப்புச்சேவல்.

கோழிகள் ஒன்றையொன்று கட்டிப்பிடித்துக் கொண்டன. ஒன்றை ஒன்று முத்தமிட்டுக்கொண்டன. கச்சேரியைத் தொடங்கும்படி குயில்களுக்கு கட்டளையிட்டன. இருக்கும் தம் சிறகுகளையும் பிடுங்கி வர்ணம் தோய்த்து வானில் பறக்கவிட்டன. எல்லாம் நல்ல விதமாய் நடக்கும் திருப்தி தேவதைத்யின் முகத்தில் பிரதிபலித்தது.

திடீரென எங்கோ ஒரு முழக்கம்.....

வனதேவதையின் முகம் மாறிப்போனது.

பூமியை நோக்கி இறங்கி வந்துகொண்டிருந்த வனதேவதை அந்தரத்தில் அப்படியே நின்றுகொண்டது. வெண்தாமரைப் பூவிற்குள் ஒளித்து வைத்திருந்த கழுகினை வெளியே எடுத்து, கையிலிருந்த வெண்புறாவினை கழுகின் காலடியில் கட்டிவிட்டது. பின் கழுகின் செட்டைகளைச் சேர்த்துக் கட்டியிருந்த கட்டுகளை அவிழ்த்து விட்டது.

முன்னொருபோதுமில்லாத வேகத்தில் பறந்து வந்தது கழுகு. மரங்கள் சடசத்து முறிந்தன. ஓடைகள் பொங்கி எழுந்தன. காற்று சுழன்று சுழன்றடித்தது. கழுகின் கண்களிலிருந்து வெளிப்பட்ட கதிர்களினால் புதர்கள் எரிந்தன. கூடியிருந்த கோழிகளின் மீது அடங்காப் பசியுடன் பாய்ந்தது கழுகு. கோழிகள் நாலாப்பக்கமும் சிதறி ஓடின. மரண ஓலமிட்டன. கழுகின் கோபப்பார்வையில் எரிந்துபோன தம் புதர்களையெல்லாம் ஏக்கமாய்ப் பார்த்தன. கழுகின் காலடியில் கிடந்தவாறே கூடவே இழுபட்டது வெண்புறா. கோழிகள் தம்முயிர்காக்க மறைவிடம் தேடி ஓடிக்கொண்டிருந்த போது,

''என்னருமைக்கோழிகளே, என் வெண்புறாவைப் பறக்க விடுவதற்கு உங்கள் மரங்களும், புதர்களும் தடையாக இருக்கின்றன. அதனால்தான் நான் கழுகினை அனுப்பி அவைகளை அழிக்கிறேன். எல்லாம் அழிந்தவுடன் என் வெண்புறா தடைகளின்றிப் பறந்து வரும் அஞ்சாதீர்கள்'' என்று வனதேவதையின் அசரீரி கேட்டது.

ராசம்மா கதை சொல்லி முடித்ததும் மௌனமாகிப் போனாள். குழந்தைகள் முகத்தில் ஒரு வித கலவரம் தெரிந்தது. அவளின் மௌனம் அவர்களை என்னமோ செய்தது. அவளிடமிருந்து இலேசாய் விசும்பல் ஒலி கேட்டது. அவள் தலைகுனிந்திருந்தபடியால் அழுகிறாளா என்பதை அவர்களால் நிச்சயப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

''அப்ப இனி அங்க கோழிகள் திருப்பியும் போகாதோ அம்மம்மா''

''தெரியல்ல மக்காள்''

''பிறகென்ன நடந்தது அம்மம்மா''

தெரியல்ல மக்காள்''

''அங்க மரமொன்றும் முளைக்காதோ அம்மம்மா''

''அதுகும் தெரியல்ல மக்காள் எனக் கொண்டும் தெரியல்ல மக்காள்''

இனியங்க என்ன நடக்கும், கோழிகள் வருமோ வராதோ, மரம் முளைக்குமோ, முளைக்காதோ, தேவதை எங்க போச்சி, கழுகு எப்படி செத்திச்சி, செத்திச்சுதோ சாகேல்லயோ, எனக்கொண்டுமே தெரியல்ல மக்காள்''

அவள் திரும்பவும் மௌனமாகிப்போனாள். அவளின் முந்தானைத் தலைப்பை இழுத்துக்கொண்டு கண்ணன் இன்னும் அவளின் மடியினுள் கிடந்தான். பிரியாவும், சாந்தியும் எழுந்து திரும்பவும் படிப்பதற்காய் மண்டபத்தினுள் சென்று விட்டார்கள்.

அவளும் கண்ணனும், மாறனும் மட்டுமே வாசலில் தனித்திருந்தனர். மாறன் எதையோ தீவிரமாய் யோசிப்பவன் போல் காணப்பட்டான். சில கண நேரங்களில் அவளின் தோளை மெதுவாய் தொட்டான். என்ன என்பது போல் அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

''கோழிகளுக்கு துவக்கு இருந்திருந்தா அந்த கழுக சுட்டுப் போட்டிருக்கலாம் எலா அம்மம்மா'' பத்து வயது மாறனின் கண்களில் தெரிந்த வன்மம் பாட்டியைக் கிலிகொள்ள வைத்தது.

மயானத்தின் அமைதி கொண்ட அக்கொதி மணல் வெளிகளிலே இப்போது
கேட்பதெல்லாம் ஓயாது இரையும்
சமுத்திரத்தின் இரைச்சல் மட்டுமே.
காற்றுக்குக் கூட பெரிய துக்கம் தன்னை
உசுப்பிவிட யாருமே இல்லையென்று.
அதுதன் கடைசிச் சேவையாய், ஒருநாள்
சீற்றம் கொண்டெழுந்து வனம் முழுவதும்
பரவிக்கிடந்த இலை சருகுகளையும்
உதிர்ந்து கிடந்த இறகுகளையும் அள்ளிக்
கொண்டு எங்கோ எறிந்துவிட்டு வந்து
வனம் முழுவதும் சுழன்று சுழன்று
வீசியதுடன் மௌனித்துக் கொண்டது.
பின்னெப்போதாவது பௌர்ணமி
நாட்களிலோ, அமாவாசை நாட்களிலோ
நடந்து முடிந்தவைகள் பற்றிய துக்கம்
நெருட எழுந்து, இன்னும் அவ்வனத்தில்
குத்திட்டு நிற்கும் பாறைகளிடம் போய்
அழுது புலம்பிவிட்டு வருவதுடன் சரி.
அவ்வனத்தில் நிகழ்ந்த அத்தனை
கொடுமைகளையும் பார்த்துவிட்டு இன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள்-17

## பத்தாவது பாராளுமன்ற தேர்தலும் விதவைத்துவ அரசியலும்!

### 1994 தேர்தல்

10வது பொதுத்தேர்தல், இலங்கையின் வரலாற்றில் மட்டுமல்ல இலங்கைப் பெண்களின் பாராளுமன்ற அரசியலிலும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும்.

1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசாங்கம் தொடர்ந்து 17 வருடகாலமாக ஆட்சி புரிந்தது. இந்த நீண்ட, கால எல்லைக்குள் பல சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டிருந்தன. குறிப்பாக இனப்பிரச்சினை உக்கிரம் பெற்று சிறுபான்மை தேசிய இன விடுதலைப் போராட்டத்தை வேகப்படுத்தியமை, தென்னிலங்கை தீவிர இடதுசாரி இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை எண்ணற்ற இளைஞர்களை பலி கொடுத்து நசுக்கியமை, அரசு பிரதானமாகக் கடைப்பிடித்த திறந்த பொருளாதார கொள்கையின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியமை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியின் சர்வாதிகாரத்தன்மை, ஆளும் கட்சி (வர்க்க) நலன் சார்ந்த ஊழல், லஞ்சம், அடாவடித்தனங்கள் மலிந்து போனமை என்பன போன்ற மேலோட்டமான முக்கியமான நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். இவற்றிற்கெதிரான மக்கள் அலை மேலோங்கியிருந்த சூழ்நிலையிலேயே 1994 ஓகஸ்ட் தேர்தல் நடந்தது.

1994 பொதுத்தேர்தல் நடப்பதற்கு முதல் நடந்த இன்னொரு நிகழ்வையும் இங்கு குறிப்பிடுதல் அவசியம்.,

அது 1993 மே மாதம் நடந்த மாகாணசபைத் தேர்தலாகும்.

### மாகாண சபைத் தேர்தல்

1993 மே மாதம் மாகாண சபைத்தேர்தல் நடத்த திட்டமிட்டிருந்த போது தேர்தலில் பெரும் எதிர்பார்ப்புமிக்க கட்சியாக காணப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (DUNF) யின் தலைவரும் அக்கட்சியின் பிர மறைந்த சினிமா நடிகரும், அரசியல்வாதியுமான விஜயகுமாரணதுங்கவின் மனைவியும் முன்னாள் பிரதமர்களான பண்டாரநாயக்க - சிறிமா ஆகியோரது மகளுமான சந்திரிகா குமாரணதுங்க. விஜயகுமாரணதுங்க 1988 பெப்ரவரி 16ம் திகதி இனந்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டவர்.

இத்தேர்தலில் திருமதி சந்திரிகாவுக்கு ஐ.தே.க. எதிர்ப்பலை மட்டுமல்லாது, கணவர் மற்றும் தகப்பன் இருவரும் அரசியல் படுகொலைக்குள்ளானவர்கள் என்ற அனுதாப அலையும் பயன்பட்டது எனலாம். இத்தேர்தலில் இம்மூன்று பிரதான கட்சிகளும் தங்களது அனுதாப பிரச்சாரத்தளமாக மேல் மாகாணத்தையே - குறிப்பாக கொழும்பையே கொண்டிருந்தன. உதாரணத்திற்கு பிரேமதாசவின் தளமாகவும் கொழும்பு இருந்தது. லலித் அத்துலத்முதலி கொழும்பு மாவட்டத்திலேயே அதிக வாக்கு பெறும் நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே மாகாணத்திலேயே சந்திரிகாவும் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சூழ்நிலை காரணமாக மேல் மாகாணத்தில் பலத்த போட்டி நிலவியதை அவதானிக்க முடிந்தது.

இறுதியாக மாகாணசபைத் தேர்தலில் பலத்த போட்டியின் மத்தியில் மேல் மாகாணத்தில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவு செய்யப்பட்டார். இத்தேர்தலில் அதிகப்படியான வாக்குகளைப் (298457) பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதைவிட மேல் மாகாணசபையை பொ.ஜ.மு. கைப்பற்றியதைத் தொடர்ந்து மேல்மாகாண முதலமைச்சராக சந்திரிகா தெரிவு செய்யப்பட்டார். இலங்கை வரலாற்றில் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்ட ஒரே பெண்ணும் இவரே. சந்திரிகா தலைநகரம் உள்ளிட்ட பகுதியை தனது ஆட்சிக்குள் கொண்டு வந்த

தான வேட்பாளருமான லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டார். அரசாங்க தரப்பினர் இக்கொலைக்கு காரணம் விடுதலைப் புலிகளென்று பிரச்சாரம் செய்த அதே வேளை இது ஆளும் கட்சியின் வேலை என்ற பொது அபிப்பிராயமும் நிலவியது. எனவே ஐ.தே.கவின் மீதான எதிர்ப்புணர்வு நாடு முழுவதும் மேலும் உக்கிரமடைந்தது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு லலித்தின் மரண ஊர்வலத்தின் போது மக்கள் அரசாங்கத்தின் மீது காட்டிய எதிர்ப்பாகும்.

லலித் கொல்லப்பட்டு ஒரு வாரத்தில், அதாவது மே 1ம் திகதி மேதின ஊர்வலத்தில் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவும் கொல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து நாட்டின் பதில் ஜனாதிபதியாக டி.பி.விஜேதுங்க நியமிக்கப்பட்டார்.

மே மாதம் 17ம் திகதி மாகாண சபைத் தேர்தலை நடத்தியே தீருவது என அரசாங்கம் முடிவு செய்தது. அதன் படி வட கிழக்கு மாகாணம் தவிர ஏனைய 7 மாகாணங்களிலும் தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தல் பிரச்சார மேடைகளில், முக்கிய ஆயுதமாக மேற்குறிப்பிட்ட படுகொலைச் சம்பவங்கள் பிரயோகிக்கப்பட்டன.

பொது ஜன முன்னணியானது ஐ.தே.க. மீதான மக்களின் எதிர்ப்பலையை கூடியபட்சம் பயன்படுத்த முயற்சி செய்த அதேநேரம் காமினி திசாநாயக்கவின் தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசியக்கட்சியினர் லலித்தின் படுகொலையை காட்டி அனுதாப வாக்குக்கான வேட்டையைத் தொடங்கினர். மறைந்த லலித்தின் விதவை மனைவி ஸ்ரீமனி அத்துலத்முதலி ஜ.ஐ.தே.முக்கு தனது ஆதரவை வழங்குவதாக அறிவித்ததோடு ஜ.ஐ.தே.முவுக்கு இன்னும் கூடிய அனுதாபவாக்கை திரட்டக் கூடியதாக இருந்தது. அதேபோல் ஐ.தே.கவும் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் அனுதாப அலைகளைப் பெற முயற்சித்தது. ஐ.தே.க., மற்றும் ஜ.ஐ.தே.மு. இரண்டும் விதவைகளைப் பயன்படுத்தி வாக்கு பெற முயற்சித்து வந்த வேளையில் பொதுஜன முன்னணியின் சார்பிலும் விதவைப் பெண்ணொருவர் நேரடியாகவே தேர்தலில் போட்டியிட்டார். அவர்

போதும், ஏற்கெனவே மாகாண சபைமுறையில் நிலவிவந்த மாகாண அரசாங்க - மத்திய அரசாங்க இழுபறிக்குள் திருமதி சந்திரிகாவும் சிக்க நேரிட்டது. இதைவிட மத்திய அரசாங்கம் ஐ.தே.கவின் கட்டுப்பாட்டின் கீழும் குறிப்பிட்ட மாகாண அரசாங்கம் பொ.ஜ.முவின் கீழும் இயங்கும் சந்தர்ப்பத்தில் இழுபறி மேலும் தீவிரப்படும் என்பது யதார்த்தம்.

இவ்வாறான நிலையில் ஐ.தே.க எதிர்ப்பு அலை நாடு முழுதும் வேகமாக பரவியது. அது மட்டுமன்றி இவ்வெதிர்ப்பலைக்கு சந்திரிகா தலைமையிலான பொ.ஜ.மு. தலைமை கொடுத்தது. DUNF ஐச் சேர்ந்த பலர் உடைந்து போய் ஐ.தே.கவுடனும் பொ.ஜ.முவுடனும் சேர்ந்ததைத் தொடர்ந்து அக்கட்சி மிகப் பலவீனப்பட்டு போனமை பொ.ஜ.மு. மேல் நிலைக்கு வருவதை மேலும் இலகுவாக்கியது. ஐ.தே.க வின் ஊழல்களையும் பிழைகளையும் அம்பலப்படுத்துவதில் சந்திரிகா தலைமையிலான பொ.ஜ.மு. முன்னின்றது. சூரிய கந்தை போன்ற மனிதப்புதைகுழிகள் சந்திரிகா தலைமையில் பத்திரிகையாளர்களுடன் போய் இரகசியமாக தோண்டி அம்பலப்படுத்தப்பட்டது. நாடெங்கிலும் சந்திரிகா அலை மிகத்தீவிரமாக பரவியது. பத்திரிகைகள் அவரதும் அவரது கட்சியின் நடவடிக்கைகளுக்கும் பெரும் பிரச்சாரத்தை செய்தார்கள். மாற்றுப் பத்திரிகைகள் உட்பட பல பத்திரிகைகள் 'மாற்றம் வேண்டும்', 'முற்போக்கு அரசியல் தலைமைத்துவம் வேண்டும்', 'முதலாளித்துவ தலைமையை தோற்கடித்து இடதுசாரி அரசாங்கமொன்றை ஏற்படுத்த வேண்டும்' என்ற கருத்துடன் பொ.ஜ.முவை நேரடியாக ஆதரித்தனர்.

### ஓகஸ்ட் தேர்தல்

1994 ஓகஸ்ட் பொதுத்தேர்தலுக்காக பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் 10 அரசியற் கட்சிகள் கூட்டு சேர்ந்தன. அவை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி (மொஸ்கோ), ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி (வை.பி.சில்வா அணி), தேச விடுதலை மக்கள் முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி(ஸ்ரீமணி அணி), இலங்கை முஸ்லீம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (செல்லசாமி அணி), நவசமசமாஜக் கட்சி (வாசுஅணி), இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகும். இன்னும் ஒரு சில சிறு சிறு அமைப்புகள் இக்கூட்டுடன் இணைந்திருந்தன.

1994 ஓகஸ்ட் 16ம் திகதி நடந்த தேர்தலில் பொ.ஜ.மு. யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களிலுமாக மொத்தம் 246 வேட்பாளர்களை நிறுத்தியது. இவர்களில் 171 பேர் மட்டுமே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஏனைய 75 பேரும் கூட்டு சேர்ந்த கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.

ஐக்கிய தேசியக்கட்சி 22 மாவட்டங்களிலுமாக 262 பேரை வேட்பாளர்களாக நிறுத்தியது. ஐ.தே.கவுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி,பி., இலங்கை மக்கள் கட்சி (ஒஸி அணி), ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (திலக்கருணாரத்ன அணி), டெலோ (திவ்வியநாதன் அணி), ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் (என்.எம்.முகார்தீன் அணி) உட்பட கூட்டுச்சேர்ந்திருந்தது. மொத்தம் 1440 பேர், வேட்பாளர்களாக போட்டியிட்டனர். இவர்களில் 55 பேர் பெண்கள். இது மொத்த வேட்பாளர்களில் 3.9% வீதமாகும். அதிக பெண்களை வேட்பாளராக போட்டியிட வைத்த கட்சி இலங்கை முற்போக்கு முன்னணியாகும். (இது ஜே.வி.பியுடன் கூட்டமைத்திருந்தது.) இக்கட்சி 15 பெண் வேட்பாளர்களை போட்டியிடச் செய்திருந்தது.

போட்டியிட்ட 55 பெண் வேட்பாளர்களில் 47 பேர் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 8 பேர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். முஸ்லீம், மற்றும் பறங்கிய இனத்தைச் சேர்ந்த பெண்கள் எவரும் போட்டியிட்டிருக்கவில்லை.

இத்தேர்தலின் இறுதியில் 10 பெண்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். இரு பெண்கள் தேசியப்பட்டியலின் மூலமாக தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட 10 பேரில் 7 பேர் பொ.ஜ.முவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சந்திரிகா குமாரணதுங்க, ஸ்ரீமணி அத்துலத்முதலி, அமேத ஜயசேன, நிரூபமா ராஜபக்ஷ, பவித்திரா வன்னியாராச்சி, ஹேமா ரத்னாயக்க, சுமித்திரா பிரியங்கனி.

ஐ.தே.க. சார்பில் 3 பெண்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் ரேணுகா ஹேரத், அமரா பியசீலி ரத்னாயக்க, ராஜமனோகரி புலேந்திரன் ஆகியோர்.

இதைவிட தேசியப்பட்டியலின் மூலம் நியமிக்கப்பட்ட 2 பேரில் ஒருவர் ஐ.தே.க. சார்பில் தெரிவு செய்யப்பட்ட அமர பத்திரா திசாநாயக்க மற்றவர் பொ.ஜ.மு. சார்பில் நியமிக்கப்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்க. இதன்படி 10வது பாராளுமன்றத்தில் 5.3% வீத பெண்கள் பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள். இத்தேர்தலில் பெண்களின் அரசியலில் முக்கிய குறிப்பிடத்தக்க அம்சங்களை இனங்காட்டலாம்.

* இலங்கை வரலாற்றில் அதிக பெண் உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் இது.
* இலங்கை பொதுத் தேர்தல் வரலாற்றில் எந்த பெண்களும் - ஏன் எந்த ஆணும் பெற்றிராத அளவு கூடிய வாக்குகளைப் பெற்ற பெண்ணாக திருமதி சந்திரிகா குமாரண

**என்.சரவணன்**

துங்க சாதனை படைத்தார். இவர் 4,64,588 வாக்குகளை இத்தேர்தலில் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இதற்கு முன்னர் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்றவராக லலித் அத்துலத்முதலியே திகழ்ந்தார். 1989ம் ஆண்டு பொதுத்தேர்தலில் திரு. லலித் 2,35,447 வாக்குகளைப் பெற்றிருந்தார். இச்சாதனையையே திருமதி சந்திரிகா முறியடித்திருந்தார்.)
* மூன்றாவது தடவையாக இலங்கை மக்கள் பெண்ணொருவரை பிரதமராக தேர்ந்தெடுத்தமை.
* ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்றாவது பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட்டமை.
* முன்னாள் பிரதமர் தாயும், இந்நாள் பிரதமர் மகளும் ஒரே காலத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தமை.
* விதவைத்துவ அரசியல் கூடுதலாக பயன்படுத்தப்பட்டமை.

என்பனவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

10வது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த 12 பெண்களில் ஐந்து பேர் பாராளுமன்றத்துக்குப் புதியவர்கள். அவர்கள் சந்திரிகா குமாரணதுங்க, ஸ்ரீமணி அத்துலத்முதலி, நிரூபமா ராஜபக்ஷ, பவித்திரா வன்னியாராச்சி, அமர பத்ரா திசாநாயக்க ஆகியோர்.

வரும்...

### ஸ்ரீமணி அத்துலத்முதலி



1946 ஏப்ரல் 27ம் திகதி பிறந்த இவர் கொழும்பு பெண்கள் கல்லூரியின் பழைய மாணவி. கிறிஸ்தவ மாணவர் அமைப்பில் செயலாளராக பணிபுரிந்த அநுபவமுடைய இவர் விளையாட்டுத்துறையில் பரிசுகளைப் பெற்றவர். 1969இல் விளம்பர பிரச்சார நிறுவனமொன்றில் பணிபுரிந்த இவர் 1971 இல் ஹோட்டல் கூட்டுத்தாபனத்தின் செயலாளரானார். 1974 இல் ஐநாவின் வர்த்தக அபிவிருத்தி மாநாட்டில் (ANCTAD) ஜெனிவா தலைமையகத்தின் செயலாளராக பணிபுரிந்தார். முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான லலித் அத்துலத் முதலிய்ய மணமுடித்த இவருக்கு 1983 இல் முதற் பெண் பிள்ளை பிறந்தது.. சேவா வனிதா இயக்கம் மற்றும் அதன் தாய்மார் அமைப்பு என்பவற்றுடன் பணியாற்றிய இவர் 1989 பொதுத்தேர்தலில் கணவருடன் சேர்ந்து தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1992 இல் DUNF இல் அங்கத்துவம் பெற்றார். கணவர் 1993 ஏப்ரல் 23 படுகொலை செய்யப்பட்டதன் பின் 1994 யூலையில் DUNF லலித் அணியின் தலைவியாக பொறுப்பேற்று பொ.ஜ.முவுடன் இணைந்து பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு 1,48,727 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினர். கொழும்பு மாவட்டத்தில் பொ.ஜ.மு. வேட்பாளர்களில் அதிக வாக்குகளைப் பெற்றவர் இவரே. தற்போது போக்குவரத்து நெடுஞ்சாலைகள், சுற்றாடல், மகளிர் விவகார அமைச்சராக உள்ளார். லலித் அத்துலத்முதலி பவுன்டேஷனின் தலைவியாகவும் உள்ளார்.

### நிரூபமா ராஜபக்ஷ



1962 ஏப்ரலில் பிறந்த இவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோர்ஜ் ராஜபக்ஷவின் மகள். திரு.ஜோர்ஜ் ராஜபக்ஷ 1960 மார்ச்சிலிருந்து 1971 யூன் மரணடையும் வரை பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர். நிருபமாவின் பாட்டனார் டீ.எம்.ராஜபக்ஷ அவர்கள் 1936 மார்ச்சிலிருந்து 1945 மே மாதம் வரை அரசாங்க சபையில் அங்கம் வகித்தவர்.

நிரூபமா கொழும்பு பெண்கள் கல்லூரியின் பழைய மாணவி. 1983 முல்கிரிகல தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு போக முயற்சி செய்தபோதும் தோல்வியில் முடிந்தது அது. 1985 இடைத் தேர்தலில் போட்டியிடவில்லை என்றாலும், 1994 மார்ச் தென்மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிகவாக்குகளைப் பெற்று (34,101) தெரிவு செய்யப்பட்டார். 1994 பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக மாகாணசபையிலிருந்து விலகினார். இப்பொதுத்தேர்தலில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பொ.ஜ.மு. சார்பில் போட்டியிட்டு 46,034 வாக்குகளைப்பெற்று தெரிவு செய்யப்பட்டார். இவரது கணவர் ஒரு தமிழர். பெயர் நடேசன். பொதுத்தேர்தலின் போது எதிர்க்கட்சியினரால் தூஷிக்கப்பட அது காரணமானது குறிப்பிடத்தக்கது. தற்போது உல்லாச விமானப்போக்குவரத்து பிரதி அமைச்சராகவுள்ளார்.

### பவித்திரா வன்னிஆராச்சி




1964 நவம்பர் 10ம் திகதி பிறந்த இவர் குறைந்த வயதையுடைய பெண் உறுப்பினர். இவர் ஒரு வழக்கறிஞர். இவரது தகப்பனார் திரு தர்மதாச வன்னிஆராச்சி முன்னாள் பிரதி அமைச்சராகவும், இந்நாள் சப்பிரகமுவா மாகாணசபையின் எதிர்க்கட்சி தலைவருமாவார். 1994 பொதுத்தேர்தலில் தந்தையும் மகளும் ஒரே மாவட்டத்தில் போட்டியிட்டனர். தந்தை தோற்றார் மகள் வென்றார். இத்தேர்தலில் பவித்ரா 62,979 வாக்குகளை பெற்றார். இதே மாவட்டத்தில் வாசுதேவ நாணயக்கார அவர்கள் பவித்திராவை விட பத்து வாக்குகளே மேலதிகமாக பெற்றிருந்தார்.

பெல்மடுல்ல மஹிந்த வித்தியாலயம் மற்றும் கங்கந்த மத்திய மகாவித்தியாலத்திலும் பின்னர் கொழும்பு அனுலா பெண்கள் பாடசாலையிலும் உயர்கல்வி கற்ற பவித்திரா 1985 இல் கொழும்பு சட்டக்கல்லூரிக்குள் நுழைந்தார். 1990 இல் வழக்கறிஞரானார். 1992 இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் கலவான தொகுதி பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். 1993 இல் ரத்னபுரி மாவட்ட இலங்கை சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் தலைவியாக நியமிக்கப்பட்டதுடன் 1993 இல் மாகாணசபைத் தேர்தலில் சப்பிரகமுவ மாகாணத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

இத்தேர்தலில் இவரது தந்தையும் போட்டியிட்டிருந்தார். இவரது தந்தை திரு.தர்மதாச சப்பிரகமுவா மாகாணத்திலேயே அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார். பவித்ரா 32,822 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

வழக்கறிஞர் ஹேமந்த கமகேவுடன் 1993 இல் மணமான இவர் கடந்த வன்முறைக் காலப்பகுதியில் (1981 - 1989) நடந்த பல படுகொலைகளை தேடுவதில் முன்னின்று உழைத்தார். எம்பிலிப்பிட்டிய சூரியகந்தையில் மனிதப் புதைக்குழிகளை தேடுவதில் முன்னின்றவர். காணாமல் போன இளைஞர்களின் பெற்றோருக்காக இலவசமாக வழக்காடிய இவர் இப்போது சுகாதார பெருந்தெருக்கள், சமூக சேவை பிரதி அமைச்சராவார்.

### அமரபத்திரா திசாநாயக்க



1949 மே 6ம் திகதி பிறந்த இவர் அரசாங்க எழுவினைஞராக வாழ்க்கையைத் தொடங்கி பாராளுமன்ற உறுப்பினர் அந்தஸ்து வரை உயர்ந்தவர். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதற்பெண். கேகாலையில் கல்கமுவ மற்றும் நகரகிரி பாடசாலைகளின் பழைய மாணவி. பட்டதாரியான இவர், பாடசாலை காலப்பகுதியில் விளையாட்டுத்துறை தலைவியாக செயற்பட்டவர். 1985 - 1992 களில் சமூகசேவை அதிகாரியாகவும் 1992 - 1994 இல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு காரியாலத்தில் நிர்வாக அதிகாரியாகவும் 1994 இல் கொள்கை திட்டமிடல் அமைச்சில் பிரதித் தலைவராகவும் கடமையாற்றியவர்.

### 10வது பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பெண்கள்

| பெயர் | மாவட்டம் | வாக்குகள் |
|---|---|---|
| **பொ.ஐ.மு.** | | |
| சந்திரிகா குமாரணதுங்க | கம்பஹா | 4.64.588 |
| சிறிமாவோ பண்டாரநாயகா | (தேசியப்பட்டியல்) | |
| ஸ்ரீமணி அத்துலத்முதலி | கொழும்பு | 1.48.727 |
| சுமேத.ஜி. ஜயசேன | மொனராகல | 55.369 |
| நிரூபமா ராஜபக்ஷ | ஹம்பாந்தோட்டை | 4.6034 |
| பவித்திரா வன்னியாராச்சி | இரத்தினபுரி | 6.2979 |
| ஹேமா ரத்னாயக்க | பதுளை | 40.873 |
| சுமித்திரா பிரியங்கனி அபேவீர | களுத்துறை | 85.661 |
| **ஐ.தே.க** | | |
| ரேணுகா ஹேரத் | நுவரெலியா | 49.473 |
| அமரா பியசீலி ரத்னாயக்க | குருநாகல் | 53.421 |
| ராஜமனோகரி புலேந்திரன் | வன்னி | 2.271 |
| அமரபத்திரா திசாநாயக்க | (தேசியப்பட்டியல்) | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈரானியத் திரைப்படங்கள்:

# நவீனத் தன்மை கொண்டவை, எளிமையானவை!

ஈரானியத் தூதரகம் ஏஷியன் பிலிம் சென்டருடன் இணைந்து ஈரானியத் திரைப்பட விழாவொன்றை டிசம்பர் மாதம் 11-17ம் திகதிகளில் எல்பின்ஸ்டன் திரையரங்கில் நடத்தியது. 'ஏஷியன் பிலிம் சென்டர் ஆசியத் திரைப்படங்களை ஊக்குவிக்கும் இணைப்பு நிறுவனத்துடன் (NETPAC) ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பு என்பதால் சமகால ஈரானியத் திரைப்படங்களை இலங்கை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கிலேயே இதை ஏற்பாடு செய்திருந்தது.

Maybe Some Other Time, The Runner, What Else is New? Form Karkheh to Rhein, The Boots. End of Childhood, Sara ஆகிய படங்கள் காண்பிக்கப்பட்டன. இவையனைத்தும் சர்வதேச படவிழாவிக்களில் கலந்து கொண்டவை. சிலது சர்வதேச விருதுகளையும் பெற்றிருக்கின்றன.

ஈரானியத் திரைப்படங்களின் பின்னணியில் ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சி அதன் அடிப்படையிலான தனித்துவக் கலாசாரப் பெறுமானங்கள் என்பன தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. இஸ்லாமியப் புரட்சியின் மாதிரி உருவாக்கத்திற்கும், கலாசாரப்பரப்பலுக்கும் பங்களிப்புச்செய்யும் சிறந்த ஊடகமாக சினிமா தென்பட்டதால் அதன் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்புக்கள், ஊக்குவிப்புக்கள் செய்யப்பட்டன. இந்த ஊக்குவிப்புக்களின் விளைவால், (புரட்சிக்குப்பிந்திய) ஈரானிய சினிமாவில் சர்வதேச தரத்தை எட்டுகிற சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. 'இஸ்லாமிய சினிமா' அல்லது 'இஸ்லாமும் சினிமாவும்' என்ற நகைப்புக்கிடமான பிறரின் எதிர்ப்பாப்புக்களை மீறிய வகையில் ஈரானியத் திரைப்படங்கள் தனித்துவமான முறையில் வெற்றிகண்டன. இஸ்லாமிய கலாசார விழுமியங்களுடன் கூடிய சினிமா ஊடகப் பயன் பாட்டிற்கு ஈரானியத் திரைப்படங்களே முன்மாதிரியானவை என்பதும் குறிபிட்டுக் காட்ட வேண்டியது.

ஈரானியத்திரைப்படங்களைப்பற்றிப் பேசுகையில் தவிர்க்க முடியாத அங்கமாக சில விடயங்களைப் பேச வேண்டியிருக்கிறது. முதலாவதாக அந்நாட்டின் இஸ்லாமியக் கலாசார சூழல், இரண்டாவதாக அந்நாட்டின் அரசியற் பின்னணிகள், புரட்சிக்கு முந்திய கட்டற்ற சினிமாச் சூழலுக்கும் பிந்திய சினிமாச் சூழலுக்குமிடையிலான முழுமுதல் வித்தியாசம் இஸ்லாமியக் கலை, கலாசாரத் தனித்துவமே. திரையிடப்பட்ட படங்கள் அனைத்தும் புரட்சிக்குப்பிந்திய சமூக கலாசார அம்சங்களை உள்வாங்கிய வெளிப்பாடாகவே அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரானியத் திரைப்படங்கள், தயாரிப்பாளர்கள் பற்றி கமலிகா பீரிஸின் இக்கூற்று கவனிக்கத்தக்கதாகும்.

***"ஈரானிய படத்தயாரிப்பாளர்கள் மிகவும் கட்டுப்பாட்டுடன் கூடிய சூழலினுள்ளேயே செயற்படுகின்றனர். அவர்கள் மத, அரசியல், ஒழுக்க ரீதியான கட்டுக்கோப்புக்குள்ளேயே இயங்கவேண்டியுள்ளது. இவ்வாறான தன்மை அதிகூடிய திடசங்கற்பத்துடனேயே ஒருவரையன்றி, ஏனையவர்களை இத்துறையில் இருந்து பின்வாங்கச் செய்துவிடும். ஈரானியப்படங்களில் பாலியல் வன்முறைகள், ஊழல் போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன. எனவே திரைப்படங்கள் தணிக்கைக்கு அனுப்பப்படுமுன் இயக்குனர்கள் தாமாகவே சில தணிக்கைகளை மேற்கொள்கின்றனர். எனவே இப்படங்கள் பாலியல் வன்செயல்கள் போன்றன அற்றவையாக இருப்பின் நிச்சயமாக அவை மேற்கத்தியப் படங்***



தி பூட்ஸ்

***களில் இருந்து வேறுப்பட்டவையாகவே திகழும். மேற்குலகில், அனேகமாக ஒரே கதை பல விதமான அமைப்பில் திரும்பத் திரும்பப் படமாக்கப்படுகின்றன. இவை கணிசமான அளவு பாலியல் வன்முறைகள், ஊழல்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியதாகவே அமையும். எனவே ஈரானியப் படங்கள் நவீனத்தன்மை வாய்ந்தவையாக இருப்பதுடன் மற்றொரு பின்னணியையும் கொண்டுள்ளன. அதாவது சமகால சினிமாப்படங்களில் காணமுடியாத எளிமையையும், புதுமையையும் அவை கொண்டுள்ளன".***

ஈரானியப் படங்களில் காணக்கூடிய அடுத்த அம்சம் யுத்த நிகழ்வுகளுடன் தொடர்புறுறது. யுத்த கால நிகழ்வுகளின் வெளிப்பாடாக அனேக படங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. திரையிடப்பட்ட படங்களில் From Karkheh to Rhein, End of Childhood, என்பன நேரடியாக யுத்தத்துடன் தொடர்புபட்ட பின்னணியைக் கொண்டுள்ளன. ஏனைய படங்களிலும் யுத்தின் குறியீடாக சில பாத்திரங்கள் பாவிக்கப்படுகின்றன. உ+மாக வீட்டில் ஆண்கள் இல்லாமலிருப்பது, ஊனமுற்றவர்கள், அநாதைகள் போன்ற பாத்திரங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

சிறுவர் படங்களுக்காக சர்வதேச விருது பெற்ற The Boots திரைப்படத்தில் ஊனமுற்ற சிறுவனும், தந்தையில்லாத குடும்பங்களும் குறிப்பாக தந்தையில்லாத சிறுமியும் யுத்த நிகழ்வுகளின் தாக்கங்களைப் பிரதிபலிக்கிறார்கள். இவ்வாறான பிரதிபலிப்புக்கள் ஈரானியத் திரைப்படங்களில் பொது அம்சமாகக் காணப்படுகிறது.

ஈரானியத் திரைப்படங்களில் சிறப்பம்சமாக கொள்ளக்கூடியது எளிமையாகும். மிகக்குறைந்த பாத்திரங்களைக் கொண்டு, சொல்ல வந்த விடயத்தைச் சொல்லிவிடுவதாகும். நேர இழுத்தடிப்புக்களோ, தேவையற்ற காட்சிகளோ இப்படங்களில் இல்லை. கதை எங்கே முடிய வேண்டுமோ அங்கே முடியும். 'கமெராவே அதிகம் பேசும். தொய்வுகள் இல்லை. அநாதைச் சிறுவனைச் சுற்றி வரும் Runner லும் சிறுமியே கதாபாத்திரமான Boots லும் End of Childhood ல் படம் சிறுவனிலும் நிகழ்த்தப்பட்டாலும், எது விதசலிப்பையும் ஏற்படுத்தாது படம் நகர்கிறது. ஈரானியப் படங்களின் இவ்வாறான எளிமைக்கான காரணிகளை பிரபல திரைப்பட இயக்குனர் ''அப்பாஸ் கியாரஸ்தொம்'' இவ்வாறு கூறுகிறார்.

***"உலகில் எந்தவொரு நாட்டிலுமில்லாத ஒரு திரைப்படக் கலாசாரத்தையே ஈரான் கொண்டுள்ளது. ஐரோப்பாவில், மக்கள் திரைப்படம் பார்க்கும் போது ஒரு ஒழுங்கு முறையை கடைப்பிடிக்கின்றனர். அதாவது அவர்கள் படம் முடியும் வரையில் ஓரிடத்திலிருந்து நகராமல் அதனைப் பார்த்து ரசிக்கின்றனர். ஆனால் ஈரானில், மக்கள் மலசல கூடங்களுக்கும், சிற்றுண்டிச்சாலைகளுக்கும் எனப் பல வேலைகளுக்காக சென்றுவிடுவார்கள். பின்னர் மறுபடியும் வந்திருந்து அவ்விடைவெளியில் என்ன நடந்தது? எனவும் கேட்பார்கள். எனவே எளிதாக திரும்பக் கூடிய வகையில் அமைந்த கதைகளையே அவர்கள் விரும்புகின்றனர். இவ்வாறு கதை கூறும் சம்பிரதாயம் என்பது எமது கலாசாரத்தின் ஓரங்கமாகும்".***



அபாஸ் கியாரஸ்தெம்

மேற்கூறிய பின்னணியோடு திரையிடப்பட்ட படங்களின் கதைச் சுருக்கத்தை நோக்குவோம்.

**Maybe Some Other Time:**

தொலைக்காட்சி விவரணையாளரான கதாநாயகன் தற்செயலாக தன் மனைவியை இன்னொருவனுடன் காரில் கண்டு விடுகிறான். வாகன நெரிசல்கள் பற்றிய விவரணத் தயாரிப்பின் போதே இவ்வாறு பார்க்க நேர்கிறது. அதிலிருந்து மனைவியின் மேல் சந்தேகம் பிறக்கிறது. அவளின் ஒவ்வொரு அசைவுகளும், செய்கைகளும் இவனுள் சந்தேகத்தை விதைத்து, இவனை உளவாளியாக்குகிறது. அவளுக்குத் தெரியாமல் அவளைப் பல தடைவைகள் பின் தொடர்கிறான். இந்தத் தேடலில் காருக்குரியவனைக் கண்டுபிடித்து உண்மை நிலையை அறிய முயற்சிக்கிறான். அவனது மனைவியும், காரில் கண்டவளும் ஒரே சாயலுள்ள இருவர் என்பதும் இருவரும் சிறுபராயத்தில் பிரிந்தவர்கள் என்பதும் தெரியவருகிறது. உளவியல் ரீதியான தாக்கத்தைப் பிரதிபலிப்பதாகவும் இப்படம் அமைந்துள்ளது. இப்படத்தின் ஒளிப்பதிவு மிகுந்த ரசனைக்குரியதாகும்.

**The Runner**

இஸ்லாமியப் புரட்சிக்குப்பின் வெளிநாடுகளில் திரயைிடப்பட்ட முதற்படம் என்ற பெருமையைப் பெறும். Runner ஓர் அநாதைச்சிறுவனைப்பற்றிய படமாகும். இது ஈரானிய சினிமா மரபுகள், தந்திரங்களை மீறிய படமெனப்படுகிறது. ஒரு துறைமுகத்தில் உடைந்த கப்பலொன்றில் வசிக்கும் ஒரு சிறுவனின் ஆசைகள், அவலங்களைப்படம் சொல்கிறது. வறுமையும், அதனை எதிர்கொள்ளும் தன்மையும் காட்டப்படுகிறது. சிறுவனின் அபாரமான நடிப்பாற்றல் பிரமிக்கவைக்கிறது. இப்படம் சாவதேச விருதுகள் பலதைப் பெற்றுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

**End of Childhood.**

எதிரிகள் நாட்டுக்குள் நுழைந்ததும் பாதுகாப்புத் தேடி ஓடும் நால்வர் கொண்ட ஒரு குடும்பத்தின் கதை. கட்டிய புது வீட்டையும் விட்டு ஓடுகிறார்கள். குடும்பத்தலைவி கர்ப்பிணி. வைத்தியரைத் தேடி தங்களது வாகனத்தில் போகிறார்கள். இடையில் இடர்கள். பழைய நிகழ்வுகள்... தொடர வண்டி போகிறது. இடையில் நீரின்றி வாகனம் நிற்கிறது. நீர் தேடிப்போன தந்தை எதிரிகளின் துப்பாக்கிக்குள்ளாகிறார். தந்தையைத்தேடி தனயன் போகிறான். காயப்பட்டு உயிருக்குப் போராடும் தந்தை குடும்பப்பொறுப்பை ஏற்க மகனைப்பணிக்கிறார். தந்தைக்கு இணையாகச் செயற்படும் சிறுவன் எதிராளிகளிடமிருந்து கர்ப்பிணித் தாயையும், சகோதரியையும் காப்பாற்றுகிறான். அவனது சிறுபராயத்து முடிவு அக்குடும்பத்தின் பொறுப்புதாரியாக்குகிறது. இதிலும் சிறுவனின் நடிப்பே முக்கியம் பெற்றது.

**From Karkheh to Rhein.**

யுத்தவிளைவுகளைப் பேசும் இப்படம் ஜேர்மனியில் படமாக்கப்பட்டிருக்கிறது. அணு ஆயுதத்தாக்குதலுக்குட்பட்ட சிலர் சிகிச்சைக்காக ஜேர்மன் செல்கிறார்கள். இளம் மனைவியையும் சின்னஞ் சிறு குழந்தைகளையும பிரிந்து, கதாநாயகன், [illegible] வைக் குறைவைப் போக்க ஜேர்மன் செல்கிறான். அங்கே சிறுபராயத்திலேயே ஜேர்மன் வந்துவிட்ட தனது சகோதரியை சந்திக்கிறான். பிரிந்த உறவு துளிர்க்கிறது. கடைசியில கண்பார்வை பெறும் அவனுக்கு இரத்தப் புற்றுநோய் இருப்பதாக வைத்தியர் கூறுகிறார். அவனது மரணத்துடன் படம் முடிவுறுகிறது.

இப்படம் யுத்தத்தைக் கண்டித்து, மனிதாபிமானத்தைப் பேசுகிறது. மூன்றாம் உலக நாடுகளை 'தூண்டி விட்டுக் கூத்துப்பார்க்கும்' மேற்கு நாடுகளைக் கண்டிக்கிறது.

**The Boots.**

அதிகம் பேசப்படுகின்ற ஈரானியப்படங்களுள் ஒன்று. 1994ல் Golden Gate விருதைப் பெற்றது. தனக்கு புதிதாக வாங்கித்தரப்பட்ட சப்பாத்துக்களை தொலைத்துவிடும் சிறுமி, அதை மீண்டும் பெற்றுக்கொள்ளும் வரையிலான படம். சிறுபிள்ளைகளை திறம்பட நடிக்கவைத்து எடுக்கப்பட்ட படம். சிறுவர்களுக்கான படமென்றாலும் பெரியவர்களையும் கவரும் விதத்தில் கலா நேர்த்தியோடு படமாக்கப்பட்டுள்ளது.

**What Else is New.**


பழைய மரபுகளை மீறும் இளம் தலைமுறையின் அறிவார்ந்த செயற்பாடுகளையும், முயற்சிகளையும் சித்தரிக்கும் படம்.

**Sara.**

'தர்யுஷ் மெஷ்ர்ஜீய்' ஆல் நெறிப்படுத்தப்பட்ட இத்திரைப்படமும் அதிகம் பேசப்பட்ட படமாகும். திருமணவாழ்க்கை நடத்தும் சாரா கணவனின் நோயைக் குணப்படுத்த கணவனின் நண்பனிடம் பணம் பெறுகிறாள். கணவனுக்குத் தெரியாமல் பணம் பெற்றதால் பல சிக்கல்கள் எழுகின்றன. குறுகிய நோக்குடன் மனைவியை அனுகுகிறான் கணவன். அதிருப்தியடைந்த அவள் குழந்தையுடன் கணவனை விட்டுப் பிரிகிறாள். இப்படம் ஈரானிய மிகச் சிறந்த தயாரிப்புக்களில் ஒன்றாகும்.

திரையிடப்பட்ட படங்கள் அனைத்தும் கலா நேர்த்தியுடன் தயாரிக்கப்பட்டிருந்ததென்பது சிறப்பான அம்சம். சிறுவர்களின் நடிப்பு முக்கியம் பெற்ற படங்களாக சில படங்கள் அமைந்தனவும் குறிப்பிடத்தக்கது. ஈரானியத் திரைப்படக் கையேட்டில் தமிழில் விளக்கக் குறிப்புக் காணப்படாமை மிக முக்கிய குறைபாடாகவே தெரிகிறது

***உதவியவை: தூது***
***ஈரான் சினிமா வாரக்கையேடு***



என்ட் ஒப் சைல்ட்ஹுட்




சாரா



வட் எல்ஸ் இஸ் நியூ



புரொம் கார்கே ரூ ரேன்




மே பி சம் அதர் டைம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் இலக்கியம்



**இன ஒடுக்கு முறையில் இருந்து அண்மையில் விடுபட்ட தென்னாபிரிக்காவில் மக்கள் இலக்கியத்துக்கான குரல் எழுந்துள்ளது. மக்கள் இலக்கியம் பற்றி தென்னாபிரிக்க எழுத்தாளர் நாடின் கோர்டிமர் அவர்களின் கருத்துக்கள் சுருக்கமாக கீழே தரப்படுகின்றன. நாடின் கோடிமர் 1991இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்றவர். இன ஒதுக்கலினால் பிளவுபட்டுக் கிடக்கும் கறுப்பு மக்களின் சமுதாய அவல அனுபவங்களைச் சித்தரிக்கும் பல நாவல்களையும் எழுதியுள்ளார்.**

உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகளில் இலக்கியம் அனேகமாக மத்திய தரவர்க்கத்தினரின் சொத்தாகவே உள்ளது. அனேகமான எழுத்தாளர்களுக்கு மத்திய தர வர்க்கத்தின் அபிலாசைகளுடனேயே பரீட்சயம் உள்ளது.

எழுத்தறிவற்றவர்களுக்கும் அறைகுறை எழுத்தறிவு உடையவர்களுக்கும் உரிய இலக்கியம் இனங்காணப்பட முடியாதவர்களாகவே இருக்கிறது.

இம்மக்கள் காலனியாதிக்கத்திற்கு பிற்பட்ட உலகில் அதிலும் குறிப்பாக தென் ஆபிரிக்காவில் பண்பாட்டு மரபுகளின் பிரதிநிதிகளாக உள்ளனர்.

கடந்த முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாக, பண்பாடு என்னும் தளத்தில் இந்த அடிநிலை மக்களை யாரும் கருதவே இல்லை. உண்மையிலும் மானுடப்பண்பாடு ஒன்று அவர்களுக்குத் தேவை என்பதோ அந்தப்பண்பாட்டு உருவாக்கத்துக்கு அவர்களால் பங்களிப்பு செய்யப்படமுடியும் என்பதோ! ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

பல கறுப்பு இனத்தைச் சார்ந்த எழுத்தாளர்கள் மேலை நாட்டுக் கல்வியினால் தம் இனத்தை விட்டு ஒதுங்கியவரானார்கள். இதனால் அவர்களது எழுத்துக்களில் அடிநிலைக் கறுப்பு மக்களின் வாழ்க்கைப் பிரச்சினை வெளியிடப்படவில்லை. அந்தப்பிரச்சினைகளை அவர்களால் அணுகவும் முடியவில்லை.

மக்கள் இலக்கியம் தேவையானதே என்ற கோரிக்கை இன்னும் சில விடயங்களையும் வலியுறுத்துகின்றது.

குடியானவர்கள் தொழிலாளர்கள் ஆகியோரின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு எளிதில் புரியுமாறு எழுதப்படுதல், நூல்நிலையங்கள் இல்லாத சேரிகளிலும் குடியிருப்புகளிலும் பரவக்கூடிய விதத்தில் அவற்றை வினியோகித்தல் ஆகியனவே அவை.

இனி, பழைய சமூக யதார்த்த வாதத்தில் இருந்து ''மக்கள் இலக்கியம்'' எவ்வாறு மாறு படுகின்றது என்பதைக் காண்போம். பழைய சமூக யதார்த்த வாதப் படைப்புகளில் எழுத்தாளர் ஒருவர் தொழிலாளி ஒருவரை மையமாகக்கொண்டு ஒரு பிரச்சினையை கதையாகவோ கவிதையாகவோ படைப்பார். ஆனால் அந்த எழுத்துகளில் யாரைப்பற்றி எழுதுகிறாரோ அவருடைய இனத்தை வர்க்கத்தை, அம்மக்கள் தொகுதியை சார்ந்தவராக இருக்கமாட்டார். எனவே அவர் மேலெழுந்த வாரியாகவே தமது கதாபாத்திரங்களின் உணர்வுகளைச் சித்தரிப்பார். அல்லது அவரது சித்தரிப்பு உண்மையிலும் ''அவர் பிரதிநிதித்துவப்படுத்தும்''வர்க்க உணர்வாகவே வெளிப்படும்.

ஆனால் மக்கள் இலக்கியம் என்பது யாரைப் பற்றி உருவாக்கப்படுகிறது என்பதை மட்டுமல்ல யாரால் அது உருவாக்கப்படுகிறது என்பதையும் முக்கியமான தொன்றாகக் கருதுகிறது.

மக்கள் இலக்கியம் எந்த மக்களுக்காகத் தேவைப்படுகிறதோ அந்த மக்கள் யார்?

காலையில் வேலைக்கு போகாவிட்டால் வயிறுபட்டினி என்ற நிலையில் வாழும் கறுப்பர்கள்: கழனிகளில் வேலை செய்யும் கறுப்பர்கள்; சுரங்கத் தொழிலாளர்கள் அன்றாடக் கூலிகளுக்காக தொழிற்சாலைகளை வலம் வரும் கூலிகளான கறுப்பர்களே இவர்கள்.

மக்கள் இலக்கியம் என்பது இவர்களுடைய வாழ்க்கையைத் தொட்டு அதனுள் ஆழ்ந்து அதனை ஆராய்ந்து அப்பிரச்சினைகளை அடிப்படையாகக்கொண்டு அவர்களாலேயே படைக்கப்படுவதாகும்.

எமது கறுப்பு மக்கள் சமூகத்திடையே வாழும் கதை கூறுவோர் எனப்படுவோர் இத்தகையோரே! இந்தக் கதைகூறுவோர் தமது சமூகத்தின் சிக்கல்களில் பங்கு கொள்கின்றனர். பின்னர் அவற்றை கதைகளாக உருவாக்கி தமக்கே உரிய தனியாற்றலுடன் தமது சந்ததியினருக்கு கதையாகக் கூறுகின்றனர். தென்னாபிரிக்க இலக்கிய ஏடு ஒன்று உழைப்பாளிக் கவிஞர்களை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறது. ''இந்தக் கவிஞர்கள் ஏதோ ஒரு துறையில் உடல் உழைப்பாளிகளாக இருந்துக்கொண்டு தம் ஓய்வு நேரத்தில் கவிதைகளை எழுதுகின்றனர்''.

இங்கு கவனிக்கக் கூடியது ஒரு படைப்பாளி தானே ஒரு தொழிலாளியாகவும் இருப்பதாகும்.

இவ்வாறு கவிஞனோ நாடகாசிரியனோ கதாசிரியனோ, தான் புரியும் தொழிலை விட்டுவிட வேண்டும், என்று விரும்புவதில்லை; உழைப்பாளி வர்க்கத்தை விட்டு வெளியேற வேண்டும்; எனவும் விரும்புவதில்லை.

தாங்கள் உழைப்பாளிகளாக இருக்கும் நிலையிலும் தங்களுக்கு இலக்கியம் படைப்பதற்குள்ள உரிமையை இவர்கள் உயர்த்திப் பிடிக்கிறார்கள்.

''கூலிக்காக எட்டுமணி நேரம் மாரடிக்கும் நிலையிலும் இலக்கியத்தின் பேரின்பத்தை நுகர விரும்புகிறோம். எங்கள் இலக்கியம் எங்கள் மாரடிப்பில் இருந்து பிறந்து எங்களுக்கு இன்பமூட்ட வேண்டும்'' என்கிறார்கள்.

உழைப்பாளிக் கவிஞர்கள் தான் தொழிலாளர்களின் நாட்டுப்பாடலாசிரியர்கள். அவர்களுடைய வேலை நிறுத்தங்கள், ஊதியத்தகராறுகள் தொழிற்சாலை விபத்துக்களின் அவலங்கள், வேலை நிறுத்தங்களின் போது வரும் காவல் துறை (பொலிசு)யினருடனான வன்முறைகள், மரணங்கள் ஆகிய உழைப்பாளி வர்க்கத்தின் எல்லாத்துயரங்களையும் அவர்கள பாடுகின்றார்கள்.

சுரங்கத்தின் பாறைகள் இடிந்து வீழ்ந்து சுரங்க அடியாழத்தில் தோழர்களுடன் இருக்கும் போதும் அவன் கவிஞன்தான். அந்த அனுபவம் அவனைக் கவிஞனாக்குகிறது.

நாங்கள் கதைபடித்து சுவைத்திருக்கிறோம். ஆனால் அதனையே ''வாழ்ந்து'' அனுபவித்ததில்லை. எனவே தொழிலாளர்களின் சுலோகங்களை உள்ளடக்கிய கவிதைகள் நையாண்டி போலத் தென்படலாம். நம் உள்ளத்தை தொடாமல் இருக்கலாம். ஆனால் உண்மையிலும் அவை நமக்காக இயற்றப்பட்டவை அல்ல: இலக்கியத்தில் வாழ்க்கையைத் தாண்டி அனுபவம் பளிச்சிட வேண்டும் என்பவர்களுக்கு இந்த மக்களின் இலக்கியங்களில் சுவை தெரியும்.

நாம் உலகை விட்டு எங்கோ சஞ்சரிப்பதில்லை, தொழிலாளர் உலகத்தின் முக்கியத்துவத்தை தகுதியை எடுத்தியம்பி அவர்களுக்கு தேசிய உணர்வில் தக்க இடத்தை பெற்றுத் தருவதே மக்கள் இலக்கியத்தின் குறிக்கோள்.

இதை எப்படிச சாதிப்பது.

''குழந்தைகள் கூட புரிந்து கொள்ளும் எளிய சொற்கள்; காற்றினைப் போல் ஒவ்வொரு இல்லத்திலும் நுழையக்கூடிய சொற்கள்'' (ஜார்ஜ் ரெபெல்லோ) இவைதான் மக்கள் இலக்கியத்துக்கு தேவையானவை.

ஆனால் இதை விடக் கடினமானது எதுவுமில்லை. ஏனெனில் சொல்வளத்தில் மேதையாக விளங்குவோர் கூட காற்றைப் போல் ஒவ்வொரு இல்லத்திலும் நுளையக்கூடிய சொற்களை கண்டு பிடிப்பதற்காக தமது வாழ்நாளையே இழந்திருக்கிறார்கள்.

பாமர மக்களினுள்ளே நிறைந்து கிடக்கும், இதுவரை கண்டு பிடிக்கப்படாமல் இருக்கும் கருவூலங்களை வெளிப்படுத்துவதும மககள் இலக்கியத்தின் ஒரு கோரிக்கையாகும்.

இதுவரை கால அனுபவத்தில் தென் ஆபிரிக்காவில் மக்கள் இலக்கியம் என்ற தளத்தில் அதிகளவு குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக நாடகவியல் அமைகின்றது.

தொழிற்சாலைகளில் நடிக்கப்பெறும் நாடகங்களில் அனுபவங்களின் ஒருங்கிணைப்பு இருக்கிறது. நாடகத்தின் கரு அவர்களின் சுயசரிதங்களாக இருக்கிறது. தொழிலாளி முதலாளி இடை முரண்பாடுகளை அது சித்தரிக்கின்றது. உரையாடல்களில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் பாட்டுக்கள் சைகைகள் மூலமாக அதுசரிசெய்யப்படுகின்றது. இதுநகைச்சுவையாகவும் அமைகிறது. நீண்டகாலமாகவே பண்பாட்டு நலன்களை பெறமுடியாதவர்களாக கறுப்பின மக்களான இவர்கள் ஒதுக்கப்பட்டு இருந்ததினால் இந்தப் பாமர மக்களுக்கு எழுத்துலகின் மீது ஒரு வெறுப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

இதை நீக்க வேண்டும். மக்களிடையே புத்தகங்களுக்கு ஒருதாகத்தை ஏற்படுத்த வேண்டும்.

எந்த எழுத்தாளர் ஆயினும் சரி தெளிவில்லாமல் மனதில் துளிர்க்கும் எண்ணங்களையும், உணர்வுகளையும் ஆராய்ந்து ஒரு முகப்படுத்த வேண்டும். தோல்விகளுக்கும் வாழ்க்கையின் இக்கட்டான நிலைகளுக்கும் காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். இதன் மூலம் எழுச்சிப் பெற்ற உள்ளங்களை உருவாக்க வேண்டும். எழுச்சி பெற்ற இந்த உள்ளங்கள்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வலுஉடையவை.

இலக்கியம் படைத்தல் ஒரு சிலருக்கே உரிய உரிமையல்ல. ஆற்றல் உள்ள எவரும் தம் திறமையை உணர்ந்து இன்றைய அரசியல், சமூக, பொருளாதார, நிலைமைகளில் தன்னை வளர்த்துக்கொள்ளும் உரிமை உடையவர் ஆவார். ஆனால் கடந்த தசாப்தங்களில் இந்த உரிமை கறுப்பினத் தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை.

இவர்கள் தமது வாழ்விடங்களில் இருந்து பிடுங்கப்பட்டு சுரங்கத் தொழிலாளர்களாகவும் தெருக்களை சுத்தப்படுத்துபவர்களாகவும் அடிமைகளாகவும் அழிந்துபோகின்றனர்.

தமது காலத்தின் அனுபவங்களை, தொழில்நுட்ப விஞ்ஞான மற்றும் பண்பாட்டு வளர்ச்சிகளையும் தொழிலாளர்கள் வெறுமனே தொழிலாளர்களாக இருந்து கொண்டு வலுவான மக்கள் இலக்கியத்தைப் படைக்க முடியாது. என்பதை உணர்த்துகின்றன.

மக்கள் இலக்கியம் ஒன்று உருவாக வேண்டுமானால் இந்தத் தொழிலாளர்கள் தங்களுக்கு இசைவான துறைகளில் திறமைகளை வளர்க்க வேண்டும். எழுத்து துறையை நன்கு பயில வேண்டும். அதன் மூலம் மொழியை தங்களுடைய அனுபவங்களின் வாகனமாக மாற்றலாம். ●

சுருக்கமும் மீள் கட்டுரையாக்கமும் T.P.N.

நன்றி: யுனெஸ்கோ கூரியர்.

# "தோனா கத்தரினா"
## சிங்கள நாடகங்களுக்கு ஒரு பலம்

பிரபல நாடகவியலாளரான கே.பி.ஹேரத் அவர்கள் பல ஆண்டுகளுக்குப் பின் புதிய படைப்பொன்றை உருவாக்கியுளளார். அது தோனா- கத்தரினா என்ற மேடை நாடகமாகும். தனது சுயமான ஆக்கங்கள் மூலம் படைப்புக்களை மேற்கொள்ளும் ஹேரத் அவர்கள் தற்கால நாடகவியலாளர்களில் முதன்மையானவர்.

அண்மையில் மேடையேறிய, ஹேரத்தின் தோனா - கத்தரினா நாடகம் மூலம் சிங்கள மேடை நாடகங்கள் ஆரோக்கியமான சுவட்டுக்கான அத்திவாரத்தை எடுத்துவைத்துள்ளன எனலாம். அதேபோல ஹேரத் அவர்களினதும் முன்னேற்றத்தினை இந்நாடகம் பறைசாற்றுகின்றது.



இலங்கையில் நெருக்கடிக்குட்பட்ட ஓர் யுகத்தில் வாழ்ந்த தோனா - கத்தரினா என்ற பெண்ணின் வரலாற்றை பாத்திரப்படைப்பாக்கி ஹேரத், நவீன நடிப்பு உத்தியை கையாண்டு மேடையேற்றியுள்ளார்.

சைமன் நவகத்கமயின் ''சுப சஹா யச'' (சுபவும் யசவும்) என்ற நாடகத்திற்குப் பின் வரலாற்றுத் தகவல்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சிறந்த நாடகம் தோனா- கத்திரினா தான் என்பது பலரின் தனிப்பட்ட அபிப்பிராயமாகும். ஏனெனில் தயாரிப்பு, நடிப்பு உத்தி, போன்ற அம்சங்கள் 'சுப சஹா யச'வை விட இங்கு பிரமாதமாக கையாளப்பட்டிருக்கின்றது.

போர்த்துக்கேயர்களால் ஆக்கரமிக்கப்பட்ட இலங்கையில் சிங்கள அரசத்துவத்தினதும், அதன் கூறுகளினதும் மாற்றங்கள் இந் நாடகத்தில்பின்புலமாகும்.

ஆக்கிரமிப்பின் காரணமாக சிங்கள அரசத்துவமும், அரசவம்சமும் நெருக்கடிக்குள்ளனாதால் அதுவரை உறுதியாக நிலைத்திருந்த ''பிக்குகளின் சமயம்'' தளர்வடையத் தொடங்கியது. அத்தோடு மேற்கத்திய ஆக்கிரமிப்பு கலாசாரமும், தேசிய கலாசாரமும் ஒன்றையொன்று மோதிக்கொண்டன

இவ்வாறு கலாசார மோதலுகருள்ளான இலங்கைச் சமூகத்தில் தோனா - கத்தரினா என்ற தனிமைப்படுத்தப்பட்ட பெண் எதிர்கொள்ளும் வாழ்க்கைப் போராட்டத்தையே ஹேரத் வெளிக்காட்டுகின்றார்.

அரசியல் சமூகத்தின் எண்ணற்ற விருப்பங்களைக் கொண்டிருக்கும் மனிதத்தன்மையை எதிர்கொள்ளும் அவலங்களை நெறியாளர் சுட்டிக்காட்டுகின்றார்.

சிங்கள மேடை நாடகங்களில் காணக்கிடைக்காத பல இயல்புநிலைகளை கொண்ட பாத்திரத்தை தோனா- கத்தரினா மூலம் காணக்கூடியதாக இருக்கின்றது.

நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் அரசத்துவமும், சமூகமும தோனா- கத்தரினா என்ற 14 வயது சிறுமியை வயோதிபர் ஒருவருக்கு மணமுடிக்க கட்டாயப்படுத்துகின்றது. பின்னர் அன்பும் பாதுகாப்பும் இன்றி வாழ்க்கையை நடாத்தும் அவள், முதல் கணவனின் தம்பியை மறுமணம் முடிக்கும் படி கட்டாயப்படுத்தப்படுகிறாள். மறுமணம் மூலம் பெற்ற குழந்தைகளினால் அவள் வாழ்க்கை எதிர்பார்ப்புக்கள் கொண்டதாக மாற்றமடைகின்றது. தோனா கத்தரினா எதிர்பார்ப்புக்கள் வீணாகும் வகையில், அவளது மகன் கொலை செய்யப்படுகிறான். மகள், பலாத்காரமாக இரண்டாவது கணவனுக்கு மனைவியாகினறாள்.

அராஜகமும், ஆசாரமும் அற்ற சம்பவங்களின் காரணமாக, மனித வாழ்க்கை எவ்வளவு தூரம் துரதிருஷ்டவசமாத மாறுகின்றது என்பதை ஒரு சந்தர்ப்பத்திலும், இலங்கையில் அரசத்துவமும் அதனோடு பிணைந்துள்ள பிக்கு சமூகம் தொடர்பான முன்பில்லாத விரோதம் ஒரு சந்தர்ப்பத்திலும், அதேபோலவே இலங்கையில் ஆக்கிரமிப்பு வரலாற்றுக்குட்படாத மனிதனின் உண்மைக்கதையை ஒருசந்தர்ப்பத்திலும் ஹேரத் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார். மற்றும் அரசின் ஆணையையும் ராஜதர்மத்தையும் பற்றி கேள்விகேட்காது செயற்படும் மனிதனின் துக்ககரமான விளைவுகளையும் சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வாறு பல சந்தர்ப்பங்களை சுட்டும் செய்திகள் இந்நாடகத்தில் இருப்பதனாலும் பலகூறுகளாக பாத்திரங்கள் பிரித்து படைக்கப்பட்டு இருப்பதாலும் இது சிங்கள மேடை நாடக சமபிரதாயங்களை மீறியுள்ளது.

பொதுவாக வரலாற்று தகவல்கள் நாடகமாக்கப்படும்போதுஅதன் கன்னித்தன்மை கெட்டுவிடும் என்ற காரணத்துக்காக ஹேரத் அவர்கள் தோனா - கத்தரினாவை நாடகம் முழுவதும் உலவவிட்டிருக்கிறார். தோனா - கத்தரினா இச்சமூகத்தை நோக்கும் அடிப்படையிலேயே நாடகம் அமைந்துள்ளது.

இதன் படி அவளின் சுயவிமர்சனத்தின் அடிப்படையே இந்நாடகத்தின் உயிரோட்டமாகும்.

இத்தோனா கத்தரினா நாடகத்தில் சிற்சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

அதாவது தோனா - கத்தரினா பலாத்காரத்திற்குள்ளாகும் போது ஏற்படும் சமூகப் பார்வை எவ்வாறானதென்பதை நெறியாளர் இங்கு சுட்டிக்காட்ட விரும்பவில்லை.

விமலதர்மசூரிய தோனா - கத்தரினாவை மணமுடிப்பதும் அவரின் தம்பி தோனா கத்தரினாவையும் மகனையும் பலாத்காரமாக மணமுடிப்பதும் இராஜதந்திரத்தின் காரணமாகவா அல்லது அரசின் ஆசை காரணமாகவா என்ற கேள்விகள் எழும்புகின்றன.

ஒரு பக்கம் இவ்வாறான விமர்சனங்கள் எழுப்பப்படாத நாடகத்தின் பயன்தான் என்ன?

எவ்வாறாயினும் தோனா-கத்தரினா சமீப மேடைநாடக வரலாற்றில் சிறந்த ஒரு வரவாகும். மேடை நாடகங்கள் மக்களுக்கு மறக்கப்படும் இச்சந்தர்ப்பத்தில் சிறந்த அம்சங்களைக் கொண்டு இந்நாடகம் மேடை ஏறியது வரவேற்கத்தக்கது.

லியனகே அமரகீர்த்தி

தமிழில்: ரத்னா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெயரில் என்ன இருக்கிறதோ?

## — சிவசேகரத்திற்கு ஒரு எதிர்வினை

உள(ழ)வுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற வரிகள் மூலம் பாரதியின் இன்னொரு முகத்தையும் சரிநிகர் வாசகர்களான எங்களுக்குக் காட்டித் தந்ததற்காக சிவசேகரத்திற்கு எனது முதற் கண் நமஷ்காரம். சுகன் மற்றும் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) போன்றவர்களது தவறுகளை தனது எள்ளலின் மூலம் அதிகாரபூர்வமாக களைந்தெறிந்து எங்களை அந்த நச்சுச் சூழலில் விழுந்து விடாமல் காப்பாற்றியமைக்காக மெத்தப்பெரிய உபகாரம். மீண்டுமொருமுறை தனது கவிதை நடையின் மூலம் எங்களெல்லோரையும் கவர்ந்து விட்ட சிவசேகரத்தை எனது சல்யூட்டை ஏற்றுக்கொள்ளுமாறு மிகத் தாழ்வாக வேண்டிக் கொள்கிறேன்.

பெயரில் என்ன இருக்கிறத்ாமோ என எண் சாஷ்திரத்தில் நம்பிக்கையுடையோரை எள்ளி நகையாடிய சிவசேகரம் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) என்ற நாமத்தை பயன்படுத்துவோர் அதைப்பயன்படுத்துவது யோக்கியமல்ல என்று கூறுவது மேற்சொன்ன நகையாடலில் அடங்கியது தானோ! வாழ்க சிவகேரம், வளர்க அவரது பணி என வாழ்த்துவோமாக.

மனோரஞ்சன் லண்டன் வந்திருந்த போது அவர் UTHR(J) அமைப்பை சேர்ந்தவரென அறிமுகப்படுத்தப்பட்டதாக சரிநிகர் இதழ் 81ல் சிவசேகரம் கண்டுபிடித்திருந்தார். லண்டனில் மனோரஞ்சன் இரண்டு கூட்டங்களில் கலந்து கொண்டார். சிவசேகரம் அவர்கள் இரண்டு கூட்டங்களுக்கும் சமூகமளிக்கவில்லை, என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டு கூட்டங்களிலும் மனோரஞ்சன் UTHR(J)அங்கத்தவரென அறிமுகப்படுத்தவில்லை. (இது எவரதும் ஒரு தவறாக இருக்கலாம் - சிவசேகரம், சரிநிகர்.) அவ்வமைப்புக்கு உதவியாளராக இருந்ததாகத்தான் அறிமுகப்படுத்தப்பட்டார். இத்தகைய வதந்திகள் பரப்புவது யார் மேலுள்ள காழ்ப்புணர்வினாலும் அல்ல என்பதைப் புரிந்து கொள்வோமாக.

மனித உரிமைகள் தொடர்பாக சிவசேகரத்தின் நிலைப்பாடு குறித்து சரிநிகர் இதழ் 83ல் சுகன் எழுப்பியிருந்த கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காமல் கிண்டலடித்தார் இதழ் 85ல் சிவசேகரம். இது அவரது நழுவல் போக்கையே புலப்படுத்தியது.

UTHR(J) என்ற பெயரில் வரும் அறிக்கைகளின் உண்மைத்தன்மையை விவாதிப்பதை விட்டுவிட்டு UTHR(J) என்ற ஒரு அமைப்பே இல்லையென நிரூபிப்பதன் மூலம் அவர்களால் வெளியிடப்படும் ஆவணப்படுத்தப்பட்ட நிகழ்வுகளை இலகுவாக புறக்கணித்து' விடலாம் என்ற கபடத்தனமே என்பதில் ஐயமெதும் சிவசேகரம் போன்றவர்களுக்கோ அவர்களது இந்நிலைப்பாட்டை கேள்விக்குள்ளாக்கும் என் போன்றவர்களுக்கோ இருக்கப்போவதில்லை. UTHR(J) அமைப்பினால் வெளியிடப்படும் அறிக்கைகள் ஒரு தலைப்பட்சமானவை புலிகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்பானவையே என்பது பெரும்பாலானோரால் முன்வைக்கப்படும் ஒரு குற்றச்சாட்டு. இக்குற்றச்சாட்டை முன்வைப்பவர்கள் கிழக்கிலங்கையில் இலங்கை அரசபடைகளால் நடாத்தப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான UTHR(J) அமைப்பினால் வெளியிடப்படும் அறிக்கைகளை வாசிப்பதில்லையோ என்னவோ? பூனை கண்ணை மூடிக்கொண்டு உலகம் எல்லாம் இருட்டு என்றதாம். எவ்வெப் பகுதிகளில் யார் அதிகாரத்தில் இருக்கிறார்களோ அவர்களால் தான் அந்தப் பகுதிகளில் பெருமளவில் ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்களை நடாத்த முடியும் என்பதை எவராலும் மறுக்க முடியாது. தவிர புலிகளால் தமிழ் மக்களுக்கு எதிராகவும், சிங்கள மக்களுக்கு எதிராகவும் நடாத்தப்படும் மனித உரிமை மீறல்களை தமிழராகிய நாங்கள் தார்மீகப் பொறுப்பெடுத்து விமர்சிக்காமல் வேறு யார் செய்வது நியாயமாக இருக்கும்?

முழு இலங்கையிலுமுள்ள எல்லாச் சமூகங்களிலும் ஏற்பட்ட மனித உரிமைகளுக்கான தேடலின் அவசியத்தினால் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு 1988ல் உருவாக்கப்பட்டது. இதே காலத்தில் தான் அதன் கிளை அமைப்பாக மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) அமைப்பும் தனது செயற்பாடுகளைத் தொடங்கியது. முறிந்த பனை புத்தகத்தின் ஆசிரியர்கள் தான்இதன் ஆரம்ப கர்த்தாக்களாவர். இவர்களில் ஒருவரான கலாநிதி ராஜனி திரணகம 1989ல் கொலை செய்யப்பட்டார். இக்கொலைக்கு உரிமை கோரும் 'யோக்கியம்' கூட எவருக்கும் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று UTHR(J) அமைப்பைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் இல்லை. என்பதை சுட்டவனை சுட்டவனும் சுடப்பட்டான் என்ற தனது கவிதை வரிகளின் மூலம் தமிழ் சமூகத்தின் மீது திணிக்கப்பட்டிருக்கும் கலாசாரப் புரட்சியை எங்களெல்லோருக்கும் நிதர்சனமாக்கிய சிவசேகரம் தான் சொல்லித்தர வேண்டுமென்பதில்லை. UTHR(J) அமைப்பால் வெளியிடப்பட்ட SOMEONE ELSE' S WARன் முகவுரையில் அவர்களாலேயே பின் வரும் வரிகள் எழுதப்பட்டிருந்தன. "UTHR(J) அமைப்புடன் அடையாளங்காணப்பட்டு இன்று வரை தப்பிப்பிழைத்திருக்கும் நாங்கள் தொடர்ந்தும் எங்களது வழமையான பணிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொடர முடியாதவர்களாக உள்ளோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்களுடைய இந்நிலைமைகளைக்காரணம் காட்டி எங்களது உரிமைகளைப் பறித்து விட்டது. ஆனாலும் எங்களது பதவிகளை காப்பாற்றுவதற்காக சாதாரண மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை மனச்சாட்சியின்றி மறைத்து வைக்க முடியவில்லை.''

UTHR(J) அமைப்பின் வெளியீடுகளை ஒழுங்காக வாசிப்பவர்களுக்குப் புரிந்திருக்கும் அவர்களது சமூக அரசியல் கோட்பாடுகளுக்கு அப்பால் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசனங்களே இவற்றின்'வெளியீட்டுக்கு உந்து சக்தியாக இருந்திருக்கின்றன என்பது. இலங்கையில் மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்ட அனைத்து பகுதியினரதும் நடவடிக்கைகளை அவர்களது சக்திக்குட்பட்டளவில் UTHR(J) அமைப்பினர் ஆவணப்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. அறிக்கைகளின் சில பகுதிகள் மத்தியதர வர்க்க குணாம்சங்களைப் பிரதிபலித்தாலும் கூட, உதாரணமாக முறிந்த பனையில் வரும் பிரின்டோ என்ற நாயைப் பற்றிய பகுதி.

வன்முறைதொடர்பான தத்துவ ரீதியான விவாதத்திற்கு வருவோம். உலகில் அனேகமாக எல்லா பகுதிகளிலுமே அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தோரைக் காப்பாற்றுவதற்காக, அவர்களின் உரிமைகளைத் தக்கவைத்துக்கொள்வதற்காக ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட அரச வன்முறை ஆயுதப்படைகள், சிவில் நிர்வாகம் என்பவற்றினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இந்த வன்முறையை வெற்றி கொள்வதற்காக பல வழிகள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக சத்தியாக்கிரகம், மறியல் போராட்டம் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இவை எவற்றிலும் இந்த வன்முறையை வெற்றி கொள்ள முடியாத நிலையிலேயே இறுதியாகவே எதிர் வன்முறை கைக்கொள்ளப்படுகிறது. இந்த வன்முறை சிவில் இராணுவ நிலைகளுக்கு எதிராக தற்காப்பு அல்லது தாக்குதல் என்ற நிலையிலிருந்த ஒரு குறிப்பிட்ட இன மக்களுக்கு எதிராக, தங்களுடைய கொள்கைகளை நடைமுறைகளை ஏற்றுக் கொள்ளாத அல்லது ஆதரவளிக்காதவர்களுக்கு எதிரான வன்முறையாகும் போது அது மனித உரிமை மீறலாகக் கருதப்படுகிறது.

இலங்கையில் இன்று நடைபெறும் தமிழ் மக்களுக்கெதிரான அடக்குமுறை, யுத்தம் என்பன அரச வன்முறை வடிவங்களாகவே காணப்படுகின்றன. சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கு எதிராக புலிகளால் நடாத்தப்படும் வன்முறைகள், புலிகளின் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மாற்றுக் கருத்து அல்லது அவர்களின் நிலைப்பாட்டை ஆதரிக்காதோருக்கு எதிரான வன்முறை எதிர்ப்பு வன்முறையாகவோ விடுதலையடைவதற்கான வன்முற்றயாகவோ கருதப்பட முடியாது. மாறாக இவையெல்லாம் அவர்களின் மனித உரிமை மீறல்களே.

இறுதியாக சரிநிகர் இதழ் 85ல் பஞ்சமன் என்பவர் ஒரு மனித உரிமைவாதிக்கும் பத்திரிகையாளர் ஒருவருக்கும் நடந்த விவாதத்தை சுவாரஸ்யமாக எழுதியிருந்தார். (நாகர் கோவில் பாடசாலை மீது குண்டு வீசப்பட்டது தொடர்பான விவாதம்) அதை வாசிப்பதிலிருந்து என்னை என்னால் தடுக்க முடியவில்லை. இறுதிவரை அந்த மனித உரிமைவாதியின் பெயரை பஞ்சமன் குறிப்பிடவேயில்லை. காரணம் அந்த மனித உரிமைவாதியினது உயிரைக் காப்பாற்றும் பெரிய பொறுப்பு தன்னிடம் தான் உள்ளதென பஞ்சமன் நினைத்தது தானோ! அல்லது மனித உரிமைவாதிகளெல்லோரும் ஒரு பக்க சார்பானோர் புலிகளின் மேல் காழ்ப்புணர்வு கொண்டோர் என்ற படிமத்தை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சியா?

***சிவநாதன்***
இலண்டன்.



## பதவி வெற்றிடம்

சரிநிகர் பத்திரிகையில் சத்தைப்படுத்தல் அதிகாரி (Marketing Executive) பதவியொன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சந்தைப்படுத்தல் துறையில் கல்வித்தகைமையும், சந்தைப்படுத்தல் திட்டமிடல் (Planning) விநியோகம் (Distribution) மற்றும் கட்டுப்படுத்தல் (Controling) துறைகளில் அனுபவம் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சிங்கள மொழியிலும் பேசும் ஆற்றலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

பத்திரிகைத்துறை அனுபவம் விசேட தகைமையாக கொள்ளப்படும் சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 01~02~1996

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி
'சரிநிகர்'
இல. 4 ஜயரட்ன மாவத்தை,
திம்பிரிகஸ்யாய
கொழும்பு~5

## நிருபர்கள் தேவை

சரிநிகர் பத்திரிகைக்கு நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் செய்தி நிருபர்கள் தேவை.

விரும்புபவர்கள் தமது சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட செய்திக்குறிப்பு ஒன்றுடன் பெப்பிரவரி 15ம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்

'சரிநிகர்'
இல. 4 ஜயரட்ன மாவத்தை,
திம்பிரிகஸ்யாய
கொழும்பு~5




## தவறான தகவல்

இலங்கைப் பாராளுமன்ற அரசியலில் (15) கட்டுரையில் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. த.வி.கூ. எத்தனையோ மோசமான செயல்களைச் செய்துள்ளது. இந்த யுஎன்பி எடுபிடியை நியமித்த பாவத்தை என்றுமே செய்யவில்லை. 1977 தேர்தலின் பின் ராஜதுரையும் கனகரத்தினமும் யு. என். பிக்கு தாவினார்கள். கனகரத்தினத்தின் சாவை அடுத்து யு.என்.பி அரசு ரங்கநாயகி பத்மநாதனை அத்தொகுதிக்கு நியமித்தது. பின்னர் மாவட்ட மந்திரிப்பதவியையும் வழங்கியது.

தமிழ்ப் பெண்களை இறந்தவர்களது இடத்திற்கு நியமிக்கும் யோசனை முதலில் வன்னியசிங்கம் 1959ல் இறந்த போது ஏற்பட்டது. அவரது மனைவியை கோப்பாய் தொகுதியில் போட்டியிடக் கேட்டார்கள். அவர் விரும்பவில்லை. திருகோணமலை உறுப்பினர் இராஜவரோதயம் 1963ல் இறந்தபின் திருமதி இராஜவரோதயத்தை அணுகினார்கள். அவரும் மறுத்துவிட்டார். இவரும் சரியான முடிவையே எடுத்தார் என்பது என் எண்ணம். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் கட்சி அரசியலில் முன்னணியில் நின்று உழைத்தவர். திருமதி கலா தம்பிமுத்து மட்டக்களப்பில் தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்கு மிகவும் பாடுபட்டவர். இன்னும் பல பெண்கள் தமிழரசுக்கட்சி, கூட்டணி அரசியல் மேடைகளில் பிரசாரம் செய்திருக்கிறார்கள். ஆயினும் தாழ்த்தப்பட்ட சாதியினைரையோ பெண்களையோ தேர்தலில் நிறுத்தித் தமிழர் பண்பாட்டுக்குத்துரோகம் செய்ய தமிழசுக்கட்சிக்கு மனம் வரவில்லை. 1977ல் முதல் முறையாக ஒரு தாழ்த்தப்பட்ட சாதியினரை நிறுத்தினார்கள். மூதவைக்கு மட்டும் ஒருவர் 1950களில் நியமனது என்னவோ உண்மைதான்.

சிங்களப் பெண் அரசியல்வாதிகளது பங்களிப்புடன் ஒப்பிடுகையில்,. தமிழர்களுக்குக் கிடைத்தது ஒரு ரங்கநாயகி என்பதை நினைக்கும் போது அழுகை தான் வரும்.

கட்டுரை ஆசிரியர் இது போல விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது. ஏனெனில் இம்மாதிரியான கட்டுரைகளை ஆதாரபூர்வமான ஆவணங்களாகக் கொண்டு பிற்காலத்தில் தவறுகளையும் பொய்களையுங் கூட உண்மைகளாகக் கூற இடமுண்டு.

**சிவசேகரம்**
**லண்டன்.**

## அவசரகாலச்சட்டத்தை எதிர்ப்பார்களா?

இன்று ஆயிரக்கணக்கான மலையக இளைஞர்கள் கொழும்பிலும் பிற இடங்களிலும் கைது செய்யப்பட்டு விசாரணை ஏதுமின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இது பற்றி இதுவரை மலையகத் தமிழ் தலைவர்கள் வாய்திறந்து ஒரு கண்டன வார்த்தையாவது அரசு மீது சுமத்தவில்லை. ஒவ்வொரு மாதமும் அரவசர காலச் சட்டத்தை ஆதரித்துப் பேசியும் வாக்களித்தும் வருகிறார்கள். இதே மலையக மக்கள் முன்னணியின் தலைவர்கள் பெ. சந்திரசேகரனும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செள. தொண்டமான் அவர்களும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் சேருவதற்கு முன்பு ஆறு அம்சக்கோரிக்கை ஒன்று முன்வைத்தார்கள். அதில் ஒன்றை மலையக இளைஞர்கள் காரணமின்றி கைதுசெய்தால் அரசாங்கத்திற்கு கொடுக்கும் ஆதரவை வாபஸ் வாங்கிக் கொள்வோம் என்பது. இதுவரை அவர்கள் வாய்மூடி மௌனிகளாகவே இருக்கிறார்கள். இன்று மலையக மக்களின் வாழ்வை விட மந்திரிப்பதவி பெரிதாகப் போய்விட்டது எமது தலைவர்களுக்கு. இவர்கள் இந்த நேரத்தில் மலையகத்திற்கு ஏதும் செய்யாமல் எல்லோரையும் கைது பண்ணின பிறகு மேடையில் நின்று கொக்கரிப்பதில் அர்த்தமில்லை. ஒரே ஒரு முறை மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவசர காலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கட்டும். தன் மானமுள்ள தமிழ்த் தலைவன் என்று தங்களைப் பறைசாற்றிக்கொண்டிருக்கும் எமது தலைவர்கள் இதையாவது செய்வார்களாக?

***எஸ். தங்கராஜா***
***மஸ்கெலியா.***

## தமிழர்களுக்கு........

சாங்கத்திடம் தங்களது கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். முஸ்லிம் காங்கிரசை முஸ்லிம்கள் தங்களது அரசியல் உரிமைகளுக்காகப் போராடவே ஆதரித்தார்கள். ஆகவே அதிகாரங்களை சிறுபான்மையினருக்குப் பகிர்ந்தளிக்க அரசாங்கத்திற்கு நெருக்குதல் கொடுக்கும் தருணமாக முஸ்லிம் காங்கிரஸ் இதனைக் கொள்ள வேண்டும்.

மாறாக அரசாங்கத்திற்கு ''நல்ல பிள்ளையாக'' நடக்க முற்படுவதும் தேசிய இனங்களின் அபிலாசைகளை மறுக்கும் அரசாங்கத்திற்கு முண்டு கொடுப்பவர்களாக இருப்பதும் முஸ்லிம்கள் தனித்த அதிகாரங்களை பெற்றுக்கொள்ள ஒரு போதும் வழியமைக்காது! பயங்கரவாதத்தை வீழ்த்தியதற்காக வரிக்கு வரி அரசாங்கத்தை வாழ்த்தும் முஸ்லிம் காங்கிரசின் தீவிரம் சிறுபான்மையினருக்கு அதிகாரங்களை வழங்கு! என்ற கோஷத்தில் காணப்படாதது என்னவோ போல் இருக்கிறது.

வரலாறு முஸ்லிம் காங்கிரஸ் என்ற வடிவத்தில் முஸ்லிம் சமூகத்தின் மீது பாரிய பொறுப்புகளை சுமத்தியுள்ளது. நாம் நமது பாத்திரம் உணர்ந்து செயற்படும் தருணத்தில் இருக்கிறோம், முயல் பிடிக்கப் போய் கழுதைபிடித்த கதையாக மாறிவிடக்கூடாது!

சந்திரிகா அரசு மீது இனப்பிரச்சினைக்கான தீர்வை அமுல்படுத்த முஸ்லிம் காங்கிரஸ் நிர்ப்பந்திக்க வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். இன்று நடப்பது மாறுபட்டதாகவே இருக்கிறது. சந்திரிகா அரசை நியாயப்படுத்துவதிலேயே முஸ்லிம் காங்கிரஸ் தனது காலத்தைக் கழிக்கிறது. முஸ்லிம் மாகாண கோரிக்கை அல்லது அதிகாரப்பகிர்வில் முஸ்லிம் காங்கிரசின் அரசியல் பேரம் என்ன என்பதை முஸ்லிம் காங்கிரஸ் உரத்துச் சொல்லத் தயங்கும் நிலை தொடர்கிறது. ஒரு கை தட்டினால் ஓசை வராது! இருகைகளும் சேர்ந்து தட்ட வேண்டும். தமிழர் அரசியல் தலைமைகள், முஸ்லிம் அரசியல் தலைமைகள் தங்களுடைய அரசியல் உரிமைகளுக்காக தனித்தனியாக போராடும் அதே வேளை; சிங்கள இனவாதத்திற்கு எதிரான போராட்டத்திலும்- சிறுபான்மையினருக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டுமென்ற முக்கியமான விடயங்களில்லும் தமிழ் அரசியல் தலைமைகளும் முஸ்லிம் அரசியல் தலைமைகளும் ஒன்றிணைந்து போராடுவதுதான் ஆரோக்கியமானது. அப்படியான பலமிக்க நிலைதான் சிங்கள இனவாதிகளுக்கு பயமுறுத்தலாக இருக்கக் கூடிய விடயமுமாகும். ''ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்தான்''.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

# திரிசங்கு சொர்க்கம்!

'தமிழ் மக்களின் தலைவிதியை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' இந்தப் புகழ் பெற்ற வாசகம் தமிழ் மக்களுக்கு ஒன்றும் புதிதல்ல. தலைவர் எஸ். ஜே.வி. செல்வநாயகம் அவர்களால் எப்போதோ சொல்லப்பட்ட இந்த வாசகம் இப்போது ஞாபகத்துக்கு வருவதை தவிர்க்க முடியவில்லை.

றிவிரச நடவடிக்கை காரணமாக தென்மராட்சிக்கு அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள வலிகாமம் மக்கள் படுகின்ற நாளாந்த அவஸ்தைகளைப் பற்றி கேள்விப்படுகின்ற ஒவ்வொருவர் மனதிலும் இப்போது இந்த வாசகம் வெவ்வேறு வடிவங்களில் தோன்றிக் கொண்டிருக்கின்றது. வடக்குக் கிழக்கு மக்கள், இந்த வாசகத்தை அவர் உதிர்த்த போது, தமது அரசியல் உரிமைகளை மட்டும் தான் இழந்திருந்தார்கள். இன்று அவர்கள் தமது அரசியல் உரிமைகளை மட்டுமல்ல, அடிப்படை ஜனநாயக உரிமைகளை, தமது சொத்து, சுகம், இருப்பிடம் எல்லாவற்றையும் இழந்துவிட்டுள்ளார்கள். 'இனி நமக்குளதெனும் கதி'யைக் கூட அவர்கள் இழந்தவிட்டார்களோ என்ற சந்தேகத்தை அரசாங்கத்தின் அறிக்கைகளும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளும் ஏற்படுத்துகின்றன.

யுத்தமும், அதனால் ஏற்படும் சகிக்கவொண்ணா நிலைமைகளும் மக்களை அகதிகளாக்குவதும், இருப்பிடங்களை விட்டு இடம் பெயர வைப்பதும், அண்மைக்கால யுத்த வரலாறுகளில் ஒன்றும் நடக்காதவைகளல்ல. ஆனால் ஒரு பிரதேசத்தின் மக்கள் முற்றுமுழுதாகவே அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறுவது என்பது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே வாய்த்திருக்கிற ஒரு 'வரப்பிரசாதம்'!

யுத்தத்திற்கு அஞ்சியோ, அல்லது ஒருசிலர் கூறுவதுபோல புலிகளின் மிரட்டலுக்கு அஞ்சியோ தமது வீடு வாசல்களை விட்டு வெளியேறிய மக்கள் இன்று நாளாந்த அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றிற்கும் வக்கற்றவர்களாகிப் போயுள்ளார்கள். உழைப்பு இல்லை, உண்ண உணவுக்கோ, உடுதுணிக்கோ பணம் இல்லை என்ற நிலையில், தெருவோரங்களிலும் மரங்களின் கீழும் தங்கியிருக்கும் அந்த மக்களுக்குள்ள ஆகவும் மோசமான விடயம் என்னவென்றால் அவர்கள் வெளியுலகுடன் தொடர்புகூட கொள்ள முடியாமல் இருப்பதுதான்.

நெருப்புக் காய்ச்சலினால் இறக்கும் வைத்தியர்கள், இரத்தத்தில் சீனிச்சத்தின் அளவைப் பரீட்சித்துப் பார்க்க முடியாமையால் நீரிழிவு நோய் இருக்கிறதா என அறிய முடியாத நோயாளிகள், சாதாரண தலைவலி மாத்திரை கூட கிடைக்காமல் தவிக்கும் மக்கள் என்று ஆரோக்கியம் குன்றிய ஒரு கூட்டமாக அவர்கள் உருமாறிக் கொண்டிருக்கின்றனர். ஆரோக்கியம் இப்போது உடலில் மட்டுமல்ல, மனநிலையிலும் குறைந்து கொண்டிருப்பதாக, மனநோயாளர்களது அதிகரிப்பு பற்றிய புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

இந்நிலையில் இங்கே சிவில் நிர்வாகம் தொடங்கிவிட்டது, உங்கள் பழைய இடங்களுக்குத் திரும்பி வாருங்கள் என்று அழைக்கிறது அரசாங்கம். அவர்கள் அங்கே திரும்பிப் போக வேண்டும் என்கிறார் ஜனாதிபதி. அரசாங்க கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் எஞ்சியுள்ளவர்கட்கு விசேட அடையாள அட்டைகளை வழங்கி (2000 பேருக்கு விஷேட அடையாள அட்டைகளை வழங்கி விட்டு திரும்பியுள்ளதாக கூறுகிறது ஆட்பதிவு திணைக்களம்), உணவு விநியோகத்தை நடாத்தத் தொடங்குவதன் மூலமாக திருப்தி காண முயல்கிறது அது. திரும்பி வரும் மக்களுக்கும் அவர்களது இளம் பிள்ளைகட்கும் பாதுகாப்பு உத்தரவாதம் என்ன என்பது பற்றிய மக்களின் அச்சத்தை அது சட்டை செய்வதாக தெரியவில்லை. பொட்டு வைத்த தமிழ் பெண்களையெல்லாம் தற்கொலைக் கொலையாளிகளாகவும், தமிழ் வாலிபர்களையெல்லாம் புலிகளாகவும் பார்க்கின்ற சிங்களம் மட்டுமே பேசுகின்ற இலங்கை இராணுவத்தின் பாதுகாப்புக்குட்பட்ட பிரதேசத்திற்கு எந்த நம்பிக்கையுடன் அந்த மக்கள் போக முடியும் என்ற பிரச்சினையையிட்டு யாரும் அலட்டிக் கொள்வதாக தெரியவில்லை. மறுபுறத்தில், அங்கே போகாதீர்கள். அரச படைகள் தமிழ் இனத்தின் வேரோடு அழிக்கவே வந்துள்ளன. கிளி நொச்சிப் பகுதியிலும் இன்னும் மேலேயும் சென்று குடியேறுங்கள் என்று அவர்களைக் குடியேற்றும் முயற்சியில் ஈடுபடுகிறது புலிகளின் இயக்கம். வடமராட்சி தென்மராட்சியை சேர்ந்த மக்களையும் அங்கிருந்து வெளியேறி வன்னிப்பகுதியை நோக்கி நகருமாறு அது வேண்டுகோள் விடுத்துள்ளது. தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், குடாநாட்டிற்கு வெளியே வாழத் தயாராக இருக்க வேண்டும் என்று புலிகள் கருதுகிறார்கள் போலத் தெரிகிறது.

ஆனால் இருதரப்பாருமே முக்கியமான விடயத்தை மறந்து விடுகிறார்கள். எந்த மக்களது அரசியல் உரிமையும் விடுதலையும் பெற்றுக் கொள்ளப்படுவது அவசியம் என்று இருதரப்பாரும் தத்தம் கோணங்களில் கூறுகிறார்களோ, அந்த மக்களது மனோநிலையை வியாதிக்குள்ளாக்குவதன் மூலமாக அதைப் பெற்றுவிட முடியாது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

நூறு நூற்ண்டுகளாக வாழ்ந்த மக்கள் தமது சொந்த நிலத்தை விட்டு இடம் பெயர்க்கப்படுவதென்பது, அதுவும் அவர்களது விடுதலையின் பெயரால் செய்யப்படுவது என்பது எந்தவிதத்திலும் பயன்மிக்க ஒன்றாக அமைய முடியாது. மக்கள் தமது விடுதலைக்காக தாம் செய்து கொண்ட ஒரு தெரிவு அல்ல இது. மாறாக, அவர்களது தலைமீது திணிக்கப்பட்டுள்ள ஒரு முடிவு. எனவே இந்த நிலை அரசியல் ரீதியாக இருதரப்பாருக்குமே வெற்றியை தரப்போவதில்லை. தற்காலிகமாக புலிகளை அம்பலப்படுத்த அல்லது தனிமைப்படுத்த அரசாங்கத்திற்கோ அல்லது அரசாங்கத்தின் இரக்கமற்ற தன்மையை அம்பலப்படுத்த புலிகளுக்கோ பயன்படுமே ஒழிய, நீண்ட காலத்தில் இருதரப்பாருக்கும் மாபெரும் தோல்வியை தரப்போகும் ஒரு அம்சமாகவே இது அமையும்.

வடக்கிலே இராணுவம் சிங்கக் கொடியை நாட்டியது அங்கே சமாதானத்தை அரசாங்கம் கொண்டு சென்றதற்கான குறியீடாக அல்ல, மாறாக ஆக்கிரமிப்பின் குறியீடாகவே உள்ளது. ஏனென்றால் சிங்கக் கொடி சிறுபான்மை தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கும் பௌத்த சிங்கள அரசின் சின்னமாகவே அங்குள்ள மக்கள் அறிவர். தமிழ் மக்களின் தேசிய உணர்வை மதிக்காத, சிங்கக் கொடியை முறித்தும் எரித்தும் வளர்ந்த தேசிய உணர்வை புரிந்து கொள்ளாத எந்த அரசாங்கமும், இந்த நாட்டின் சமாதானத்தை கட்டியெழுப்பிவிட முடியாது! அதேவேளை, மக்களது அடிப்படைத் தேவைகள் கூட இல்லாத போது அரசியல் உரிமைகள், ஜனநாயக உரிமைகள் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு விடும் என்ற உண்மையையும் மறந்துவிடக் கூடாது.

எனவே இன்றைய நிலை அரசாங்கத்துக்கும் சரி, புலிகளுக்கும் சரி எந்தவிதத்திலும் பயன்தரக்கூடியது அல்ல.

மக்களுக்கு அவர்களது வாழ்வின் மீதே வெறுப்பைத் தோற்றுவிக்கும் நிலைமை இது. இதை இவர்கள் எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

# லிங்கநகர்: தமிழ் மக்கள் வெளியேறும்படி இராணுவம் பணிப்பு!

திருகோணமலை லிங்கநகரை அண்டிய பகுதிகளில் குடியேறிய தமிழ் மக்களை வெளியேறும் படி இராணுவம் வற்புறுத்தி வருகிறது. வன்செயல்களால் பாதிக்கப்பட்டு உடமைகளை இழந்துத மக்களின் மீள் குடியேற்றமாக அமைந்த இப்பகுதியில் அமைந்துள்ள சுமார் 200 குடும்பங்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றன.

ஒலிபெருக்கி மூலம் அம்மக்களை வெளியேறுமாறு அறிவித்தல் செய்த இராணுவத்தினர் 2 நாட்கள் கழித்து இரவு நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மக்களை பயமுறுத்தியுமுள்ளனர்.

இந்த நிலம் இராணுவத்துக்குச் சொந்தமானது என்பது அவர்களது விவாதம். ஆனால் காணித் திணைக்கள அதிகாரிகளோ இது இராணுவத்திற்கு வழங்கப்படவில்லை என்கிறார்கள். குடியேறிய மக்களை பொறுத்த மட்டில் அவர்கள் குழம்பிப் போய் இருக்கிறார்கள்.

இந்தப் பகுதியில் ஒருசில வீடுகளுக்கு சென்ற புத்தபிக்கு ஒருவர் அந்தப்பகுதி தங்களுக்குச் சொந்தமானது என்றும் தமிழர்கள் வெளியேறி விட வேண்டும் என்றும் பயமுறுத்தியுள்ளனர். புத்தபிக்குடன் குண்டர்கள் சிலரும் துணையாக வந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள்.

**விவேகி**

# இஸ்ரேலிய விமானங்கள் வருகை!

தமிழ் மக்கள் மீதான பாரிய நடவடிக்கையின் ஒரு கட்டத்தை அரசு முடித்து விட்டிருக்கிற நிலையில் இவ்வருடத்தில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் பல நடத்தப்படவிருப்பதாக பாதுகாப்பு வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன என்ற போதும் இவற்றால் ஏற்பட இருக்கும் அழிவுகள் வெளித் தெரியாமல் இருப்பதற்காகவும் உலக நாடுகளின் அவதானத்திலிருந்து தப்புவதற்காகவும் இவ்இராணுவ நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் முடித்ததன் பின் கால இடைவெளி விட்டே நடத்தவும் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இவ்இராணுவ நடவடிக்கைகளுக்காக தற்பொழுது அதிகளவு ஆயுதங்கள் சீனா, செக்கோஸ்லாவாக்கியா, தென்னாபிரிக்கா, இஸ்ரவேல் ஆகிய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைவதால் கொழும்புத் துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் பலத்த காவலும், கண்காணிப்பும் போடப்பட்டுள்ளன. குறிப்பாக கோட்டை, கொச்சிக்கடை, மீன்கடை, கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், மட்டக்குளி போன்ற பகுதிகளில் அதிகளவு இரகசிய பொலிஸாரையும் படையினரையும் சேவையில் ஈடுபடுத்தியுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்திற்குள்ளே கடும் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக உள்ளே தொழில் புரியும் பலர் தெரிவிக்கின்றனர். ஜனவரி முதல் வாரத்தில் மட்டும் நான்கு கப்பல்கள் நிறைய ஆயுதங்கள் வந்திறங்கியதாகவும் தெரிகிறது.

அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டவற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பாதுகாப்பு துறையினர் கருதுபவை இரண்டு இஸ்ரேலிய விமானங்கள். அதில் ஒன்று கீபர்.("Keeper") வர்க்கத்தைச் சேர்ந்த விமானம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விமானத்திற்கு இலங்கை அரசாங்கம் ''சிங்கபெட்டியா'' (சிங்கக் குட்டி எனப் பெயரிட்டுள்ளது) இவ்விமானம் நிலத்திற்கு அடியில் உள்ள பங்கர்களிலும் கொங்கிறீட் கட்டிடங்களையும் இலகுவாக அழித்து நாசம் செய்யக்கூடிய வசதிகள் படைத்துள்ளது. இந்த விமானம் 20 mmபீரங்கி ரொக்கட்டுக்கள், மிசய்ல் என்பனவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இவ்வகையான 6 விமானங்களை அரசு கொள்வனவு செய்துள்ளது.

இதைவிட "Trone" ட்ரோன் வர்க்க விமானங்களும் இஸ்ரேலில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் எத்தனை விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்பது சரியாகத் தெரியவரவில்லை.

ஆனால் இவ்வகை விமானத்தையும் இலங்கை கொள்வனவு செய்யும் முதற்தடவை இதுவேயாகும்.

இவ்விமானத்தின் விஷேட அம்சம் யாதெனில் விமான ஓட்டிகள் இன்றி இதனை செலுத்தக்கூடிய வசதிகள் உள்ளமை. இதற்கு என்று கட்டுப்பாட்டு அறை ஒன்று இருந்தாலே போதுமானது. ஆகாயத்தில் பறந்து கொண்டே தேவையான இடங்களைப் புகைப்படங்களைப் படித்து கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பக் கூடிய வசதிகளும் கொண்ட இவ்விமானம் விடுதலைப் புலிகளின் இருப்பிடத்தை சரியாக இனம் காண அதிகம் பயன்படும் என பாதுகாப்புத் துறையினர் நம்புகின்றனர்.

சென்ற டிசம்பர் மாதம் கடைசிப் பகுதியில் விமானங்களின் சாகசங்களை அறிவதற்காக வவுனியா சென்றிருந்தார் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த. இவருடன் பாதுகாப்பு அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டிருந்திருந்தனர். விமானத்தில் பெறப்படும் புகைப்படத்தைப் பற்றிக் கூறுவதாக இருந்தால் அது புகைப்படக் கருவிக்கு அகப்படும் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதியில் செல்லும் மோட்டார் சைக்களின் தகடு இலக்கத்தைக் கூட தெளிவாகக் காட்டும் என இதில் கலந்து கொண்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துக் கொண்டார். இதைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டு அறை ஒரு கொள்கலன் அறை போன்றது. இக்கட்டுப்பாட்டு அறையில் இருந்து கொண்டே விமானம் எத்தனை அடி உயரத்தில் பறக்க வேண்டும், எந்தப் பகுதியை புகைப்படம் பிடிக்க வேண்டும் என்பனவற்றை திட்டமிடலாம். சென்றவருடம் மாத்திரம் இலங்கை விமானப்படைக்கு சொந்தமான ஆறு விமானங்களை இலங்கை அரசாங்கம் இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



Keeper

# அன்பான வாசகர்களுக்கு

அன்பான வாசகர்களுக்கு,

சரிநிகர் தொடர்பாக எழுந்துள்ள சில விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டி, மேர்ஜ் நிறுவனத்தின் உத்தியோக பூர்வ குறிக்கோள்களையம், சரிநிகர் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும் வாசகர்கள் முன் வைத்து அபிப்பிராயங்களைக் கோரியிருந்தோம். வாசகர்கள் அபிப்பிராயங்கள் வந்து சேர்ந்த வண்ணமுள்ளன. இவ்விதழிலும் அவற்றை மீளவும் பிரசுரிக்கிறோம். உங்கள் அபிப்பிராயங்களை எதிர்பார்க்கிறோம்.

பத்திரிகையை வெளியிடும் மேர்ஜ் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ குறிக்கோள்கள் வருமாறு:-

1. நாட்டிலுள்ள பல்வேறு இனங்களுக்கும், வெவ்வேறு மொழிபேசும் பிரிவினருக்கும் எல்லா உரிமைகளிலும் சமத்துவத்தை ஏற்படுத்தல்.
2. வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் காட்டப்படும் இனத்துவேசம் இனரீதியான அநீதிகள், பாகுபாடுகள் ஆகியவற்றை எதிர்த்தல்.
3. அரசாங்கத்தின் ஜனநாயக விரோத கொள்கைகளையும், நடவடிக்கைகளையும், சகல அடக்கு முறைச்சட்டங்களையும், பாதுப்புப் படையினரின் அடக்குமுறை நடவடிக்கைகளையும் இனங்களுக்கு மத்தியில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்துக்காக எதிர்த்தல்.
4. ஜனநாயக, மனித உரிமைகளையும் மனித சுதந்திரங்களையும், இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக ஆதரித்தல்.
5. தோட்டங்களிலும், ஏனைய பகுதிகளிலும் வாழும் மக்கள் உட்பட இந்நாட்டின் எல்லா மக்களினதும் முழுமையான, சுதந்திர பிரஜைகளுக்கான உரிமைகளை ஆதரித்தல்.
6. தொழில், கல்வி, குடியிருப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில் தோட்டத்தொழிலாளர்களுக்கும் ஏனையவர்களுக்கும் இனரீதியாக காட்டப்படும் பாகுபாட்டை எதிர்த்தல்.
7. இனங்களுக்கிடையில் நீதியையும், சமத்துவத்தையும், நிலைநாட்டும் போராட்டத்தில் எல்லா இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையில் ஐக்கியத்தை வளத்தல்.

இவையே மேர்ஜ் நிறுவனத்தின் குறிக்கோள்கள் ஆகும். இப்போது சரிநிகர் பற்றிய விமர்சனங்களுக்கு வருவோம்.

1. சரிநிகர் மேர்ஜ் இன் கொள்கைகளுக்கு முரணாக செயல்படுகிறது.
2. அரசாங்கத்தில் சமாதானத் தீர்வுப்பொதியை மேர்ஜ் ஏற்றிருக்கும் போது சரிநிகர் ஏற்கவில்லை.
3. அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை எதிர்த்து வருகிறது, ஒரு சமாதான ரீதியான தீர்வுக்கு எதிராக சரிநிகர் இயங்கி வருகிறது.
4. தென்னிலங்கையில் பரவலாக நடக்கும் இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளை இருட்டடிப்பு செய்து வருகிறது.
5. ஜனநாயகத்துக்காவும், சமாதானத்துகாகவும் பாடுபடும் தனிநபர்களை கிண்டலடிக்கும் பாணியில் எழுதிவருகிறது.
6. சரிநிகர், தமிழின வாதத்தை பரப்பும் விதத்தில் செயல்படுகிறது.
7. சரிநிகர் தமிழ் மக்களுக்கு புலிகளைத் தவிர வேறுவழியில்லை என்றுகூறி புலிகளின் தலைமையை நியாயப்படுத்தி வருகிறது, இதன் மூலம் புலிகளை நோக்கி மக்களைத்திரட்டி வருகிறது.
8. செய்திகளைத் தெரிவதில் 'திவயின' போன்ற பத்திரிகை கடைப்பிடிக்கும் அதே இனவாத முறைக்கு சமமான தமிழ் இனவாத சார்புநிலையை கடைப்பிடிக்கிறது.
9. மாற்றுக்கருத்துக்களை உதாசீனம் செய்து வருகிறது.
10. யாழ்ப்பாண வாதத்தை (Jaffna Mentality) அடிப்படையாகக் கொண்டது.

இவை தொடர்பாக உங்களது அபிப்பிராயத்தை எழுதுங்கள்.

இம்முறை உங்களது பணி சற்றுசிரமாமனது என்பதை நாம் அறிவோம். ஆயினும், சரிநிகரின் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு உங்கள் பதில்கள் மிகவும் அவசியமானவை.

உங்கள் கடிங்களை கூடிய விரைவில்

ஆசிரியர்,
சரிநிகர் இல. 4, ஜயரத்ன மாவத்தை,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு 5

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆசிரியர் பீடம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்